# கோவை. இளஞ்சேரன் கவிதைகள்









391

# கோவை. இளஞ்சேரன் கவிதைகள்

'கவிஞர்கோ' கோவை. இளஞ்சேரன்
[துணை இயக்குநர், பதிப்புத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்]

இயற்றிய கவிதைகள் 1, 2 தொகுதிகளின்
பிணைப்புப் பதிப்பு

கலைக்குறள்

உரிமை ஆசிரியர் பாலது

பதிப்புப் பதிவு

| | |
|---|---|
| நூல்: கோவை. இளஞ்சேரன் கவிதைகள் | பதிப்பு: தொகுதிகள் 1,2 பிணைப்புப் பதிப்பு - 1 |
| படைப்பு: 'கவிஞர்கோ' கோவை. இளஞ்சேரன் | பக்கங்கள்: 438 தாள்: முடித்தாள் $\frac{1}{8}$ [மாப் வித்தோ] |
| வெளியீடு: கலைக்குடில் வெளியீட்டகம், தஞ்சாவூர். | காலம்: தி.ஆ. 2018-மார்கழி திசம்பர் - 1987 |
| அச்சகம்: சிவகாமி அச்சகம், அண்ணாமலை நகர் ஓவியம்: திரு ப. கேசவன் | மேலுறை அச்சு: தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர். |

விலை உரூ. 40/-

வழங்குவோர்:

கலைக்குடில் வெளியீட்டகம்

20, மருத்துவக் கல்லூரிச் சாலை

தஞ்சாவூர் 613005

கோவை. இளஞ்சேரன் கவிதைகள்

# தோரண வாயில்

தோரணத்தில்:

1. அணிந்துரை
2. அணிந்துரை
3. பெருமக்கள் தூவிய பாராட்டு மலர்கள்
4. பொருளடக்கம்
5. கவிதை சுரப்பது ஏன்?
6. திறனாய்வு முன்னுரை

# அணிந்துரை

முனைவர் ச. அகத்தியலிங்கம்*

தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புத் துறைத் துணை இயக்குநர் 'கவிஞர்கோ' கோவை. இளஞ்சேரன் எழுதிய கோவை. இளஞ்சேரன் கவிதைகள்' என்ற கவிதை நூலைப் படித்து மகிழ்ந்தேன்.

நல்ல கவிதை உணர்வும், உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிகளும் பொங்கக் கவிதைகள் அமைந்திருப்பது எனக்குப் பெருமையைத் தருகிறது.

இதுபோன்றே பாடுபொருள்களும் சிறந்த பொருள் களாக அமைந்துள்ளன. 'தமிழா கேள்!', 'எவன் தமிழன்?' 'கேட்ட தாய்', 'பண்பு அடையாளச் சின்னம்' 'தைத்திங் கள்' முதலிய தலைப்பில் வரும் கவிதைகளில் காணப்படும் பாடுபொருள்கள் சிறந்து விளங்குகின்றன.

பாரதியைப் பற்றி நான் குறிப்பிடும்போது அவர் கவிதைகள் நம் உள்ளத்தைத் தொடுவதற்குக் காரணம் அவர் கையாளும் உத்திகள் மட்டுமல்ல, அவற்றில் காணப் படும் உணர்வுகள் மட்டுமல்ல, பாடுபொருள்களும் நம் சிந்தனைக்கு உகந்தனவாய் இருக்கின்றன எனக் குறிப் பிடுவேன்.

---

* துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

இதுபோன்றே கவிஞர் கோவை. இளஞ்சேரன் கவிதைகளில் காணப்படும் பாடுபொருள்களும் சிறந்து விளங்குகின்றன.

பாரதியைப் பற்றிக் குறிப்பிடும்போது,

**"நெஞ்சக் கூட்டை நெகிழ்த்து நிறைந்த**
**செஞ்சொற் கவியின் செங்கோல் வேந்தே"**
— என்று

தமது கவிதை வரிகளில் காட்டும் உணர்வு நெஞ்சைத் தொடுகிறது. இத்தகைய சிறப்பான கவிதைக் கூறுகளை இந்நூலில் பல இடங்களில் காண முடிகிறது.

இனிய எளிய தமிழில் இதயங் கவரும் வகையில் எழுதப்பட்டிருக்கும் இக்கவிதைகள் நிச்சயமாகத் தமிழ் உலகில் வரவேற்கப்படும் என நம்புகின்றேன்.

பல நூல்களை எழுதி வெற்றிபெற்ற இக்கவிஞரின் இக்கவிதை நூலையும் தமிழ் மக்கள் படித்து இன்புறுவார்களாக!

திரு கோவை. இளஞ்சேரன் மேலும் மேலும் இத்தகைய கவிதை நூல்கள் பல படைத்துத் தமிழுக்கு வளம் சேர்க்க என் இதயங்கனிந்த வாழ்த்துக்கள் உரியன.

**தமிழ்ப் பல்கலைக்கழகம்** **[ஒ-ம்] ச. அகத்தியலிங்கம்**
**தஞ்சாவூர்**

# அணிந்துரை

கவிஞர், முனைவர் வா. செ. குழந்தைசாமி*

'கவிஞர்கோ' கோவை இளஞ்சேரன் தமிழறிந்த புலவர்; யாப்பிலக்கணம் கற்ற கவிஞர்; தமிழ் மரபு வழி நிற்பவர். மரபுக் கவிதைஎழுதுபவர்கள் யாப்பிலக்கணம் தெரிந்தவர்களாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. தமிழ்க் கவிதைகளில் ஆழ்ந்த ஈடுபாடும், தமிழ்க் கவிதை உலகொடு நெருங்கிய தொடர்பும் உள்ளவர்கள், கவிதை உள்ளம் கொண்டவர்களானால் மரபுவழி நின்று சாவாத கவிதைகள் படைப்பது இயலும்.

மரபுக் கவிதை, புதுக்கவிதை எனக் கவிதைகளைப் பிரித்து, ஒரு பிரிவை மரபுக் கவிதை என்று கூறுவதே பொருத்தமற்ற செயலாகும். இது உரைநடையை இலக்கண உரைநடை, புதிய உரைநடை எனப் பிரிப்பது போலாகும். அறிவுலகில் நாம் ஈடுபடும் துறை எதுவாயினும் அதற்கு இலக்கணம் உண்டு. கவிதை, உரைநடை ஓவியம், சிற்பம், இசை, நடனம் எதுவாயினும் அதற்கு இலக்கணம் உண்டு. இந்த இலக்கணம்தான் மரபு. இலக்கணம் நாள்தோறும் வளர்வது; எனவே மாறுவது. மரபுகள் மாறுபவை. சங்ககாலத் தமிழ்க் கவிதைகளிலிருந்து பாரதியார், பாரதிதாசன் காலம் வரை பார்த்தால் தமிழ்க்கவிதை எண்ணற்ற உருவங்கள் எடுத்திருப்பதைக் காணலாம். அதன் உருவம் காலந்தோறும் மாறிவந்

---

* துணை வேந்தர், அண்ணா பல்கலைக் கழகம், சென்னை.

திருப்பதைக் காணலாம். ஏதோ நேற்றுத்தான் மாற்றம் ஏற்பட்டதென்பதில்லை. ஆனால், ஒரு வேறுபாட்டைக் குறிப்பிட வேண்டும். இந்த இரண்டாயிரம் ஆண்டு, காலப் பகுதியில் கவிதைகளில் புதிய மரபுகள் உருவாயின. ஆனால், புதுக்கவிதைகள் என்று இன்று கூறப்படுபவை பழைய மரபுகளின் கீழ் வருபவையல்ல என்பது மட்டு மன்று; அவை புதிய மரபுகளை உருவாக்குபவையுமல்ல. எனவே, அவை 'மரபில்லாத கவிதைகள்'. இந்த அணுகு முறையில்தான் 'கவிஞர்கோ' கோவை இளஞ்சேரனின் கவிதைகள் மரபுக் கவிதை வழியைச் சார்ந்தவை என்கி றோம். மற்றபடி கவிஞர் கோவை. இளஞ்சேரன் புதுமை அறியாதவரல்லர்; புதுமை படைக்காதவரல்லர்.

புலவர் கவிஞராக மலர்ந்த பான்மை நூல்தொறும் தெரிகிறது. இத்தொகுப்பிலுள்ள கவிதைகளைப் 'புலவர் கோவை இளஞ்சேரனின் கவிதைகள்', 'கவிஞர் கோவை. இளஞ்சேரனின் கவிதைகள்' என இருவகையாகப் பிரிக்க லாம். முதல் பிரிவில் வரக்கூடிய கவிதைகளில் அவற்றின் யாப்புவகையை ஆங்காங்கே குறிப்பிடுகிறார். இலக்கண ஆய்வுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டிய சொல்லாய்வுகள் பல கவிதைப் பொருள்களாக இடம் பெற்றிருக்கின்றன. பல கவிதைகள் இவ்வகையின.

இதேபோல பல நீதிகளை, அறிவுரைகளைக் கவிதை வடிவில் சொல்கிறார். பள்ளி நாற்பது, மாணவர் பத்து, நிறைப்பத்து முதலிய தலைப்புகளில் வருபவை இவ்வகை யைச் சேர்ந்தவை.

**"நகத்தைக் கடித்தல் நகைப்புக் குரித்தாம்**
**நகத்தின் அழுக்கொரு நஞ்சு"**

''நாடும் மொழியும் நமதிரு கண்களாம்,
ஏடும் பயில்வும் எழில்''

இவற்றைப்போலவே தனித் தமிழ், தமிழ்ப்பற்று, தமிழ்ப் பாதுகாப்பு போன்ற பொருள்கள் பற்றி, புரட்சிக் கவிஞரின் 'தமிழியக்கம்' கவிதை நூல்பாணியில் பல கவிதைகள் உள்ளன. சில பாடல்கள் கருத்து வேறுபாட்டின் அடிப்படையில் கண்டனங்களாக அமைந்தவை.

இனி, 'கவிஞர் கோவை இளஞ்சேரனின் பாக்'கட்கு வருவோம். பல தலைப்புகளில் உணர்ச்சியும் கருத்தாழமும் நிறைந்த கவிதைகளைப் படைத்துள்ளார்.

காதலும் வீரமும் காவியம் தோன்றிய காலத்திலிருந்து கவிதைப் பொருள்களாக இருந்துவருகின்றன. வீரம் பெரும்பாலும் போர்க்களப் பண்பாகவே இருந்து வந்தது. போர் இன்று போற்றப்படும் செயல் அன்று; புகழப்படும் செயலும் அன்று. காதல் காலமுள்ள வரை தொடரும் ஒன்று. 'கவிஞர்கோ' கோவை இளஞ்சேரனின் கதாநாயகர் ஓர் அற்புதப் பிறவி. அவர்,

''முல்லைக்கு மனமேற்றும் உடலர்;
முத்துக்கே ஒளியேற்றும் முறுவர்;
சொல்லுக்குச் சுவையேற்றும் குரலர்
செந்தமிழ்க்குச் சீரேற்றும் எழுத்தர்;
நெல்லுக்கு மணியேற்றும் உழைப்பர்;
நேர்மைக்கே அணியேற்றும் நினைப்பர்;
கல்லுக்கும் கலையேற்று பவர்என்
கற்போட்டந் தனில்அவரே கனிவர்.''

கவிதைத் தொகுப்பில் பெரும்பகுதி தமிழ்மொழி பற்றியது. தமிழினம் பற்றியது. பொதுவாகத் தமிழர்கள் மற்ற எந்த இனத்தையும் விடச் சற்று அதிகமாகவே பழம் பெருமை பேசும் இயல்புடையவர்களாகக் காட்சி தரு கிறார்கள். அதற்கான காரணம் இன்றைய நிலை பெரு மைப்படத்தக்கதாக இல்லாததுதானோ என்ற ஐயம் எழு கிறது. இதை உறுதிப்படுத்தும் வகையில்,

*"ஏட்டிலுள்ள தமிழரினால் எக்களித்த தென்னுள்ளம்*
*நாட்டிலுள்ள தமிழரினால் நாணமதே தோன்றிற்று."*

என்கிறார். பாரதி. கூறியது போல நாம் இன்று மறை வாகப் பழங்கதைகள் பேசவில்லை. மன்றமேறிப் பேசு கிறோம்; மன்றமெல்லாம் இதையே பேசுகிறோம்; நமது தாழ்வுக்கு நாம் பொறுப்பேற்காது யார் யாரையோ காரணமாக்கி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம்;

தமிழ்க் கவிதை உலகில் பாட்டாளியும், முதலாளியும் முக்கியமான பாடு பொருள்கள். புரட்சி வருவதாகவும், புது யுகம் மலர்வதாகவும் நமது கவிஞர்கள் பல நாள்க ளாக எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இடி யும் மின்னலும் எரிமலையும் நெருப்பும் எழுதுபவர் வார்த்தைகளில் இருக்கின்றன. அவர்கள் இதயத்தில் அப்படி எதுவும் இடம்பெற்றதற்கான உணர்வுகளைக் க்விதையில் காண இயலவில்லை. பேசும் பொருள் பற்றிய ஆழ்ந்த அறிவும், பேச்சில் உண்மையுமில்லாது காலத்துக் கேற்ற கோலம் பூண்டவர்களின் இலக்கியப் படைப் பாகவே பெரும்பாலும் இவை இருந்துவிட்டன. 'கவிஞர்கோ' கோவை. இளஞ்சேரன் அமைதியாக மே தினத்தின் அடிப்படையை, அது உலகுக்குத் தரும் செய் தியைக் கவிதையாக்குகிறார்.

"அடுப்பினிலே நெருப்பேற்ற வகையு மின்றி
அடிவயிற்றில் நெருப்பேற்றி அயரும் நாளில்
'அடுக்காது கொடுமை'யென அலறு கின்ற
அந்நாளில் மேநாளின் வாடை வீசும்!"

தமிழினத்தின் பண்டைய உயர்வு பற்றிப் பெருமையும், இன்றைய தாழ்வு பற்றி நாணமும் கொள்ளும் 'கவிஞர்கோ' எதிர்காலத்திற்குக் கல்வியும், அறிவியலும் இன்றியமையாதவை என்பதுணர்ந்து அக்கல்வியின் பயன் சமுதாயத்திற்குப் பரவலாகக் கிடைக்க வேண்டுமாயின் அது தாய்மொழியில்தான் இருக்க வேண்டுமென்பதை எண்ணி அறிஞர்கட்கு வேண்டுகோள் விடுக்கிறார்:

"நூல்களை இயற்றிட அறிவுளீர்
நூல்களில் புதியன இயற்றுவீர்!
நூல்களாய்ச் சிறுகதை, பெருங்கதை
நூற்பதை அளவொடு நிறுத்துவீர்!
நூல்களாய் அகநூல், அறிவுநூல்
நுண்கலை வானநூல், வாழ்வுநூல்
நூல்வர லாற்றுநூல், உழவுநூல்,
நுவலுவீர், தமிழ்மொழி ஒன்றினால்!"

எழுதப்படும் நூல்கள் பயனுடையதாகவும் இருக்க வேண்டும்.

"மதர்த்துள தமிழறி புலவரீர்!
மடைதிறந் தனையநும் அறிவினைப்
புதர்க்குளே பொதிந்தநன் மணியெனப்
புதைத்துமே வாழ்வதும் நாணமே!

இதற்கிது பொருளென, அன்றென
　　இடைமறுப் பெழுதியே நாளெலாம்
பதர்க்கென உழுவதை விட்டுநீர்
　　பயனுடைச் செயல்களே ஆற்றுவீர்!"

'கவிஞர்கோ'வின் தமிழ்ப்பற்றும், தமிழினப்பற்றும் ஆங்காங்கு கவிதைகள்தோறும் பரவி நிற்கின்றன. தமிழ் மொழி பற்றிய தலைப்புகள் வரும்பொழுது கவிஞர் உணர்ச்சிப் பிழம்பாக ஒளிர்கிறார்:

"நாடித் துடிப்பில் நடக்கும் தலைவீ! அகம்புறமாய்க்
கோடிச் சுவைகள் குவிக்கும் குமரீ! குலவிடுசீர்
நாடிப் புரந்தே நலந்தரும் அன்னாய்; தமிழமுதே!
பாடிக் களிக்கும் பரிவினன் பணிந்து மகிழ்ந்தனனே!"

பாரதி கவிதையில் மனத்தைப் பறிகொடுக்காத தமிழனில்லை. பறிகொடுக்காதவன் உணர்வில் தமிழனுமில்லை. 'உணர்ச்சியின் ஊற்றுக்கண்' என்று பாரதியைப் பாடும் இவரே அந்த ஊற்றுக்கண்ணாக மாறி விடுகிறார்:

"முனைகொள் உணர்வில் முகிழ்த்த இவ்வுரை
சுளையின் சாறு; சுடர்ப் பொன் வீறு;

* * *

ஊற்றுக் கண்கள் ஒன்றா, நூறா? ...
மாற்றறி யாத மதர்ப்பூற் றாயிரம்.

* * *

கவிதைத் தொழிலில் கடைந்த சிலைநீ.
செவிக்குச் செந்தமிழ்ச் செந்தேன் ஓடை;

சொல்லாற் றற்குச் சுனையின் ஊற்று;
பொல்லாங் கர்க்குப் போர்ப்புயற் காற்று.

*  *  *

தாய்த்தமிழ் உணர்ச்சியில் பூத்த புதுமலர்;
பாட்டுணர்ச் சியிலே பதித்தாய் உயிரை;
நாட்டுணர்ச் சிக்கோர் நாளத் தண்டு;

*  *  *

சாதித் திமிர்க்குச் சாட்டைச் சவுக்குநீ;
"பொய்மைச் சாத்திரம் புகுந்திடில் மக்கள்
பொய்யே யாகிப் புழுஎன மடிவர்"
"கோத்திரம் பொய்மைக் கூடை" என்றே
சாத்திரப் பொய்மை சாய்த்தசம் மட்டிநீ;

*  *  *

பாடல்ஒவ் வொன்றும் ஆடகப் பைம்பொன்;
நூல்ஒவ் வொன்றும் நூறுவை ரக்கல்.

*  *  *

எழுதுகோல் என்ன மின்னேற்று நாளமோ?
எழுத்தெலாம் மின்னலால் சுழித்த சுழிகளோ?"

என்று அடுக்கிக் கொண்டு போகிறார். உணர்ச்சிகள் ஊற்றாகச் சுரக்கவில்லை. அருவியாகக் கொட்டுகின்றன. தன்னை மறந்து பாடியவை. இன்னொருமுறை அவர் தாமே முயன்றாலும் எழுத இயலாதவை. ஏனெனில் இவை முயன்று எழுதப்பட்டனவல்ல. மூச்சுப்போல பிறந்து வார்த்தைகளாக, வரிகளாக உருப்பெற்றவை.

'அண்ணா'வுக்குப் பலபரிமானங்கள் உண்டு. சிந்தனையாளர்; பகுத்தறிவுவாதி; சிறுகதை எழுத்தாளர்; புதினப் படைப்பாளர்; நாடக ஆசிரியர்; தன்னேரிலாத-தமிழகம் முன்னர் கண்டிராத பேச்சாளர்.

இவை அனைவரும் அறிந்த ஒன்று. இவை கடந்த சில பண்புகளைக் 'கவிஞர்கோ' காண்கிறார். அவற்றை நாமும் ஒப்புகிறோம். ஆனால், கவிஞர் கோவை. இளஞ்சேரன் கொடுக்கும் கவிதை வடிவம் அழகிற்கு அழகு செய்தாற் போல அமைகிறது.

''அன்புவைத்து அரசியலில் வென்றார் காணேம்;
அருவெறுப்பை நகைச்சுவையால் கொன்றார் காணேம்;
பண்புவைத்துப் பகைநட்பாக் கொண்டார் காணேம்;
பணிவைவைத்துத் தலைமைகொண்டு பணித்தார் காணேம்;
ஒண்புகழைப் பலர்க்குவைத்தே ஒளிர்ந்தார் காணேம்;
ஒக்கநின்றே எளியவர்க்கும் ஒளிய வர்க்கும்
துன்புவைத்து மூச்சுவிட்டுத் துறந்தார் காணேம்;
தொலைநாட்கும் 'அண்ணா' என் றொருவர் காணேம்.''

'புலவர் கோவை இளஞ்சேரனின்' பாடல்கள், பண்டைய இலக்கண நூல்களை, நீதி நூல்களை நமக்கு நினைவூட்டுகின்றன. 'கவிஞர் இளஞ்சேரனின் கவிதைகள்' நம்மை இந்த நூற்றாண்டின் இரண்டாம் பகுதிக்கவிதை உலகிற்குக் கொண்டு வருகின்றன. இரண்டாயிரம் ஆண்டுத் தமிழ்க்கவிதைப் பாரம்பரியத்தைச் செய்யுள், கவிதை இரண்டையும் சேர்த்துப் படைக்கிறது 'கவிஞர் கோ' கோவை. இளஞ்சேரன் அவர்களின் கவிதைத் தொகுப்பு. தமிழ்ப் பற்றே உருவான தமிழ் மகன் தமிழ் அன்னைக்குப் படைத்திருக்கும் ஒரு காணிக்கை. தமிழ் அன்னையின் மனம் குளிரும்; தமிழகம் வரவேற்கும்.

கவிஞருக்கு நமது பாராட்டுகள்.

அண்ணா பல்கலைக்கழகம்,
சென்னை. [ஒ-ம்] வா. செ. குழந்தைசாமி

# பெருமக்கள் தூவிய பாராட்டு மலர்கள்

## புகழுடம்புச் சான்றோர்:

**அறிஞர் அண்ணா**

தமிழ்ச் சுவையுடன் கற்பனைச் செறிவு கலந்து நல்ல கவிதை வடிவெடுத்து மகிழ்விக்கிறது. வளர்க கவிதைத் திறம்! வாழ்க தமிழ் வளம்!

'பாவேந்தர்' **பாரதிதாசனார்**

**புலவர் இளஞ்சேரன்** இயற்றிய கவிதைகள் காதற்சுவை பயப்பன. நடை நன்று தமிழன்னை சார்பில் நன்றிகூறுகிறேன் **வாழ்க இளஞ்சேரன்!**

'மொழிஞாயிறு' **தேவநேயப் பாவாணர்**

எவன் தமிழன் என்றறிதல்
இல்லை யெனும் இக்கால்
எவன் தமிழன் என்றறிய
எண்ணின்—''எவன் தமிழன்''
என்னினிய **கோவை**
**இளஞ்சேரன்** பாடலை
இன்னினியே கண்டு தெளி!

'செந்தமிழ்க் காவலர்' **அ. சிதம்பரநாதனார்**

கவிதையில் அடுத்தடுத்துப் பலவித மெய்ப்பாடுகள் செவ்விதிற் புலப்படுகின்றன.

| | |
|---|---|
| பேராசிரியர் க. கோவிந்த ராசனார் | உணவிற்கு உப்பே; இலக்கியத்திற்கு நகைச்சுவையே. இச்சுவையினைக் **கோவை. இளஞ்சேரன்** அவர்கள் தன்மை யோடு, அளவறிந்து, அழகாகத் தம் கவிதையில் பயன்படுத்தியுள்ளார். |
| 'கற்கண்டு' தமிழ்வாணன் | ஆழ்ந்த கருத்தை எளிதாக எடுத்துச் சொல்லுவது எளிதன்று; பெரிய ஆற்றல். |
| 'பொன்னி' முருகு. சுப்பிர மணியன் | புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் கவிதை வளம் **கோவை. இளஞ்சேரனிடம்** முகிழ்க்கக் காண்கிறேன். நறுக்குத் தெறித்தாற்போன்ற தமிழ்ச் சொற்கள் கொண்ட கவிதைகள். |
| மருத்துவர், புலவர் ப. மு. சொக்க லிங்கனார் | என்னரும் ஆசான் ஏற்றக் கவிதைகள்<br>பொன்னெனப் பொலியும்;<br>பொருட்டிறம் மலியும்; பண்ணென<br>இசைக்கும், பழந்தமிழ் புதுக்கும்;<br>தண்ணெனக் குளிரும், தண்டமிழ்க் கரணே. |
| மயிலை சிவ. முத்து | **கோவை. இளஞ்சேரன்** கோத்தளித்த பாமாலை<br>தேவைநம் மாணவர்தம் சிந்தனைக்கே. |

## புகழ்நடும் செம்மலார்

| | |
|---|---|
| 'கலைஞர்' மு. கருணாநிதி | நகைச்சுவை நல்லதோர் கொள்கை பரப்பும் கருவி. அதனைக் கவிதையிலே கையாளுதல் **கவிஞர் கோவை. இளஞ் சேரனின்** திறமைக்கோர் எடுத்துக்காட்டு. |

| | |
|---|---|
| பேராசிரியர் **க. அன்பழகன்** | இயற்கை எழுப்பும் உணர்ச்சி வடிவம் கவிதை. இளஞ்சேரன் தீட்டுகின்ற கவிதைகள் இயற்கைக்கே எழில் சேர்க்கும் கலை விருந்து. |
| தவத்திரு குன்றக்குடி அடிகளார் | எளிமையும் இனிமையும் நிறைந்த கவிதைகள் ஆழமான கருத்துக்களும் நிறைந்த கவிதைகளாக இருப்பது பாராட்டத் தக்கது. |
| 'நாவலர்' இரா. நெடுஞ்செழியன் | அரிய, இனிய, எளிய, சிறந்த கவிதைகளைப் பொழிவதில் வல்லவர் **கோவை. இளஞ்சேரன்** அவர்கள் ஆவர் என்பதை நாடு நன்கு அறியும். அவருடைய கவிதைகளில் கவர்ச்சி உண்டு; சுவை உண்டு; இன்பம் உண்டு. |
| 'பன்மொழிப் புலவர்' **கா. அப்பாத்துரையார்** | வளஞ்சிறக்கும் தமிழேட்டின்<br>தரங்குறைக்கும் உரைஆய்வுக்<br>களங்கிளர்ந்த கைதவரை<br>**இளஞ்சேரர்** எதிர்த்தெழுந்தார்;<br>விளங்குபுகழ் மெய்யுரைகள்,<br>மெய்விளக்கும் ஆய்வுரைகள்,<br>தளங்காண இனமலர்ச்சி<br>தழைக்குமினித் தமிழகத்தே. |
| 'முத்தமிழ்க் காவலர்' கி. ஆ. பெ. **விசுவநாதம்** | அன்பர் **கோவை. இளஞ்சேரனது** இத் தமிழ்க் கவிதைகள் தாழ்ந்துள்ள இன்றைய தமிழகத்தை – தமிழினத்தைத் தட்டி எழுப்பும் ஆற்றல் படைத்தவை. |

'சிலம்புச் செல்வர்' ம.பொ.சிவஞானம் — **கவிஞர் இளஞ்சேரன்** தன் பெயராலும் புலமையாலும் இளங்கோவடிகளின் வாரிசாக விளங்குகிறார்.

'திருக்குறளார்' வீ. முனிசாமி — கவிஞர் **கோவை. இளஞ்சேரனார்** உலக அநுபவம் நிறைந்தவர். புலவர் வரிசையில் தனிச்சிறப்புக்குரியவர். அவர் து கவிதைகளை ஆர்வத்துடன் பன்முறை படித்தேன்; பாடிப் படித்தேன். நகைச் சுவை போலக் காட்டி நல்ல உண்மைகளை இடித்துக் காட்டுகிறார்.

'கவியோகி' சுத்தானந்த பாரதி — அகமுகக் காதலின் சுவைமிகக் கூட்டி அமுதத் தமிழிற் குழைத்தநற் கவிதை.

'வாகீசகலாநிதி' கி. வா. சகந்நாதன் —

புதிய படைப்பைத் தந்துள்ளான்,
புலமைத் திறத்தால் தமிழென்னும்
நிதியைப் போற்றும் கோவைஇளஞ்
சேரன் எனும்பேர் நிறைந்தவனே.

கவித்திருமதி சௌந்தரா கைலாசம் —

கல்லும் மெழுகாய்க் கரைந்தோட-தமிழ்க்
கவிதை பாடும் **இளஞ்சேரன்**
சொல்லின் திறத்தை என்னென்பேன்-
அதில்
சொக்கி மயங்கி நிற்கின்றேன்.

அகிலன் — சுவையுள்ள இரண்டு நிலையிலும் சுவையற்றதாகக் காட்டுவது **கோவை. இளஞ்சேரன்** கவிதையில் புதுமை.

| | |
|---|---|
| 'காதல்' **அரு. இராமநாதன்** | இமைகுவித்து இளமைக் கனவை இன்புறக் காணச்செய்யும் கவிதைகள் சுவை குவிக்கும் பழக்கடையில் சுளையாய் நிற்கின்றன. |
| குழந்தைக் கவிஞர்' **அழ. வள்ளியப்பா** | நற்கருத்துக்களை நன்முறையில் எடுத்துக் கூறும் ஆற்றல் மிக்க **கவிஞர் கோவை. இளஞ்சேரனார்** என்பதை அறிந்து மகிழ்ந்தேன். அவரது கவிதைகள் இன்பம் தந்தன; என்னைத் தூண்டின. |
| தமிழறிஞர் **மு. இரா. பெருமாள்** | **புலவர் கோவை. இளஞ்சேரனார்** சிறந்த இலக்கண இலக்கிய அறிவுடையவர். செந்தமிழ்க் கவிதைகளை இயற்றும் ஆற்றலர்; பயிற்சியர். |
| 'பெரியார்நெறி' **ந. இராமநாதன்** | கவிதைகள் செஞ்சொற்களால் அமைந்துள்ளன. தமிழர் வாழ்வு துருப்பிடித்துதிர்ந்த இரும்பெனவும் நோய்க்கிருமிகளால்துளைக்கப்பட்ட எலும்பெனவும் உள்ள நிலையைக் **கவிஞர்கோ கோவை. இளஞ்சேரனார் தம்** கவிதையால் படம் பிடித்துக்காட்டுகிறார். |
| 'சத்தியகங்கை' **பகீரதன்** | **கவிஞர் இளஞ்சேரன்** கவிதையால் மக்களின் அறிவுக் கண்களைத் திறந்துவிடுகிறார். |
| புலவர் **இரா. இராசு** | கவிஞர்கோ நற்கவிதை கற்கண்டுக்கட்டி.<br>புவியினர் போற்றுவர் நன்கு. |
| புலவர் **'மதி'** | **இளஞ்சேர னார்பாடல்** இன்றமிழ்க்குக் காப்பு;<br>வளஞ்சேர் இலக்கியத் தோப்பு. |

# பொருளடக்கம்

## தோரணவாயில்

பக்கம்

அணிந்துரைகள்

முனைவர் ச. அகத்திலியங்கம்,
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர். [5]

கவிஞர், முனைவர் வா. செ. குழந்தைசாமி,
துணைவேந்தர், அண்ணா பல்கலைக் கழகம், [7]
சென்னை

பாராட்டு மலர்கள்

புகழுடம்புச் சான்றோர்
புகழ் நடும் செம்மலார் [15]

கவிதை சுரப்பது ஏன்?

'கவிஞர்கோ' கோவை. இளஞ்சேரன் [22]

திறனாய்வு முன்னுரை

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்,
முதல்வர், யாதவர் கல்லூரி,
மதுரை. [25]

## கவிதை

பக்கம்

1. மலரினும் மெல்லிது 1
2. ஒருதலையான் இன்னாது 41
3. கட்டளைக் கல் 57
4. தன் நெஞ்சு அறிவது 105
5. மணல் கேணி 137
6. நவில்தொறும் நூல் நயம் 167
7. சொல்லின் நடை 205
8. வினை வேறு சொல் வேறு 247
9. நீர் இன்றி அமையாது உலகு 267
10. கடன் அறி காட்சியவர் 287

## இணைப்பு

1. இடம் சுட்டல் 357
2. பொருள் அகர நிரல் 363
3. 'கவிஞர்கோ' வரலாற்றுக் குறிப்பு 366
4. சுவைத் தொடர்கள் 377
5. சுடர்ச் சொற்கள் 392
6. பிழை—திருத்தம் 399
நன்றி, வாழ்த்து

# கவிதை சுரப்பது ஏன்?

'கவிஞர்கோ' கோவை. இளஞ்சேரன்*

உள்ளம் சுரப்பது கவிதை; உணர்வு வடிப்பது கவிதை. சுரப்புக்கு ஊற்றுக்கண் மன ஊறல் - அதன் வழி எழும் மன எழுச்சி.

இயற்கையின் படைப்புகள் உள்ளத்தைக் குளிர்விக்கின்றன; வாழ்வியல் தழுவல்களால் உள்ளம் சிலிர்க்கிறது; உலகியல் நடப்புகள் உள்ளத்தைக் கெல்லுகின்றன. இவற்றால் எழும் உணர்வைக் கவிஞனால் தேக்கிக் கொள்ள முடியாது. ஆனால், அவ்வுணர்வு தன் போக்கில் கொப்புளிக்கக்கூடாது. எழும் உணர்வை அறிவு தழுவ வேண்டும். அறிவு தழுவாது வெளிப்படும் உணர்வு தலைக் கயிறு இல்லாத தனி மாடு. அறிவு தழுவிய அவ்வெளிப்பாடு ஓசைக்கட்டுடன் இணைந்து கவிதையாகச் சுரக்கிறது. இது திட்ட மிட்ட முயற்சியின் விளைச்சல் அன்று.

> ''இவை முயன்று எழுதப்பட்டனவல்ல. மூச்சுப் போலப் பிறந்து வார்த்தைகளாக - வரிகளாக வெளிப்பட்டவை''

-என்று கவிஞர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் இந்நூல் அணிந்துரையில் குறித்திருப்பது உணர்ந்து எழுதிய உண்மை.

---

*துணை இயக்குநர், பதிப்புத் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

இவ்வகையில் பிறந்தனவே இந்நூலாக உருவாகியுள் ளன. என் வாழ்வின் நிகழ்ச்சிகளே கவிதைப் பிறப்பிற்கு; வேர் என்பதை 'இந்நூல் இணைப்பு 1- இடம் சுட்டல்' சொல்லும். எழுதப்படாமல் கவியரங்குகளில் பொழியப் பட்ட கவிதைகள் பின்னர் ஒலிப்பதிவிலிருந்தோ, நினைவுப்பதிவிலிருந்தோ எழுத்துருப்பெற்றவையும் இடம் பெற்றுள்ளன.

மலர்களுக்கு வேண்டியோர்க்காக உருவானவையும் கருத்திற்குத் தொகுப்பிட்டுக் கவிதைகளாகக் கனிந்தவை கள். அவை சில உள.

'கோவை இளஞ்சேரன் கவிதைகள்' முதற்பதிப்பு 1963 -ஆம் ஆண்டில் வெளிவந்தது. ஆர்வ வரவேற்புடன் ஆறு திங்கட்குள் பரவிற்று. பின்னர்ப் பிறந்தவை இணைந்த பதிப்பாக இது பிணைப்புப் பதிப்பாகிறது.

நூலமைப்பும் பாடலமைப்பும் யாப்புக் குறிப்பும் முகமை, இணைப்புகளும் கூடிய இத்தொகுப்பு, கவிதைப் பரப்பில் இஃதொரு புதுமைப் பதிவு என்பதைக் கணீர்க் குரலில் பேசும். அனைவகை யாப்பிலும் கவிதைகளைச் சுவைக்கலாம். சில வகை ஓசைப் பாக்களையும் பாடிப் படிக்கலாம். ஒரு நெடிலடி ஆசிரிய விருத்தம் [பாடல் 454] ஒரு புத்தமைப்பு.

திருக்குறளை அடியொற்றிய தலைப்புகள், 81 பொருள்களின் தொடர்கள், அவற்றில் பொதிந்துள்ள கருத்துக்கள் என் உள்ளத்தின் மறுபதிவுகள்.

'தன் நெஞ்சு அறிவது' என்னும் தலைப்பிலுள்ள 60 பாடல்கள் என் வாழ்வுப் பட்டறிவின் படப்பிடிப்பு;

பொதுவில் வாழ்வியலை அடையாளங் காட்டும். இவை ஓர்ந்து உணரத் தக்கவை' என்பேன்.

'பாக்களில் பூக்களை வைத்தால்' [பக்கம். 274] கவிதைக் களத்தில் ஓர் ஆய்வுப் பூங்கா. மொழிக் கருத்துக் கள் என் எஃகுக் கருத்துக்கள். கவிதை நாடியில் பகுத் தறிவு தான் குருதியோட்டம்; தமிழுணர்வு தான் நாளம்

'கடன் அறி காட்சியவர்' [பக். 287] தலைப்பில் புகழுடம்பெய்திய சான்றோர் பதினைவர், அன்னார் புகழுடம்பு எய்திய கால வரிசையில் மனங்குவித்துப் போற்றப்பட்டுள்ளனர்.

**கவிஞர் வா. செ. குழந்தைசாமி** அவர்களது அணிந் துரை இந்நூலின் வைர அணி. **முனைவர் ச. அகத்திய லிங்கனார்** அணிந்துரை மாணிக்க அறிமுகம். முனைவர் **மு. தமிழ்க்குடிமகனார்** 'திறனாய்வு முன்னுரை' கவிதைப் பேழையைத் திறக்கும் பொன் திறவுகோல். உண்மை கூறிய இப்பெருந்தகை நண்பர்கட்கு மூச்சுக்குமேலும் முழுக் கடப்பாடுடையேன்.

'தான் பெற்ற உணர்வுப் பயன்களை வையத்தார் பெறவேண்டும்; ஊறிய கருத்துக்களை உணர்த்தாமல் விடக் கூடாது; தமிழ் தலைகீழாகக் கூடாது; தமிழினம் மட்டுமன்று, மாந்தரினமும் பண்பில் திகழ வேண்டும்' என்பனவற்றிற்காகவே இக்கவிதைகள் சுரந்தன.

[ஒ-ம்.] **கோவை. இளஞ்சேரன்**

'கலைக்குடில்'
20, மருத்துவக் கல்லூரிச் சாலை,
தஞ்சாவூர்.

# திறனாய்வு முன்னுரை

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்*

## நூல் அமைப்பு

சிறந்த கவிஞர் எனும் முத்திரையோடு திகழும் 'கவிஞர்கோ' இளஞ்சேரன் தமது பழைய கவிதைகளையும் புதிய கவிதைகளோடு சேர்த்துப் பிணைத்துத் தொகுத்துள்ளார். அறுநூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள். 'ஒருவர் பாடிய உதிரித் தொகுப்பு' எனும் வரிசையில் அடங்கும் இந்த நூல் பெரிய தொகுப்புத்தான். இந்த அளவுக்கு மிகப்பெரிய தொகுப்பை வெளியிட்டவர்கள் கடந்த காலத்தில் ஓரிருவரே ஆவர்.

நூலின் பகுப்புகட்கென்று தலைப்புக் கொடுத்து அதற்குப் பொருத்தமான குறளைத் தந்திருப்பது மட்டுமன்றிக் குறளுக்குப் பொருத்தமான விளக்கங்களை அளிக்கும் முறையிலும் பல கவிதைகளை அமைத்துள்ளார்; இயற்றியுள்ளார்.

''கண்ணுள்ளார் காத லவராக -
நெஞ்சத்தார் காத லவராக ''த் தலைவி

நடந்துகொண்ட பாங்கு கதையாக விரிகின்றது.

---

*முதல்வர்,
யாதவர் கல்லூரி, மதுரை.

"இருநோக்கு இவளுண்கண் உள்ளது"

"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை" - எனும் குறட் பாக்களுக்கு இனிய முறையில் விளக்கம் தரப்பெற் றுள்ளது.

**யாப்பு வடிவங்கள்**

யாப்பின் எல்லா வடிவங்களையும் கையாண்டுள் ளார். வடிவத்தை முன்னிறுத்துவது 'மரபுக் கவிதை' என்பதை மெய்ப்பிப்பதுபோல் இத்தொகுப்பு விளங்கு கின்றது. 'மாணவர் பத்து' அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. 'நெடுநல்வாடை' அம்போதரங்க ஒத் தாழிசைக் கலிப்பாவில் அமைந்துள்ளது. அதையே நல்ல தமிழில் 'நீர்த்திரை ஒத்தாழிசை' என்று குறிப் பிட்டுள்ளார். கலிப்பாக்களை இக்காலக் கவிஞர்கள் எவரும் விரும்பிப் பாடுவதில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

'உண்பதற்குச் சோறு தின்பதற்குத் தம்பலம்' எனும் தலைப்பில் இரண்டு புதுமைகள் உள்ளன. கவிதை உட்பட எல்லாவகையான யாப்புகளையும் கையாண்டுள் ளமை ஒன்று; மரபுக் கவிதையைச் சோறாகவும், புதுக் கவிதையைத் தம்பலமாகவும் காட்டுவது மற்றொன்று. புதுக்கவிதையை இவர் வெறுக்கவில்லை. ஆனால், புதுக் கவிதையாளர்களின் வரையிறந்த கொட்டங்களை இவர் ஏற்கவில்லை. அதனால்தான் மேற்கண்ட தலைப்பையும் தந்துள்ளார்.

புதுக்கவிதை எழுதும்போதும் மரபின் ஆட்சியே வலுவாக நிற்கிறது.

"குமரி இதழிலே குங்குமப் பூச்சாய்க்
குமரன் நெஞ்சைக் குத்திக் குடைந்தது"
(பாடல் 401)

புதுக்கவிதையை 'உரைவீச்சு' என்றும் | 'கவிதை போலில்லாக் கவிதை' என்றும் 'மணிக் கவிதை' என்றும் பலர் பல பெயர்களில் அழைக்கின்றனர். இவர் சிலம்பில் உள்ள 'உரைப்பாட்டுமடையின் மறுபதிப்பு' என்கிறார்.

**உணர்வு அழுத்தம்**

'கவிஞர்கோ' மிகச் சிறந்த உணர்வுடையவர். அதனால் தான் இவரது கவிதைகள் ஆற்றல்மிகு உணர்ச்சிகளின் வெளிப்பாடாக அமைந்துள்ளன (Spontaneous overflow of powerful feelings). உணர்வு அழுத்தம் இருப்பதால்தான் போலும் 'ஊற்றுணர்வு' எனும் சொல்லைப் படைத்து அதனை அடிக்கடி பயன்படுத்த நேர்கின்றது.

"ஊற்றுணர்வைக் காதல் என"(1) உரைக்கின்றார்.
"உணர்ச்சிப் பெருக்கின் ஊற்றுக் கண்ணே" (580)
"உணர்வார் காண்பார் உணர்வின் ஊற்றை" (580)

காதல் உணர்வு வயப்படாத கவிஞர் எவரும் இருக்க முடியாது. இளங்கோவும் திருத்தக்க தேவரும் தூய துறவு வாழ்வினராயினும் காதல் உணர்வைப் பாடுவதில் பின்னிற்க வில்லையே. இந்த நிலையில் கவிஞர் இளஞ் சேரன் விட்டுக் கொடுப்பாரா? மலரினும் மெல்லிய அந்தக் காமத்தில் - காதலின் நுட்பந்தனை அழகுபடக் கூறுகிறார்.

காதல், வெள்ளமெனப் பெருக்கெடுதது்க் கவிஞரை உருட்டிப் புரட்டி எடுத்துவிடுகிறது. வெள்ளத்தில் திக்கு

முக்காடினாலும் உள்ளத்தில் உவப்புச் சேர்க்கும் காதலில் தான் எத்தனை மகிழ்ச்சி!

"உன்னைத் தழுவிடிலோ"-எனப் பாரதி பாடிவிட்டு மயங்குகிறானல்லவா? இதோ கவிஞர் இளஞ்சேரனும்,

"அவள் முயக்கம் உவமையற்று மயக்கும்"[6] -என்கிறார். கவிஞர் கொஞ்சம் அளவுக்கதிகமாகவே மயங்கி விட்டார். அந்த மயக்கத்தில் - 'கிறுக்கில் உளறு மொழி' பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

தலைவி தோழியிடம் கூறுகிறாள்:
"சிற்றிடையில் ஆடைதனில் கச்சில் போட்ட
சுருக்கவிழ்க்க அத்தானைச் சூழ்ந்து சென்று
வெற்றிடையில் விளையாடி மகிழ்ந்தாள் என்று
விளம்பியவள் துயர்தீர்க்க விரைந்து போடி! (63)

**உவமை, உருவகம்**

பொதுவாக எந்தக் கவிஞரும் புதுப்புது உவமைகளாலும் உருவகங்களாலும் தங்கள் சிறப்பை வெளிப்படுத்துவதுண்டு. கவிஞரும் அவ்வகையில் சிறப்பு உவமைகளைக் கையாளுகிறார்.

பெண்களின் கூந்தலுக்கு எவற்றையெல்லாமோ உவமை சொல்லிவிட்டோம்; நெற்றிக்கும் அப்படித்தான். ஆனால், நம் கவிஞர் புதுமை படைக்கிறார்:

"உருவார்ந்த பனம்பழம்உன் கூந்தற்கட்டாம்;
உள்வளைந்த பூவன் அன்றோ உன்றன்நெற்றி"
(246)

- என்கிறார்.

"தன்விரலைத் தான்இயக்கத் தெரியா மூடன்
தோய் இன்ப யாழ்இயக்க வல்லான் கொல்லோ?"
(124)

இது போன்ற பல உவமைகளைக் காண முடிகிறது. உருவகமாக எழுதுவதிலும் கவிஞர் பின்னடையவில்லை.

"திருக்குறளின் அறத்துப்பால் நெற்றி;
திகழ்கின்ற பொருட்பாலோர் மூக்காம்;
உருக்குகின்ற காமப்பால் விழிகள்"-என்று (11)

அடுக்குவதிலிருந்து,

"வெள்ளைத்தாள் புதுப்பானை; விழைவே
வெண்ணெய்;
விளைகருத்தே கற்கண்டாம்; அணிகள் பாகாம்;
எண்ணியநல் எழுத்தரிசி; சொல்லே சோறாம்"
(357)

-என்று கவிதைப் பொங்கல் படைப்பது வரை உருவக மயந்தான். வாழிய கவிஞர்தம் திறம்!

சில கதைகளை விரிவாக்கினால் அவை குறுங்காப்பிய மாகவே விளங்கும். கவிஞர் கவனம் செலுத்தினால் பல காப்பியங்களை உருவாக்கலாம். தமிழுக்கு அத்தகைய வரவு வாய்க்கட்டும்.

## சொல் ஆய்வும் ஆட்சியும்

கவிஞர்தம் உரைநடை நூல்களிலும் தம் சொல் ஆராய்ச்சித்திறனை வெளிப்படுத்தியுள்ளார். கவிதையிலும் அததகைய சொலலாராய்ச்சியில் ஈடுபடத் தவறவில்லை.

'ஆர்கலி, புணரி, பரவை, வாரி, வேலை, ஆழி, முந்நீர், நரலை, உவரி' - எனும் சொற்கள் கடலைக் குறிக்கும் சிறப்பினை ஒவ்வொரு வரியில் (383) விளக்கி விடுகிறார். இது போன்ற இடங்கள் வரும் போது கவிதைத் தன்மை குறைந்து வருவதும் உண்டு. ஆனால், தம் ஆற்றலால் அந்தக் குறை தோன்றாமல் ஒளிவிடுகிறார். "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பதனை மனத்திற் கொண்டு மிகத் தெளிவாக விளக்கி விடுகிறார்.

எந்த ஒரு கவிஞனும் அவனது சொல்லாட்சித்திறத்தால் (Poetie Dictions) நிமிர்ந்து நிற்பான்.

"முல்லைக்கு மணமேற்றும் உடலர்;
முத்துக்கே ஒளியேற்றும் முறுவர்;
சொல்லுக்குச் சுவையேற்றும் குரலர்" (10)

முறுவல் - முறுவலிப்பு – முறுவலர் என்பவையெல்லாம் உள்ளடங்குமாறு 'முறுவர்' எனும் சொல் அமைந்து விடுகின்றது.

**நயம்**

நயம் தோய்ந்து நிற்கும் கவிதைகளை வாரி வழங்கியுள்ளார் கவிஞர். இரவு நேரத்தில் ஏற்படும் அச்சப் பகுதிகளை அடுக்கிக் காட்டினாலும் 'இரவும் இனிக்கும் சிலபேர்க்கு என்கிறார்:

"சரிக்கட்டி வாராத கூலி வாங்கச்
சழக்கர்க்குப் பகலில் எல்லாம்
தறிக்கட்டை போல்உழைத்தார்" (28)

தலைசாய்க்க

வாய்ப்பான இரவு —

“குறிகாட்டி அறைக்குள்ளே அவள் அழைக்கும்”(30) இரவு - என்று அக இனிப்பு, புற இனிப்பு ஆகிய இரண்டையும் காட்டுகின்றார்.

தென்றலொடு பேசிக்கொண்டிருக்கிறார் கவிஞர். பல்வேறு வேலைகள் இருப்பதாகச் சொல்லி விடை பெறப் போகும் தென்றல்,

‘கோழிகூவ எழுந்துபோய் நாளெல்லாம் உழைத்து விட்டு இரவில் குடிசைவந்து கூழ்குடித்துத் தலைசாயப் போகும் பாட்டாளியைப் பார்க்கப் போவ’தாகத்தென்றல் கூறியதுமே கவிஞர்,

“நடைவேண்டாம், நேரம் போகும்;
வாழியஎன் தென்றலன்பே, ஓட்டமாய்ப்போ”

145

வான்வழியே பறந்தே போ”

- என்று விரட்டுவது எவ்வளவு நயமாக உள்ளது!

‘பள்ளி நாற்பது’ எனும் பகுதி ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனியே அச்சிட்டு வழங்கப்படவேண்டியது. மாணவர்களோடு அன்றாடம் பழகி வருபவன் எனும் முறையில் அவர்களில் சிலர் குளிக்காமலும் தலையில் எண்ணெய் தடவாமலும், தலைசீவாமலும், அப்படியே சீவினாலும் அதையும் கலைத்து விட்டுக் கொண்டும் வருகின்ற காட்சியைக் காண்கின்றேன் ‘கவிஞர்கோ’ இதைக் கூர்ந்து கவனித்துள்ளார்.

"எண்ணெய் தடவி எழில்பெறச் சீவிடின்
எண்ணமும் எய்தும் எழில்"
"ஒட்டடைக் கம்பதை ஒக்குமே எண்ணெயைத்
தொட்டிட்டுச் சீவாத் தலை" (262, 263)

**நகைச்சுவை**

கவிஞர்கோ நல்ல நகைச்சுவையாளர். பாரதி, பாரதிதாசன் போன்றவர்கள் எத்தனையோ இடங்களில் நகைச்சுவை தோன்றப் பாடியுள்ளனர். 'கவிஞர்கோ' இளஞ்சேரனிடம் இத்தகைய தன்மை சிறப்பாக அமைந்துள்ளது:

"எள்மலர்தான் மூக்காகும்"
-எனக் கூறப்பட்டதை மறுத்து,
"மூக்குப் பொடியதை முங்குவதும் - அஃதே
முதிர்ந்த தேனெனத் தொங்குவதும்" (78)
-என்று கிண்டல் செய்கிறார்.

'பிழை ஒரு கொலை' எனும் தலைப்பின்கீழ் 'எம் பெருமான் - எமபெருமான்' ஆகி நிற்பதைச் சுவைபடப் பாடுகிறார். 'ஆடாதழை' மருந்துக்குப் பயன்படும் என்று எழுத முனைந்தவன் 'ஆடாதலை' என்று எழுதி விட்டதால் ஒருவன் ஆற்றங்கரையில் அமர்ந்து ஆடாமல் அசையாமல் மந்திரம் ஓதியவன் தலையைக் கொய்து நாற்பத்தெண் பங்காக்கி உண்டுவிட்டான். இதை ஒரு நகைச்சுவைக் கதையாகவே வழங்கியுள்ளார் கவிஞர்

**கருத்துவளம்**

இயல்பாகவே நல்வாழ்வும், தெளிவான பார்வையும்

உடையவர்களது கவிதைகளில் கருத்து வளம் சிறந்து நிற்கும். 'கவிஞர்கோ' இளஞ்சேரன் அவ்வகையில் சிறந்து நிற்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

"மாந்தனின் முதன்மொழி தேன்தமிழ் மொழியே" (382) என்கிறார். உலக மொழிகள் அனைத்தும் ஒரு மூலத்திலிருந்தே கவைத்திருக்க வேண்டும் என்று உலக மொழிநூலறிஞர் மாக்சுமுல்லர் குறிப்பிட்டார். அந்த 'மூல மொழியோடு தமிழ் நெருங்கிய தொடர்புடையது' என்று தம் ஆய்வு முடிவை வெளிப்படுத்தினார் கால்டுவெல். பாவாணரோ, அந்த 'மூல மொழியே தமிழ்தான்' என்பதைத் தம் 'முதல் தாய் மொழி' எனும் நூலில் மெய்ப்பிக்கின்றார். கவிஞர்கள் பொதுவாக இவ்வளவு ஆழந்த கருத்துகளை யெல்லாம் தம் கவிதைகளில் கொண்டு வருவதில்லை. இவ்வகையில் 'கவிஞர்கோ' இளஞ்சேரன் தனித்துநிற்கிறார்.

மொழியைப் பேசியவர்—பேணியவர் மாந்தரே என்பதன் வாயிலாக,

"ஆதிசிவன் பெற்றுவிட்டான்—என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றொரு
வேதியன்"

-என்று பாரதி கூறிய கருத்தினை மறுத்தும் விடுகிறார்.

"பார்ப்பான் என்றவர்படிறெலாம் பாடினாய்"(580)

-என்று நுட்பமாகத் தெரிவிக்கிறார்.

பாவேந்தரைப் பாடும்போது,

"சாதி அரக்கி சமயக் கிறுக்கனொடு
காதற் பாணையில் கட்டிக் கிடந்தனள்" (633)

-என்று சுட்டிப்பாடும் கருத்து மிக அருமையாக அமைந்துள்ளது.

சில கவிதைகளை நாடகப் பாங்கிலேயே அமைத்துள்ளார். அதனாலேயே உரையாடல் முறையில்யாப்பை அமைத்துக்கொள்கிறார்.

தங்கட்குரிய புலமைச் செல்வத்தை வைத்துக்கொண்டு வெட்டி வேலை பார்க்கும் புலவர்கட்கு அறிவுரை சொல்வது அழகாக உள்ளது:

"இதற்கிது பொருளென அன்றென
இடைமறுப் பெழுதியே நாளெலாம்
பதர்க்கென உழுவதை விட்டுநீர்
பயனுடைச் செயல்களே ஆற்றுவீர்" (374)

-என்கிறார்.

**தனித்தமிழ்**

கவிஞர்கள் தாம் பல சொற்களைப் புதுவதாகப் புனைந்து உலகிற்களிப்பவர்கள். கவிஞர் இளஞ்சேரன் தனித்தமிழ் உணர்வுடையவர்; தனித்தமிழ்த் தந்தைக்குப் படிமம் நிறுவியவர். எனவே, 'அஞ்சல் ஊழியர், நாட்காட்டி' முதலிய சொற்கள் கவிதைக்குள் பொருத்தமாக வந்து விழுகின்றன.

தனித்தமிழில் ஈடுபாடுகொண்ட 'கவிஞர்கோ' தம் கவிதைகளை நல்ல தமிழில் தந்திருப்பது பெருமைக்குரியது. கலப்படமே இல்லாத தனித்தமிழில் பெருஞ்சித்திரனார், ம. இலெ. தங்கப்பா போன்றவர்கள் சிறப்பான படைப்புகளைத் தந்துள்ளனர். அந்த வகையில் 'கவிஞர்கோ' இளஞ்சேரனும் சிறந்து நிற்கிறார்.

'தாக்கீது. வேட்டம், பட்டா' போன்ற ஒன்றிரண்டு சொற்கள் மட்டும் வருகின்றன. அவற்றையும் களைந்து விடலாம்'

## புதுமையும் புரட்சியும்

இவருடைய கவிதைகளில் புதுமைகள் பல உள. புரட்சியும் உள்ளது. துணிந்து கருத்துகளை முன் வைக்கிறார். உரையாசிரியர்கள் செய்த தவறுகளைச் சுட்டும் போது 'களஞ்சியத்தில் கறையான்கள்'- என்கிறார்.

'சொல்லாட்டமும் பொருளூட்டமும்' எனும் தலைப்பில் அமைந்த கவிதை இவரது புலமைக்குச் சான்று எனலாம்.

சில கவிதை வரிகளில் முரண்சுவை அமைந்து சிறப்பதைக் காண்கிறோம்:

"கன்னியில்லாச் சோலையிலே தென்றலுமோர்
குளிரோ? கன்னியவள் அணைத்திருந்தால் தென்றலுமோர்
குளிரோ?" (42)

கவிஞர்கள் எவ்வளவுதான் குமுகாயச் சூழல்களை மறந்து கற்பனை உலகில் உலவினாலும் காலத்தாக்கம் என்பது அவர்களையும் தீண்டத்தான் செய்கின்றது. காதல் உரையாடலில் கூட நம்பி நங்கையைப் பார்த்து,

"பெண்ணொன்றும் ஆணொன்றும் பெற்றுக்
கொண்டோம்;
பின்னொன்று வேண்டாம்நாம் பேணிக் கொள்வோம்"
(397)

என்கிறான். இது குடும்பக் கட்டுப்பாட்டுக் கோட்பாடு மட்டுமன்றி அரசின் கொள்கையாகவும் விளங்குகிறது. ஆனால், இவரது இந்த வரியுங்கூட இப்போது மாறிப் போய் விட்டது.

ஒன்றே பெறுவீர்; ஒளிமயமாய் வாழ்வீர்' எனும் அரசு விளம்பரங்கள் 'கவிஞர் கோ' கண்ணில் பட்டிருக்கும் என்று கருதுகின்றேன். வெகுவிரைவில் 'பெறாதே' என்று தடை செய்தாலும் வியப்பில்லை.

மொழிக்கொலை செய்பவர்களைக் கடுமையாகச் சாடுகிறார். அவர்களைக் 'கழுத்தறுப்புக்காரர்'என்கிறார். மேலும்,

"பேச்சிற்குத் தாந்தமிழர்
பிறப்பிற்குத் தமிழரெனப் பிறங்கக் காணோம்'
என்கிறார். (189)

'கழுத்தறுபுக்காரர்' என்பதில் மக்கள் தமிழ் நடமாடுவதைக் காண்கிறோம்.

"கடுக்காய்கொ டுத்திட்டுக்
காதுகுத்திக் குழிபறித்துத் தூற்றி நிற்பார்"
(217)

என்பதிலும் பழகு தமிழ் பயின்று வருகின்றது. 'கீழறுப்பு' எனும் சொல்லாட்சியும் இடம் பெறுகிறது'.

இந்தியா பாக்கித்தான் படைகளுடன் பொருத போது இந்திய வெற்றியைப் பாராட்டிக் 'கவிஞர்கோ' பாடிய பாடலும் இத் தொகுப்பில் உள்ளது.

இலங்கையில் இன்று இந்தியப் படையின் செயலைக் கண்டுவரும் கவிஞர் அப் பாராட்டை ஏற்பாரா? அவர் உணர்வை நான் அறிவேன். வேறு பாடல் பாடிக் கொண்டிருப்பார்.

## குறைகள் சில

கவிதைத் திறனாய்வு எனும் முறையில் என் கண்ணில் பட்ட குறைகளையும் குறித்தாக வேண்டும்.

அருஞ்சொற்கள் பல பயின்று வருகின்றன. 'நேடினான், நேடிடுக, பணைத்து, கன்னாத, தெய்ப்பில்லா, தெற்றியில், முற்கியும், செயிற்றி, வெயிற்றி, துயிற்றி முதலிய சொற்கள் பெரும்புலமை பெற்றவர்க்கேயன்றி மற்றவர்க்குப் புலனாக மாட்டா. இந்நிலையில் கவிதையோட்டம் தடைப்பட்டு விடுகிறது என்பது குறையே. 'எளிய பதங்களை' நாடிய பாரதி, 'எளிய நடையில் தமிழ்நூல்' எழுத நினைத்த பாரதிதாசனைக் கவிஞர் உணராதவர் அல்லர்.

பாரதிதாசனைப் பற்றிய பாடலில் 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்று வருகின்றது. இது ஒரு திரைப்படத்தில் நேர்ந்த தவறு. 'தமிழுக்கு அமுதென்று பேர்'' என்றுதான் இருக்கவேண்டும். 'கவிஞர் கோ' பழைய பதிப்பை நோக்கினால் தெரியும்.

## குமுகாயச் சீர்திருத்தம்

கவிஞர் குமுகாயச் சீர்திருத்தச் சிந்தனை உடையவர். மக்கள் தன்மானத்தை இழக்க இசையாதவர்களாகவும்,

பகுத்தறிவு நோக்கினராகவும், இனமான உணர்வுடைய வர்களாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

இன்றைய நிலைஎன்ன என்பதையும் இவர் மறக்க வில்லை.

> "ஊட்டுமுடைத் தமிழ்ப்பண்பே ஊனமுற்று
> நாடோறும்
> வாட்டமுறல் காண்கின்றோம்" (118) - என்றும்

இன்னும் பலவகையிலும் தமிழர் உற்றுள்ள தலைக்குனிவு, களைப் படம்பிடிக்கிறார்.

பகுத்தறிவின் சிறப்பினை மிக அருமையாக எடுத்துச் சொல்கிறார் குமுகாயச் சீர்திருத்தக் கருத்துகளை வாரி வழங்குகிறார்.

> "ஆள்பிடித்துக் கால்பிடித்தே
> அண்டங்காக்கை பிடித்தே அடம்பிடித்து
> வால்பிடித்து வளம்பிடிக்க
> வலைபிடிப்பார் பல்லோராய் வளர்தல்
> கண்டேம்" (214)

-என்று வெளிப்படையாகவே சொல்லிவிடுகிறார்.

> "எதுவரையில் இவை செலுமோ?
> என்னமுடி வைத்தருமோ; எல்லை
> காணேம்" (231)

-என்று தம் ஏக்கத்தையும் வெளிப்படுத்துகிறார்.

> "நல்லவர்கள் நெஞ்சுவக்க
> நாடாளக் காணும் நாள் நல்ல நாளாம் (239)

- என்பதுதான் இவர் கனவு. இது கனவுதானா என்பதை நாம் தான் முடிவு செய்ய வேண்டும்.

தெளிவு

கவிஞரைப் பொறுத்தமட்டில் இவரது கொள்கைகள் தெளிவானவை.

> 'துள்ளியெழும் புலமையுடன் துணிவுடைய சொல்லாற்றல் துணையாய்க் கொண்டவர்'; 'இல்லத்து விழவெல்லாம் இனத்தமிழர் தமைக் கொண்டே வெல்லத்துத் தமிழ் சொல்லிச் செய்வித்தல் தமிழர் கடன்'

(608)-என்று வற்புறுத்துபவர்.
இன்னும் எத்தனையோ சொல்லலாம்.

நூலை முழுமையாகப் படிக்கவிருக்கும் சுவைஞர்களுக்காக அவற்றை விட்டுவைக்கிறேன்.

பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டை, கண்ணதாசன் போல இன்று நாம் எழுதும் கவிதைகள் எல்லாம் தமிழ் மக்களைத் சுண்டி இழுக்கவில்லை. அன்று அவர்கள் மட்டும் தனித்து நின்றதுதான் காரணமா? இன்று நாம் 600 இற்கு மேற்பட்ட கவிஞர்களுக்கிடையில் - கூட்டத்துக் கிடையில் நின்று கூவுவதால் குழப்பமாகி விட்டதா? அனைவரும் சேர்ந்து பாடுவதால் கூக்குரலாகி விட்டதா? அல்லது வரவர நம்தமிழ் மக்களுக்கு மரத்துப் போய்விட்டதா? எனக்கென்னவோ கவிதைகள், கட்டுரைகளால் எல்லாம் நம் மக்கள் திருந்துவார்கள் என்று கருத முடியவில்லை.

ஒருவர் பதவியிலிருக்கும்போது ஓகோ என்று புகழ்ந்து பாடும் கவிஞர்கள் அவர் பதவி இழந்ததும் பதவியில் இருப்போரை நோக்கித் தாவி விடுவது நம் நாட்டின் நிலைமை. இந்தப் போக்குடைய போலிக் கவிஞர்கள் ஒரு புறம்.

'நாங்கள் எச்சில் துப்பினால் எதிரிகள் அதில் மூழ்கி விடுவர்'; 'நாங்கள் மூச்சுவிட்டால் பகைவர்கள் முற்றாகக் கவிழ்ந்து போவர்'-என்றெல்லாம் வெற்றுணர்ச்சியைக் கிளப்பி விட்டு விட்டு விழுந்து படுக்கும் கவிஞர்கள் ஒரு புறம்.

இவர்களுக்கிடையில் சொல்லும் செயலும் ஒன்றாய் கவிதையும வாழ்வும் ஒன்றாய், மாறாத உள்ளத்துடன் இயங்கும் ஒரு கவிஞரின் படைப்புகளைப் படிப்பதே ஒரு 'மறுமலர்ச்சி தான். 'கவிஞர்கோ' கோவை. இளஞ் சேரனின் உள்ளத்தில் உண்மையொளி இருக்கிறது. அது சொல்லில் தெரிகிறது.

வளமான இந்தக் கவிதைகள் வாழட்டும்;
வருங்காலத் தமிழனுக்காவது வாளாகட்டும்.

மதுரை
12-12-87

மு. தமிழ்க்குடிமகன்



'கவிஞர்கோ' கோவை. இளஞ்சேரன்



மூன்றரை ஆண்டு முறுவல்
ஈன்றெழுக் களித்தாய் மகளே!
தோன்றிய என் கலை வல்லியே,
ஏன்றுகொள் என்கவி மலரே!

— கோவை. இளஞ்சேரன்

# கோவை. இளஞ்சேரன் கவிதைகள்

## கவிதை

லைக்குழல்
வெளியீடு

கவிதையின் மணிமுடிகள்:

1. மலரினும் மெல்லிது
2. ஒருதலையான் இன்னாது
3. கட்டளைக் கல்
4. தன் நெஞ்சு அறிவது
5. மணல் கேணி
6. நவில்தொறும் நூல்நயம்
7. சொல்லின் நடை
8. வினைவேறு சொல்வேறு
9. நீர் இன்றி அமையாது உலகு
10. கடன்அறி காட்சியவர்

கோவை இளஞ்சேரன் கவிதைகள்

# மலரினும் மெல்லிது



*[1]மென்மைஎனில் மலரே, [2]அதன்
தன்மைமிகும் காமம்நலம்.
பெண்மை, அது மென்மைமலர்;
வன்மைகிளர் ஆண்மை, அது

பெண்மைதனை மேவுங்கலை.
மென்மை, தனி மென்மை; அதன்
தன்மைசிலர் தோய்ந்தோர்எனும்
உண்மைதரும் திருவள்ளுவம்:

''மலரினும் மெல்லிது காமம்; சிலரதன்
செவ்வி தலைப்படு வார்''

[குறள்: 1289]

## மெல்லிய மலர்கள்:

அவன் உணர்வில் அவள் - 1.

அவள் உணர்வில் அவன் - 2.

அவளுக்கென்ன? - 3.

கண்ணல்ல! - 4.

முறையோ சொல்லாய்! - 5.

விதையில்லாக் கனி - 6.

இனிக்கும் இரவு - 7.

கசக்கும் காலை - 8.

அன்னைக்குத் தெரியுமடி, போடி! - 9.

அமுதமொரு சுவையோ? - 10.

இளமையெனும் பொல்லாய்! - 11.

அந்த ஒலி - 12.

அச்ச நோய் - 13.

தவழும் தெய்வம் - 14.

........................................

முன்பக்கம்: * இக்குறியீட்டெண்களின் விளக்கம்
பின்னிணைப்பு 1-இல் தொடரும்.

# அவன் உணர்வில் அவள்

உள்ளுணர்வில் அன்பதனை திறந்த
    ஊற்றுணர்வைக் 'காதல்'என உரைத்தால்
எள்ளளவும் அதிற்குறைவே இல்லா
    ஏந்திழையாள் என்னுளத்தே இன்பப்
புள்ளிவைத்துக் கோலமிட்டாள்; அவள்,நான்
    பூச்சூட மாலையிடும் பூவை;
வெள்ளமென எனையணைப்பாள்; காதல்
    வெள்ளோட்டந் தனில்,அவளே வெல்வாள். 1

பெண்மையிலே சித்திரையின் நிலவு;
    பெறும்எனக்கோ பத்தரைமாற் றுயர்வே;
உண்மையிலே முத்திரைகொள் அழகே;
    உறும்எனக்கோ புத்துணர்ச்சி உறவு;
தன்மையிலே தமிழ்மரபுத் தலைவி;
    தனைஎனக்கே தத்துவைத்த துணைவி;
நுண்மையிலே புத்தகம்;என் நினைவாம்
    நீரோட்டந் தனில்,அவளே நிறைவாள். 2

முத்தோடு பவளத்தைக் கலந்து,
முழுநிலவின் பனிநீரைப் பெய்து,
நத்துமலர் மென்மையதைத் தூவி,
நறும்பொன்னின் உருக்கதனில் பிசைந்த
வித்தகமாம் சாந்ததனில் வடித்த
வியன்சிலையில் தென்றலதை ஊதி
முத்திரையாய் உலவவிட்ட உயிர், என்
மூச்சோட்டந் தனில்,அவளாய் இழையும்.

3

ஆவின்பால் ஆடைமேல் நீல
அழகுவேர் இழையோட, நடுவில்
பூவின்தேன் கருநாவற் கனியில்
பூசிவிட்ட கவர்ச்சிக்கல் நெகிழப்
பாவின்பால் வடித்தெடுத்த தமிழைப்
பாடுகின்ற இரண்டிமைகள் நடிக்கும்
ஓவியத்தின் உயிர்க்கண்கள் கொண்டென்
உயிரோட்டந் தனில்,அவளாய் ஊர்வாள்.

4

கண்ணிமைப்பே காதலிசைத் தாளம்
    கருங்கூந்தல் கனவில்வலை போடும்;
புன்னகையோ புகுந்துடலைப் புதுக்கும்;
    பொன்னுடலம் உள்ளமதில் மிதக்கும்;
பொன்னகைகள் உடல்மெருகில் தாவும்;
    பொறுக்காத இடைஎனையே கூவும்;
துண்ணுணர்வாய்ச் சுண்டிவிட்டு, நாடித்
    துடிப்போட்டந் தனில்,அவளே துடிப்பாள். 5

அவள்மூச்சில் அன்பிழைந்தே உலவும்;
    அவள்பேச்சில் இசைத்தமிழே அவிழும்;
அவள்பார்வை இன்பப்புல் லரிப்பாம்;
    அவள்ஆர்வம் இனியஅர வணைப்பாம்;
அவள்இயக்கம் என்னுயிரை இயக்கும்;
    அவள்முயக்கம் உவமையற்று மயக்கும்;
அவள்என்றே ஏன்பிரிக்க வேண்டும்?
    அன்போட்டந் தனில்,யனே ஆனாள். 6

[அறுசீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# அவள் உணர்வில் அவன்

பகுத்தறிவில் பண்பமைய, உணர்வுப்
பரிவதனைக் 'காதல்'எனப் பகர்ந்தால்
மிகுத்துரைத்த தாகாது; மிளிரும்
மிடுக்குடையார் என்னுயிரில் பள்ளி
வகுப்பமைத்து முதற்பாடம் வகுத்து
வழிநடத்தி மணவறைசேர்த் தென்னை
அகத்துறைக்கோர் காப்பியமாய்ப் படைத்தென்
அன்பூற்றந் தனில்,அவரே அமர்வார்.
7

ஆண்மையிலே கொற்றவனின் கூர்வேல்;
அஃதெனக்கோ குற்றால நீர்வாள்;
கேண்மையிலே சுட்டாலும் சங்கு;
கேள்எனக்கோ முற்றாத நுங்கு;
பான்மையிலே சொற்றவறாத் தமிழர்;
பாரில்எனைப் பற்றவந்த தலைவர்!
மேன்மையிலே தனிச்செம்மல்; காதல்
மெருகோட்டந் தனில்,அவரே மிளிர்வார்.
8

வயிரத்தூள் சந்தனத்தில் பிசைந்து,
வாகைமலர் இழையெடுத்துக் கலந்து,
வயல்வளத்தை வாகாக விதைத்து,
வகைவகையாம் ஐம்பொன்னும் வகுத்து,
வெயிற்சூட்டில் வார்த்தவார்ப் படத்தை
வெல்வேலால் கடைந்தெடுத்த வடிவில்
இயற்றமிழை இயக்கிவிட்ட உயிர்,என்
எழிலோட்டந் தனில்,அவராய் இழையும். 9

முல்லைக்கு மணமேற்றும் உடலர்;
முத்துக்கே ஒளியேற்றும் முறுவர்;
சொல்லுக்குச் சுவையேற்றும் குரலர்
செந்தமிழ்க்குச் சீரேற்றும் எழுத்தர்;
நெல்லுக்கு மணியேற்றும் உழைப்பர்;
நேர்மைக்கே அணியேற்றும் நினைப்பர்;
கல்லுக்கும் கலையேற்று பவர்,என்
கற்போட்டந் தனில்,அவரே கனிவர். 10

திருக்குறளின் அறத்துப்பால் நெற்றி;
திகழ்கின்ற பொருட்பாலோர் மூக்காம் ;
உருக்குகின்ற காமப்பால் விழிகள்;
உதடிதழ்கள் என்வாய்க்கே உறவு;
நறுக்கிவிட்ட மீசைஎன் றன் புருவம்;
நலமார்பெண் பள்ளியறை அமளி:
முறுக்கிவிட்ட உடல்சிற்பம்; வாழ்வின்
முழுவோட்டந் தனில்,அவரே முதல்வர்.

11

அவர்மூச்சில் அறிவோட்டம் அலரும்;
அவர்பேச்சில் பண்போட்டம் அவிழும்;
அவர்பார்வை மின்னோட்டக் கவர்ச்சி;
அவர்ஆர்வம் வாழ்வோட்டப் புகழாம்;
அவர்இயக்கம் என்னுயிரை இயக்கும்;
அவர்அணைப்போ அம்மம்ம! அம்மோ
அவர்என்றே இனிப்பிரிக்க மாட்டேன்!
அன்போட்டந் தனில்,யானே ஆனார்.

12

[அறுசீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# அவளுக்கென்ன?

அண்ணாநம் கொல்லையிலே கனிந்து வீழ்ந்த
அழகமைந்த மாங்கனிகள் இரண்டில் ஒன்றைத்
திண்ணையில்நீ நிற்குங்கால் கொணர்ந்து தந்தேன்;
தேன்ஊறுங் கனியதைநீ தடவிப் பார்த்தே
உண்ணுவதற் குதடமுத்திக் கடிக்கும் போதில்
உனைவிழுங்க முன்வீட்டில் உற்றுப் பார்த்த
கண்ணழகி எதற்கண்ணா பெருமூச் சிட்டாள்?
கனிஅதனை நீசுவைத்தால் அவளுக் கென்ன? 13

எதற்கடிநீ கேட்கின்றாய் என்றே என்னை
எற்றுதற்கு வாராதே: அன்றோர் மாலை
புதர்க்குள்ளே மலர்ந்திருந்த மலரில் ஒன்றைப்
பறித்தோடி வந்துனக்குக் கொடுத்து நின்றேன்:
மதர்க்கின்ற மணமதைநீ மோந்து நிற்க,
மருட்சிகொண் டெதிர்வீட்டில் நின்ற பெண்ணாள்,
எதற்கண்ணா இதழ்அதுக்கிப் பெருமூச் சிட்டாள்?
எழில்மலரை நீமோந்தால் அவளுக் கென்ன? 14

தலைசீவி உடைதிருத்திக் கல்லூ ரிக்குத்
தக்கதொரு போதினில்நீ கிளம்பும் போது
தலையசைத்துக் கைவிரித்துத் தாழ்வா ரத்தில்
தவழ்ந்துவந்த தங்கையைநீ அணைத்துத் தூக்கி
அலையெனவே அடுக்கடுக்காய் முத்த மிட்டாய்;
அதைநோக்கி எதிர்வீட்டில் நின்ற கள்ளி
தலைகவிழ்த்தே உடல்விம்ம ஏன்மூச் சிட்டாள்?
தங்கையைநீ முத்தமிட்டால் அவளுக் கென்ன?

15

## [3]கண்ணல்ல!

அவளெனக்குக் காதலிதான்;
ஆனாலும், அந்தக் காதல்
அரும்பியதன் பிறப்பிடத்தை
அறிவதற்கு நான்மு னைந்தேன்:

பவளத்தைக் கதவாக்கிப்
பலமுத்தாற் சுவரெ டுத்துப்
பழத்தேனைத் தேக்கிவைத்த
பளிக்கறையாம் வாய மைப்பும்,

துவளவைக்கும் நுதல்அழகும்,
தொடைதோயுங் கூந்தல் தானும்
துளிர்க்குமின்பந் தருமெனினுந்
தூய்காதல் வித்தே யாமோ?

குவளைமலர் வேல்வீச்சாய்க்
குவிந்துவரும் இமைப்பொன் றாலே
குலைநடுக்கம் ஏற்றுவது
கண்அன்று; காதற் கூடம்! 16

கொன்றுவிடக் கோலெடுக்கும்
கொடுமாலை, சோலை தன்னில்
கொடிபடர்ந்த மேடையிலே
குனிந்திருந்தேன்; தோள்சி லிர்க்கத்

தென்றலுக்குங் கையுண்டோ'
எனமயங்கிக் கழுத்த சைத்தேன்;
தெளியாத கள்ளுண்டேன்;
தேன்குமரி குனிந்து நின்றாள்!

வென்றபின்னும் உயிர்குடிக்கும்
வேல்விழியை நான்இ ருக்கும்
'வெலவெல'த்த நிலையுணர்ந்தும்
"வெம்மையொடு சென்று யிர்தான்

மென்றுவிட்டு வா"வென்றே
மெல்லிமையைத் தூது விட்டாள்;
மென்றுவிடப் பாய்ந்தவைகள்
கண்ணல்ல காத லின்வேர்!

16

'கணுக்களெலாம் காதல்ஏ ற்றுங்
கருவிழியில் என்றன் மேனி
காட்சிதரல் உன்னுள்ளத்தின்
படப்பிடிப்போ' என்று கேட்டேன்;

'நுணுக்கமறி யானைக்கண்
நுமக்குளதோ' எனப்பு கன்றாள்;
'நின்கரும்புச் சொற்களுக்கு
நான்யானை' எனந வின்றேன்;

'துணுக்'கென்றே 'பெயரெனக்கு
வேம்புன்றோ' என்று ரைத்தாள்;
'துவைத்துண்ண ஒட்டகமாய்த்
தோன்றுவ'னென் றெடுத்து ரைத்தேன்;

அணுக்களையுந் தூளாக்கும்
அம்பொன்றை அனுப்பி விட்டாள்;
அவ்வம்புங் கண்அன்று
காதலுக்கோர் காந்தக் கல்லாம்!

18

'குடக்கணக்கு வேப்பெண்ணெய்
குலவினிப்பே, உன்றன் தேன்வாய்க்
குமிழியெழும் ஒருதுளியால்'
எனமுடித்தேன்; நாணந் தன்னால்
'படக்'கென்றே திரும்பிவிட்டாள்
படையெடுத்த நாணத் தின்மேல்
பணைப்பழகு முடிசூடிப்
பளிச்சிட்ட பெருமை கண்டேன்.

'கிடக்'கென்னைத் திரும்பிப்பார்
கண்ணல்ல' என்றவள்தன்
கிளிக்கழுத்தின் மென்மைமிகு
கிளர்முகவாய் தொட்டசைக்கக்
கடைக்கண்ணை ஓட்டிவிட்டுக்
கண்ணோட்டஞ் செய்து நின்றாள்:
கண்ணோட்டமோ, அதுதான்
அன்றன்று, காதலோட்டம்!

19

[பதின்சீர் ஆசிரிய
விருத்தங்கள்]

# முறையோ சொல்லாய்!

தித்திக்கும் சுவைத்தேனை உதட்டில் ஊற்றித்
தென்றலினை உடல்முழுதும் தேங்க விட்டுக்
குத்தகையாய் இன்பமதைக் குவிக்கும் என்றன்
குன்றன்னார், தோள்களையான் காணும் முன்னர்
'அத்தான்'என் றோடிப்போய் அணைத்துக் கொள்ள
அமைத்திருந்த ஆர்வமதை அவர்க்கு முன்னே
சொத்தையாய்ச் சிதைத்தனையே நாண மே,நீ
சுவைக்கூட்டை உடைத்தெறிதல் முறையோ சொல்லாய்
20

பொங்கிவரும் புதுவெள்ளப் பேற்றைத் தாவிப்
புகுந்தணையுங் கெண்டைஎன அவரைக் கிட்டித்
தங்கஉடற் புறத்தையொரு கைய ளாவ,
தளிர்முகவாய் தொட்டொருகை அசைக்க, முன்நாள்
திங்களின்முன் நான்நினைத்த எண்ணம் எல்லாம்
திறந்துசொல எனைவிடுத்து நாண மே,நீ
எங்கேனும் துளிநேரம் ஒதுங்கல் இன்றி
எதிர்ப்பியக்கம் நடத்துவதும் முறையோ சொல்லாய்!
21

தண்டமிழச் செம்மலினார் கன்னஞ் சேர்த்துத்
தழுவுகையில் குளிரேற்றும் தண்ணார் கன்னம்
கொண்டவிட்ட பனிக்கல்லோ; தோல்எ டுத்துக்
கொடுக்கின்ற இளநுங்கோ; எதுதான் என்றே
கண்டுவிடத் துணிந்திருந்தேன்! கனிவாய் வந்தார்.
கழுத்தசைத்தேன் குனிந்ததலை நிமிரா வண்ணம்
மண்டையடி யாயடித்தாய் நாண மே,நீ
மகிழ்ச்சிக்குத் தடைவிதித்தல் முறையோ சொல்லாய்!

22

[எண்சீர் ஆசிரிய
விருத்தங்கள்.]

# 6. விதையில்லாக் கனி

குமரி:

அன்பூறும் அத்தானே! தமிழத் தேனே!
அரிதரிதாம் கனியொன்றை அடைந்தேன், நானே.

குமரன்:

இன்பூறும் திருக்குறளின் இன்பப் பாலே!
இடையில்லாக் கன்னியெனில் கனிநீ அன்றோ!

குமரி:

பண்பூறும் திருமணத்தில் பதிந்து விட்டால்
பகர்வதற்குக் கன்னியெனும் நிலையொன் றுண்டோ ?

குமரன்:

தென்பாங்குத் தேன்மொழியே! திகழ்உ றுப்பாம்
தேங்குகனிச் சோலையெனத் திகழ்வாய் சொல்வேன் 23

உருவார்ந்த பனம்பழம்உன் கூந்தற் கட்டாம்;
உள்வளைந்த பூவன்அன்றோ உன்றன் நெற்றி!
கருநாவல் கனிகண்ணின் மணியே யாகும்;
கன்னங்கள் மாங்கனிக்குக் கவினே ஊட்டும்;
மருவார்முந் திரிக்கனியோ மூக்கிற் கேங்கும்;
மலருதடோ கொவ்வையதாய் மலர்ந்து காட்டும்;
திருவார்ந்த கனியரிதாய்த் திகழ்நெஞ் சத்தே
திருடிவைத்துக் கொண்டதென்ன, தீரச் சொல்வாய் ? 24

குமரி:

கலித்தொகையின் தனித்தலைவா! காதல் நெஞ்சில்
கனிகின்ற கனிவெல்லாம் கனியே அன்றோ?
புளித்ததுண்டோ, நம்நெஞ்சம் இனித்த தன்றி?
புன்னகைப்பூ யான்பூக்கப் பூரிப் பென்னும்
கொழித்தெடுத்தே மணம்விரியும் குலவு சொல்லாம்
கொழுந்தேனும் வழிந்துநிற்க, உணர்வாம் தாது
களித்தொன்றக் காமமெனும் பிஞ்சும் தோன்றிக்
'காதல்'எனக் காய்த்துப்பின் கனிந்த தன்றோ?

குமரன்:

என்நெஞ்சில் உன்னுயிரே உலவக் கண்டேன்;
உன்வாயில் என்நினைவே ஒலிக்கக் கண்டேன்.

குமரி:

என்னில்வீழ்ந் தெனையும்மில் வீழ்த்தி வைத்தீர்.

குமரன்:

என்விருப்பில் உன்விருப்பின் ஏற்றம் கண்டேன்.

குமரி:

இன்னதுவே அரிதரிதாம் கனியென் றேன், யான்.

குமரன்:

இயல்வழுவாத் தமிழிசையே! இதைவி ரிப்பாய்!

குமரி:

அன்பெனும்நீர் ஆர்வமெனும் சுவையே கூடி,
அதுகாதல் கனிச்சாறாய் ஊறி நிற்க, 26

நாம்வாழ்த்தும் கற்புநிறை திரட்சி யாக
நலவுடல் தோலதுவாம் கனியே சொன்னேன்.

குமரன்:

தீம்பலவே! வெடிநகைப்பு தோன்றச் சொன்னாய்;
தேம்பழத்தில் விதையொன்று வைத்தாய் அல்லை.

குமரி:

நாம்வாழத் தாம்வாழ்ந்து நாம்கா ணாமல்
நமைக்கண்ட வள்ளுவனார் நவின்றார் அன்றே:
'தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றார்,
காமத்துக் காழில்லாக் கனியாம்' என்றே. 27

[எண்சீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 7. [5]இனிக்கும் இரவு.

வரிக்காட்டுப் புலிஉறுமும்; கருங்கோட்டான்
வசைபாடும்; அலறும் ஆந்தை;
நரிக்கூட்டம் ஊளையிடும்; நச்சரவம்
வெளிக்கிளம்பும் இரவென் றாலும்,
சரிக்கட்டி வாராத கூலிவாங்கச்
சழக்கர்க்குப் பகலில் எல்லாம்
தறிக்கட்டை போலுழைத்தார் தலைசாய்க்கும்
இரவென்றால் இனித்தி டாதோ?

28

பணம்விரிக்கக் கடைவிரித்துப் பகல்முழுதும்
பொய்விரித்துச் சுரண்டு கின்ற
குணம்விரிந்த முதல்விரிந்தார் பாய்விரித்துத்
துயில்விரிக்கும் இரவென் றாலும்,
தணல்விரிந்த தெனஅல்லி இதழ்விரிக்க,
முல்லைதன் முகைவி ரித்து
மணம்விரிக்க, முழுநிலாதன் கதிர்விரிக்கும்
இரவென்றால் இனித்தி டாதோ?

24

அறிவுதரும் படிப்பின்றி அன்பர்களின்
    பேச்சின்றி உணவும் இன்றிச்
செறிவுதருங் கலையின்றிச் செழிப்பான
    செயலின்றிப் பயனும் இன்றி,
வறிதெனவே கழிகின்ற இரவெனினும்
    'பாலாறிப் போகு' தென்னுங்
குறிகாட்டி அறைக்குள்ளே அவள்அ ழைக்கும்
    இரவென்றால் இனித்தி டாதோ?

30

[அறுசீர்
ஆசிரிய விருத்தங்கள்.]

# 8. [6]கசக்கும் காலை

மரங்களுக்கு வேர்போலுந் தொழிலாளர்
மன்பதைக்கே உழைத்து ழைத்தும்
உரங்காணார், உழன்றிடுவார்; அவர்க்கெல்லாம்
உறக்கந்தான் ஓய்வு நேரம்;
உறங்கவரும் இரவவர்க்குத் தேன்கூடாம்;
அவர்ஈயாம்; அதைக்க லைக்கக்
குரங்கெனவே வருங்காலை கனியெனினும்
குமட்டல்தருங் கசப்பே யன்றோ? 31

சீர்திருத்தச் செம்மல்களும் சிந்தனைகொள்
சிற்பிகளும் உறங்கும் போதில்
'ஊர்திருத்த விழிப்பீர்'என் றெழுப்புகின்ற
காலைப்போ துயர்வென் றாலும்,
பேர்நிறுத்தும் வஞ்சகத்தைப் பொதியவைத்துப்
படுத்திருப்போர் சுரண்ட லுக்கு
வேர்நிறுத்த வருங்காலை விழாவெனினும்
வேம்புதருங் கசப்பே யன்றோ? 32

இரவுக்கு வாழ்த்தெடுத்து, நிலவுதனக்

கழைப்பனுப்பி, உயிரன் னாளின்

வரவுக்குப் பரிசளித்தே இன்பமதை

வளர்க்குங்கால் அதைந சுக்கப்

பரவுகின்ற கதிர்கண்டு பரபரப்பாய்,

'போறே'னென் றவள்ந டக்க,

அரவெனவே வருங்காலை அழகெனினும்

வாந்தித்ருங் கசப்பே யன்றே?

33

[அறுசீர்

ஆசிரிய விருத்தங்கள்]

# 9. [7]அன்னைக்குத் தெரியுமடி போடி!

அன்னை:

கண்ணான மகளுக்குத் தோழீ,
கனிவாகப் போய்ச்சொல்,நீ போடீ!
புண்ணாகி நோகின்றாள், அந்தப்
பொன்னாளன் பிரிவென்னும் தீயால்;
தண்ணீரைத் தலைமேலே விட்டேன்;
வெந்நீராய் வழிந்தோடக் கண்டேன்;
கண்ணுக்கும் மையெழுத மாட்டாள்;
கடுகிப்போய் மாற்றிடுவாய், போடி!

34

மகள்:

கண்ணுக்குள் அவருறையும் போது
கண்ணுக்கு மையெழுதின், அத்தான்
பொன்னுடலம் கரு மையாய்ப் போகும்;
போடீ,போ நானெழுத மாட்டேன்;
என்னிதழில் 'வண்ணந்தீட்' டென்றாய்;
எழிலத்தான் எனையணைத்தே இட்ட
பொன்னிதழின் முத்திரைகள் போகும்;
போயிதனை இப்படிச்சொல் லாதே!

35

தோழி:

வள்ளுவனார் சொல்லியதைக் கேட்டிருப்பாய்,
பெண்ணுளத்தைக்
கிள்ளுவதேன் அன்னாய்! கிளறாதே!—வள்ளுவன்
சொல்
8 "கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து"

36

அன்னை:

ஒப்பனைக்கு மறுத்தாளென் கின்றாய்;
உண்ணாமல் உறங்காமல் கிடந்தால்
அப்படியே உடல்வாடிப் போகும்;
அருமருகர் ஆர்வமொடு வருவார்;
இப்படியே இளைத்தவுடல் கண்டால்
ஏக்கமுடன் வாடிப்போய்த் தவிப்பார்,
தப்படியுன் தலைவிசெயல் போடி;
தாவிவந்து சோறுண்ணச் சொல்வாய்

37

மகள்:

ஆம், ஆம், ஆம் அன்னைசொன்ன தொக்கும்;
    அவள்பட்ட பட்டறிவே சொன்னாள்.
தாமாற்றும் கடமையதால் தளர்ந்து
    தவிப்போடு தழுவுதற்கே மீளும்
கோமானைக் குளிர்நிலவாய்த் தழுவக்
    கோலவுடல் எழில்வழங்க வேண்டும்;
நீமாற்றம் போயுரைப்பாய் போடீ,
    'நெய்யுணவை நானுண்பேன்' என்றே. 38

அன்னை:

பட்டாம்பி நெல்லரிசி பாலில்
    பதமாக்கிப் பாகிலிட்டு நெய்யை
விட்டாட்டி மூழ்கடித்துப் படைத்து
    வீற்றிருந்தே 'உண்ணடிஉன்' என்றேன்;
விட்டால்நான் உண்ணுவனோ' என்றாள்;
    'சூட்டிற்கோர் சுவையுண்டே' என்றேன்;
ஒட்டாமல் முணங்குகின்றாள் ஏதோ;
    முணகலுக்குப் பொருள்கேட்டு வாடி! 39

மகள்;

நெஞ்சத்தில் உறைகின்றார் அத்தான்;
நெய்யுணவைச் சூட்டுடனே உண்டால்,
பஞ்சுணவு வாய்வழியே சென்று,
படக்கென்று தொண்டையினைக் கடந்து,
நெஞ்சுவழிச் செல்லுங்கால் அவரை
நெருப்பாகச் சுடுமன்றோ தோழி!
அஞ்சுகின்றேன் அவர்வெந்து போவார்;
அன்னைக்குத் தெரியுமடி போடி! 40

தோழி;

[9]"நெஞ்சத்தார் காத லவராக, வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்"தென்னும்—செஞ்சொல்லை
அன்னாய்நீ வள்ளுவர்பால் கேட்டிருப்பாய்; அப்பொருளை
முன்னாளில் அறிவாயே மூண்டு. 41

[அறுசீர் ஆசிரிய விருத்தங்கள்; இடையில் இரு நேரிசை வெண்பாக்கள்.]

# 10. [10]அமுதமொரு சுவையோ ?

புன்னைப்பூ முகம்வெளுக்கப் புதர்முல்லை சிரிக்கும்:
புதுச்சுனையின் நீர்கறுக்கப் பொந்துத்தேன் நகைக்கும்;
பின்னழகைப் பாரென்று மின்னல்மயில் ஆடும்;
புன்னகைக்கும் மாளமிட்டுப் புறவினங்கள் கூடும்;
தென்னையுச்சி ஓலையைத்தன் யாழிசையாய் மீட்டித்
தென்றல்வளர் சோலையதில் தெரிவைமட்டும் இல்லை;
கன்னியில்லாச் சோலையிலே தென்றலுமோர் குளிரோ?
கன்னியவள் அணைத்திருந்தால் தென்றலுமோர் குளிரோ?
4

தவழ்ந்துவரும் வெள்ளத்தில் மிதந்துவரும் நுரையின்
தளிர்மென்மைப் பஞ்சணைகள்; தந்தக்காற் கட்டில்;
அவிழ்ந்துவரும் முல்லைமணம்; அசைந்துவருந் தென்றல்
அருங்கலவைச் சந்தனத்தை அள்ளியள்ளி வீசும்;
குவளைக்குள் தீம்பாலோ 'குடிப்பா'யென் றழைக்கும்;
குறைவில்லா அவ்வறையில் குமரிமட்டும் இல்லை,
அவளில்லாப் பள்ளியறை சந்தனமோ கமழும் ?
அவளிருந்தாற் சந்தனத்தின் மணச்சிறப்போ அவிழும் ?
43

சீரகச்சம் பாவரிசி செழும்பாலிற் பொங்கிச்
சிரிக்கின்ற மல்லிகைபோற் சிதறவைத்து, மேலே
மோரகன்ற வெண்ணெயிலே முறுகாத பாகை
முழுகவிட்ட அமுதமதை உண்ணவழைத் தன்னை
'ஊரடங்கிற்' றெனவுரைத்தாள்; உள்ளறையில் அவளோ,
ஊசிபட்ட புழுப்போலக் குழவிபெறத் துடித்தாள்;
ஆரணங்கு துடிக்குங்கால் அமுதெனக்கோர் சுவையோ?
'ஆண்பிறந்தான்' எனக்கேட்டால் அமுதெனக்கோர்
சுவையோ?
44

[எண்சீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 11. இளமையெனும் பொல்லாய்

குறுமணலில் சுவரெடுத்துக் கூரை யின்றிக்
குழந்தைவீ டமைத்தேநான் ஆடும் போது,
குறும்புபல செய்திடினும் என்றன் வாயில்
குமிழெச்சில் தோய்ந்திட்ட வெல்லம் தின்றே
'அறுசுவையில் ஒன்றுகுறை' யென்றே என்றன்
அங்கையைச் சுவைத்ததையும் நிரப்பிக் கொண்ட
நறுங்காதல் அத்தானின் பேரன் பெல்லாம்
நத்தையோ டாகியதே; நானென் செய்தேன்? 45

பாவாடை மேலேயோர் ஆடை சுற்றிப்
போர்த்திட்ட மேலாடை விம்மிப் போக,
மூவாடை களைந்தேசிற் றாடை பூண்டு,
முறுவலித்த எனைக்கண்டு எட்ட நின்று
'தீவாடை உன்னுடல்மேல் தோய்ந்து பின்னர்
தென்றலாய் மீளுவதேன்; புழுதிக் கூந்தல்
பூவாடை வீசுவதேன்' என்ற அத்தான்
பூரிப்பு மறைந்திடவே நானென் செய்தேன்? 46

'கரையாத கற்கண்டே; வாடா முல்லாய்;
கனுவில்லாச் செங்கரும்பே; பேசும் தென்றால்?
தரைதோயா நறுங்கனியே' என்றென் றென்னைத்
தலைகுனியச் செய்தென்றன் உடலுக் குள்ளே
புரையோடும் முத்தமிட்டு, மேலும் மேலும்
புத்தின்பக் குறும்பெல்லாம் புரிந்த அத்தான்
பறையொலிக்க எனைமணந்த நாள்ம றந்து
படுக்கைதனி யிட்டனரே; நானென் செய்தேன்?

47

எமைக்குவித்து மகிழ்வெள்ளம் மூழ்கச் செய்த
எழில்குவிக்கும் இளமையெனும் பொல்லாய்; சென்றாய்
சுமைகுவிக்கும் புறக்கடையில் எனைக்கு வித்தாய்;
சுவைகுவிக்கும் பழக்கடையிற் சுளையாய் நின்றேன்
இமைகுவிக்குங் குழந்தைதனக் கிசைத்தா யாக்கி
இதழ்குவிக்கும் இன்பமெலாம் ஓடச் செய்தே
இமைகுவிக்கா இரவளித்தாய்; ஓடி விட்டாய்;
இளமையதே, உனக்கிடர்தான் நானென் செய்தேன்?

48

[எண்சீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 12. அந்த ஒலி!

அந்தஒலி, பஞ்சாலைச் சங்கொலித்த
அமுதஒலி, உழைத்தவர்க்கோ அன்பொலியாம்.
சிந்துபாடிப் புறப்பட்டான் சிவக்கொழுந்து,
சிறகடித்து வலைப்பறவை பறந்ததென.
வந்துசேர்ந்த தோழர்கள் குரலெடுத்து
'வரவேண்டும் பொதுவுடைமை' எனவொலித்தார்,
அந்தஒலி, இவன்குலத்து வாழ்வொலியாம்;
'அஃதென்றோ ' என்றேங்கி வீடடைந்தான். 49

ஆடோட்டி வந்ததங்கை 'அண்ண'வென்றாள்;
'அண்ணியெங்கே' என்றவிழ்த்தான் ஆத்திரத்தை;
'ஓடோடி வருகின்றேன் என்றுரைத்தே
ஓடியுளாள் குடமெடுத்தே' எனமுடித்தாள் ;
பேடோடு பேசுதற்குத் துடித்தமனம்
பேதுற்றுப் 'படப'டென்றே அலறுகையில்
காடோடி மானெனவே குதித்துவந்தாள்;
கைவளையல் வரவுசொல்லி ஒலித்ததங்கே! 50

எழுந்தஅந்த வளையினொலி யாழிசையின்
எதிரொலியாம்; அவன்செவிக்கோ தேனிசையாம்;
விழுந்தவுடன் திரும்பிவிட்டான்; அந்நொடிக்குள்
'அத்தா'னென் றோரொலியைச் சொரிந்திட்டாள்;
'கழுத்தென்ன அழுதவூற்றோ; அன்றன்று
கற்கண்டோ; எவைகூட்டிக் கலந்திட்ட
பழுத்தஅன்பின் ஒலி'யென்றான் 'போங்களத்தான்'
எனக்குனிந்தாள்; எங்குபோவான்? சொக்கிப்(ப்)
போனான்.

51

[காய்ச்சீரான் அமைந்த
அறுசீர் ஆசிரிய விருத்தங்கள்.]

# 13. அச்ச நோய்க்கு அச்சமே மருந்து.

தோழி:

'அத்தான்'என் றரவணைத்த கைகள் கூப்பி
அருமருந்தே' என்றெதற்குப் போற்றி செய்தாய் ?

தலைவி:

கொத்தாக அச்சத்தைக் குணமாய்க் கொண்ட
கொள்கையரைக் கும்பிடுதல் குறியாய்க்
கொண்டேன்.

தோழி:

நத்துமனை யாள்உன்பால் அச்சம் போலும்
நங்கை,நீ அதுகருதிப் போற்று கின்றாய்!

தலைவி:

ஒத்தஅச்சம்' அஃதன்று; பழிபால் அச்சம்,
கொலையச்சம், அஞ்சவதற் கஞ்சும் அச்சம்,
இளிவச்சம், தீவினையச் சம்;தீ தாமோ ?

52

தோழி:

அச்சம்ஒரு கோழைநோய்; நோய்க்கோ போற்றி?

தலைவி:

ஒழிஅந்நோய்க் கச்சமதே மருந்தாம் கேள்,நீ:
கொலையச்சம் புலூலுண்ணும் கொடுநோய்
போக்கும்;
பழியச்சம் வழியெஞ்சும் படர்நோய் போக்கும்;
பேதைமையை அஞ்சுவதஞ் சச்சம் போக்கும்;
இளிவச்சம் அவையஞ்சும் அருநோய் போக்கும்;
தீவினையச் சம்போக்கும், தீயி னும்நோய்.

53

தோழி:

'பிணியதற்கு மருந்துபிற' என்றார் நீயோ,
'பிணியஃதே மருந்'தென்றல் பெருந கைப்பாம்.

தலைவி:

பிணியஃதோ உடற்பிணியாம் உளப்பி ணிக்கோ
'இருநோக்கில் ஒன்றுநோய்ஒன் றுமருந்' தென்ற
அணிகுறளை அறிவாயே! அஃதே போன்று,
அச்சத்தில் இரண்டுண்டே; 'ஒன்று நோயாய்,
தணிமருந்து மற்றையதாய்த் தழுவும்' என்றே
தந்துள்ளார் வள்ளுவர்என் தலைவற் கென்றே.

54

[எண்சீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 14. தவழும் தெய்வம்.

*வாலைக் குமரியை
வாழிய தாயென மாற்றுவதும்,
காளைக் குமரரைக்
காணிய தந்தையென் றாக்குவதும்,
சூலைத் துயர்தந்து
சோலையாய் வாழ்வினைத் தோற்றுவதும்
காலைக் குனித்தெழில்
காட்டித் தவழ்ந்திடும் தெய்வதமே, 55

'அத்தான்' எனும்மலர்
அம்புமின் னாற்றலாய்ப் பாய்ந்தமொழி;
முத்தாக 'அன்பே'யென்
றத்தான் மொழிந்ததேன் தோய்ந்தமொழி
சொத்தை எனச்சொலச்
செய்திட 'அப்பப்ப' 'அம்ம'வென்றே
முத்திரைச் செம்மொழி
குத்திடுந் தெய்வமொன் றாடிடுமே. 56

* வாலை - நல் இளமை

பொன்னிற மின்னலைப்
‘பொள்’ளென வென்றிடும் புன்னகையே!
கன்னச் சிறுசுழி
காட்டுமோ காவிரி நீர்ச்சுழியே?
பெண்ணை இளநீரும்
பெற்றதோ வாயினீர்த் தீஞ்சுவையே?
சின்னக் கருவிழிக்
கென்ன உவமைசொல், வெண்ணிலவே? 57

விண்ணதன் நீலத்தை
வெண்ணில வேற்றிட, வெண்ணிலவின்
தண்ணறு வெண்மையைத்
தாங்கிடும் விண்ணதில் மின்னலிட்ட
மின்னலுந் தங்கிக்
கிடந்திடில் மேவுறு வெண்மைவிழிக்
கண்ணை, மணியதைக்
†கண்ணரிப் பொன்மையைக் காட்டிடுமே. 58

* பெண்ணை – பனைமரம்
† கண் அரி – கண் நரம்பு இழை

தண்டை இசையெனத்
*தண்ணுமை கிண்கிணி காட்டிவர,
பண்டி சரிந்தரை
நாண்மணி யாழிசை கூட்டிவர,
கொண்டைத் தலையதைக்
கோல மயிலென ஆட்டிவரத்
தொண்டையின் வாயினீர்
'தூய்தூ'யெனப் பன்னீர் தூற்றிடுமே! 59

உச்சியை மோந்திடின்
உள்ளம் கிளர்ந்தெழும்; ஒண்ணுதலை
நச்சித் தடவிட
நன்னரம் பின்புறும்; கன்னமதில்
'இச்சிச்' செனுமுத்தம்
என்பைக் குழைத்திடும்; வாயிதழின்
எச்சில் துளிபடின்
என்ன நிலையெனச் சொல்லுமுண்டே? 60

---

* தண்ணுமை - முழவு

வாழ்வில் முறுவல்
    வழங்கிடா வன்கணர் வாய்மலரும்;
தாழ்வில் நலிந்து
    தளர்ந்த உளமது தண்மையுறும்;
சூழ்வுறு காதற்
    சுவையினுந் தானோர் மெருகொளிரும்;
யாழ்குழல் மெல்லிசை
    யாவினும் மேன்மை மழலையதே, 61

[கட்டளைக்
கலித்துறைகள்.]

# 2. ஒருதலையான் இன்னாது



சுமைக்கூடைகள் இருபக்கமும்
சமமாய்விடில் சிறுகாவடிச்
சுமைதூக்குதல் எளிதாய்விடும்;
சுமை ஏற்றத் தாழ்வாய்விடில்

வருமேதுயர்; சமைகாதலும்
இருவர்கொளின் இனிதாய்விடும்
ஒருவர்கொளல் இன்னாதெனும்
திருவள்ளுவர் திருவாய்மொழி:

''ஒருதலையான் இன்னாது காமம்;காப் போல
இருதலை யானும் இனிது''

(குறள்: 1196)

## இன்னாதவை:


பொருள்
எண்

காதல் பேசிற்று - 15.

புரட்சி தூவிச் சென்றாள் - 16.

புளித்த காதல் - 17.

குறிஞ்சிக் கிழவனும் குறும்புத் தோழியும் - 18.

# 12. காதல் பேசிற்று.

தலைவி:

தேடிவந்த எனதருமைச் செல்லத் தோழி!
தேம்புகின்ற பெற்றோர்க்குச் சென்று ரைப்பாய்;
'ஓடிவிட்ட நும்பெண்ணாள் ஆளன் தன்னோ
டோங்குகின்றாள் காதல்தரும் இன்பத்' தென்றே.

தோழி:

நாடிதளர்ந் தழுகின்றார் உனைப்பி ரிந்தே
நானென்ன நவில்வனடி அவர்க்கு மாற்றம்?

தலைவி:

போடீ,போ; 'அவளிங்கு வந்தால் அன்னாள்
பொன்நாடி புகைந்தேபோம்' என்றே கூறாய்! 62

தோழி:

'சிற்றிடையில் ஆடைசுற்றி மார்பில் கச்சுச்
சீரமைத்தேன், எழில்தந்தாள்; மகிழ்ந்தேன்; அந்த
'ஒற்றைமகள் பிரிந்தனளே' என்றே கூவி
ஒப்பாரி வைப்பவட்கு நானென் சொல்வேன்?

தலைவி:

'சிற்றிடையின் ஆடைதனில் கச்சில் போட்ட
சுருக்கவிழ்க்க அத்தானைச் சூழ்ந்து சென்று,
வெற்றிடையில் விளையாடி மகிழ்ந்தாள்' என்று
விளம்பியவள் துயர்தீர்க்க விரைந்து போடீ! 63

தோழி:

தாங்குதற்குத் தோழிநிற்க, இதுதான் தேவை
'தா'என்றால் தரநானே துடித்து நிற்கத்
தீங்குதந்து போயினளே' என்றே ஆவி
திகைக்கின்ற தந்தைநிலை தீர்க்கப் போமோ?

தலைவி:

தேங்குழலைக் கேட்கின்ற பருவ மன்று;
தேவைகொண்ட இன்பமதோ அத்தா னன்றித்
தாங்குதந்தைக் கேலாத தன்மை சாற்றித்
தாழ்திகைப்பை நகைப்பாக்கத் திரும்பிப் போடி! 64

தோழி:

உனைப்பிரிந்து துணையறியா எனைப்பி ரிந்தே
உளம்வாடச் செய்தனையே நானென் செய்வேன்?

தலைவி:

எனைப்போல நீயுமொரு துணையை நாடி
எழில்குவிக்கும் இன்பத்தை எய்தப் போடி!

தோழி:

நனையாமல் நரியதனை நீராட் டல்போல்
நயமான மாற்றமெலாம் நவின்றாய், நன்றே;
'புணைநீயே வாழ்க்கைதனக்' கென்றுன் மாமன்
புரிந்துவரும் செயலதனைப் புகன்றால் சோர்வாய். 65

'என்னருமைக் கன்னிதனை இட்டுச் சென்ற
எத்தனைநான் சாடிடுவேன்' என்றே கூறித்
தின்னவரும் புலிபோலத் திரியும் அந்தத்
தீயனுக்குத் தடையென்ன தீர்ப்பேன் சொல்வாய்?

தலைவி:

'மின்னுகின்ற கட்டாரி மின்னாள் கொண்டாள்;
மருட்டியுனை வெருட்டு'மென அவற்குக் கூறி,
'கன்னியவள் பேசவில்லை; அன்னாள் கொண்ட
காதல்தான் பேசிற்'றென் றோடிச் சொல்வாய்!

66

[உரையாடல் துறையிலமைந்த
எண்சீர் ஆசிரிய விருத்தங்கள்.]

# 16. புரட்சி தூவிச் சென்றாள்.

துள்ளிக் குதித்தோடும் - மானும்
தோற்றிடும் பார்வையினாள்
தெள்ளிய தென்றலையே - உடலில்
தெளிக்கும் பொன்னியினை,
அள்ளி யணைக்குமின்பம் - மணத்தால்
அமையப் பெற்றகுப்பன்
வள்ளி எனுங்கன்னியை - வஞ்சமாய்
வரித்து நாடிநின்றான். 67

முல்லை மலர்பறிக்க - வள்ளி
முத்து நகைவிரித்தே
கொல்லையில் வந்துநின்றாள்: - குப்பன்
கொத்திடப் பாய்ந்துவந்தான்;
சொல்லைச் சொரிந்தவுடன் - அன்னார்
சொக்கினர் இன்பத்தினில்;
பல்லை உதட்டழுத்தி - பொன்னி
பார்த்துப் பதறிநின்றாள்! 68

தன்னை மணந்தவனே - வேறு
தையலைக் கூடுகின்ற
சின்ன அறிவினையே - எண்ணிச்
சிந்தை உடைந்தவளைத்
தின்னாச் சுவைமுடித்தே - அங்கு
திரும்புங் குப்பன்கண்டே
'என்னேடி விம்முகின்றாய்? - இங்கே
ஏனடி வந்த'தென்றான். 69

'பொன்னுடல் கூடுதற்கே - என்னைப்
'பொன்னி,நீ வாடி'யென்றே
சொன்னவர் வந்தாரிலை; - அத்தான்,
சென்றிதோ மீளுகின்றேன்;
புன்னை நிழல்அமர்வீர்' - என்றே
புரட்சி தூவி(ச்)சென்றாள்;
கண்ணினை வேல்குடைய - குப்பன்
கலங்கிச் சாம்பிவிட்டான். 70

[இடை மாச்சீர் விட்டிசைக்கும்
நெடிலடி ஆசிரிய விருத்தங்கள்.]

# 17. புளித்த காதல்.

அவன்:

சால்புடைய என்காதற் பெருமை யெல்லாம்
சாற்றினையோ தலைவியிடம், அருமைப் பாங்கி!

பாங்கி:

வேல்விழியாள் கேட்டனளே; கேட்ட பின்னர்
வேலிருக்கத் தான்கண்டேன்; விழியை காணேன்.

அவன்:

'பால்வழியும் என்முகந்தான்' என்றே நீயும்
பாவைக்குச் சொன்னாயோ?

பாங்கி:

சொன்னேன், சொன்னேன்;
'பால்வழிந்து வீணாகிப் போகு முன்னர்
பாற்பண்ணை வைக்கச்சொல் போடீ' என்றாள்.
71

அவன்:

எச்சமிலா என்காதற் கிசைவா ளானால்
எடுபிடியாய், இனியவனாய், அன்னாள் உள்ளம்
நச்சுகின்ற படியெல்லாம் உருவம் மாறி
நானவட்கு நிழலெனவே நடப்பே னென்று
'கச்சித'மாய்க் கழறினையோ?

பாங்கி:

கழறக் கேட்டுக்
'கண்டபடி தன்னுடம்பைக் காட்டு தற்குப்
பச்சோந்தி உடலோடி அவற்கே' என்று
'படக்'கென்றன் உடல்குலுங்க மடக்கிக் கேட்டாள்.
72

அவன்:

அங்கவுடற் பளபளப்பால், கட்டுப் பல்லால்,
அணிகளினால் உடலெல்லாம் தங்க மென்று
மங்கையிடம் சொல்லுதற்கு மறந்தாய் போலும்!

பாங்கி:

மயிரெல்லாம் வெள்ளியென்றும் சொன்னேன்; அன்னாள்
'தங்கத்தால் வெள்ளியினால் ஆன தென்றால்
தக்கபடி அவ்வுடலில் பதிப்ப தற்குச்
செங்குமுதக் கன்னிப்பெண் செல்லா தாகும்;
*செங்கற்கள் கூடுமென்று செப்பாய்' என்றாள்.
73

---

* செங்கற்கள் - மாணிக்கக் கற்கள்; கடுமண் கற்கள்.

அவன்:

மிடுக்குடைய என்பேச்சில் நகைச்சு வைதான்
மிகவுண்டென் பதைக்கேட்டால் 'சரி'என் பாளே!

பாங்கி:

'அடுக்கடுக்காய்ச் சரிந்தசதை நகைச்சு வைக்கே
அரசாகி நிற்குமடி அழகாய்' என்று
துடுக்காக வெடிச்சிரிப்பில் 'தூதூ' என்றாள்.

அவன்:

துளியேனும் 'நானவளைத் துய்க்கேன்' என்று
வெடுக்கெனவே கூறிவிட்ட வகையை நீயே
விரைவாய்ச்சென் றவட்குடனே விளம்பாய், போ! போ!

74

[உரையாடல் துறையிலமைந்த
எண்சீர் ஆசிரிய விருத்தங்கள்.]

# 18. குறிஞ்சிக் கிழவனும் குறும்புத் தோழியும்

குறிஞ்சிக் கிழவன்:

*முல்லை மலரினைக் கிள்ளிவிட்டாள்—உடன்*
*முத்துச் சிரிப்பெதற் கள்ளிவிட்டாள்?*
*கொல்லிக் குமரியாள் எக்களித்தே—என்னைக்*
*கொள்ளவோ தள்ளவோ கொக்கரித்தாள்?*

குறும்புத் தோழி:

*பல்லுமக் கலர்ந்த பாங்கினையே—ஒத்துப்*
*பார்த்திவள் முல்லையென் றேங்கினளாம்*

கிழவன்:

*செல்லி யெனுமொரு சேயிழையாள்—இதைச்*
*செப்பினள் முன்னமே, ஆயிழையே!*

தோழி:

*விரிந்த முல்லையுன் பல்லெனிலோ—விண்டு*
*விட்டுத் தெறித்திட்ட கல்லலவோ?*
*பரிந்தச் செல்லியாள் பேசியதோ, உன்னைப்*
*பழிக்கச் சொற்களை வீசியதே;*

புரிந்தும் அதற்குப் பூரிப்பெனில்—அந்தப்
பூரிப்புச் சொற்கிவள் *பாரிப்பளோ ?
விரிந்த முல்லையாம் பல்அழகோ ?—தட்டி
விலக்கும் பொக்கைவாய் நல்லழகே! 76

கிழவன்:

'புருவத் தமைந்த கருமையதே—பொங்கு
புதுமை அழகின் அருமையதாம்;
உருவத் தளர்ந்தேன் உடல்'என்றே – செல்லி
ஒப்பித்தாள் விடுத்த மடலொன்றால்.

தோழி:

பருவக் குமரியாள் பார்த்திடவும்—கண்கள்
பார்த்ததும் காதலால் வேர்த்திடவும்
தரும்அக் கருமைப் புருவமெனில்—அஃதே
தளர்வ திவட்குத் திருவாகும். 77

கிழவன்:

'மூக்கதோ எள்மலர் தான்'எனவே—செல்லி
முடிவாய்க் கூறினள், தேனெனவே.

* பாரிப்பளோ - பருத்துவிடுவாளோ

தோழி:

பூக்கின்ற மூக்கதும் அப்படியாய்—பொன்னே
  பூரித்த மகரந் தப்பொடியாய்,
மூக்குப் பொடியதை முங்குவதும் – அஃதே
  முதிர்ந்த தேனெனத் தொங்குவதும்
நோக்கியே கூறினள் செல்விவண்டே—இதனை
  நோக்காதே இவ்வண்டு செல்லுகண்டே! 78

கவிக் கூற்று

சென்றான் கிழவன் சிலசெய்து வந்திங்கு
நின்றான் புகன்றான் நினைப்பு:
[குறள் வெண்பா]
79

கிழவன்:

அலர்ந்த பற்களை அழித்திட்டேன்;—உடனே
  அறவே புருவம் மழித்திட்டேன்;
உலர்ந்த காதலாய்ப் போகாமல்—தோழி!
  உணரக் கூட்டுவாய் நோகாமல்!

தோழி:

கிளர்ந்த பற்களைக் கொட்டிவிட்டீர்;—வில்லைக்
  கிட்டிய புருவம் வெட்டிவிட்டீர்;
தளர்ந்த தொந்தியைத் தள்ளிடிலே—இந்தத்
  சிலையினை அள்ளிடலாம். 80

கிழவன்:

குறும்புத் தோழியே குட்டிநின்றாய்— குட்டக்
குனிந்தால் தொந்தியில் முட்டுகின்றாய்;
துரும்போ வயிற்றைத் துணிப்பதற்கே—வீணே
துள்ளாதே என்காதல் கணிப்பதற்கே;
விரும்பி மேவினால் வீட்டுவதோ?—வீணே
வெட்டிச் செயற்கென்னைப் பூட்டுவதோ?

தோழி:

திரும்பிச் சென்றிந்த நல்லழகைச்—செல்வி
தித்திப்பாய் கண்டிடச் செல்எழுவாய்!

81

பொக்கைவாய் அழகின் பொலிவெனவே—இமைகள்
போயினும் காதல் மலிவெனவே,
தக்கையாய்ப் போயினும் தன்மனையே—கொள்ளும்
தகுதி கொண்டதை உன்மனையில்
இக்கணம் காணுதற் கோடிடுவாய்! — அந்த
இனிமைச் சுனையிற் கூடிடுவாய்!
அக்கையில் லையிவள் அன்னவட்கே—நல்ல
அறிக்கை இதனால் சொதலிவைத்தேன்:

82

தம்பொருள் தமக்குப் பெருமையதே—மற்றோர்
தம்மையும் வலிப்ப தருமையதே;
கொம்பது தாங்கிடுங் காயாக—அவாவைக்
கொள்ளுதல் நன்மையின் தாயாகும்.
பம்பரச் சுழற்சி பட்டுவிடும்—பெரிய
பாரின் சுழற்சியைத் தட்டுவதோ?
நம்பெரு வள்ளுவர் 'பண்பின்றேல்—நிலந்தான்
மண்புக்குள் மாய்வது மன்' என்றார்.

83

[உரையாடல் துறையிலமைந்த
இடை மாச்சீர் விட்டிசைக்கும்
எழுசீர் ஆசிரிய விருத்தங்கள்.]

# 3. கட்டளைக் கல்



பொன்தகுதி உரைகல்லால்;
பொன்னுரைகல் கட்டளைக்கல்.
நன்மக்கள் தகுதிக்கோ
தம்செயலே உரைகல்லாம்.

வரும்பெருமை சிறுமைக்கே
உறும்செயலே உரைகல்லாய்
அருஞ்செயலே செயவேண்டும்;
திருவள்ளு வர்சொன்னார்;

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

(குறள்: 505)

## உரைகல்லில்:

பொருள் எண்


எவன் தமிழன்? - 19.

தமிழா கேள்! - 20.

நாணம் எங்கே? - 21.

கேட்ட தாய் - 22.

பண்பு—அடையாளச் சின்னம் - 23.

தைத் திங்கள் - 24.

கையிலொரு தாலியுடன் வருவேன் கண்ணே! - 25.

பறந்தே போ! - 26.

மேநாள் ஓர் எச்சரிக்கை - 27.

நல்ல குத்தகை! - 28.

முதலடிதான் பாடுகிறாய் - 29.

புதுக்கினர் எமனுக்கு வாய் - 30.

படைஞர் ஆட்சி - 31.

வானம்பாடி, நீ மானம் பாடு! - 32.

# 19. எவன் தமிழன்?

ஏட்டிலுள்ள தமிழரினால்
எக்களித்த தென்னுள்ளம்;
நாட்டிலுள்ள தமிழரினால்
நாணமதே தோன்றிற்று;
கேட்டிடுவீர் தமிழகத்தீர்,
கேடுற்ற நம்நிலையே!
நாட்டிடுவீர் இனியேனும்
'நாமும்சீர்த் தமிழ்'ரென்றே. 84

மின்மினியும் விண்மீனும்
மினுக்குவதில் ஒன்றேயாம்!
நன்முல்லை தும்பையிவை
நறுமணத்தில் ஒன்றாமோ?
என்மொழியுஞ் செந்தமிழ்தான்
என்றேதாம் கூறிடினும்,
தன்மானம் இல்லையெனில்
தமிழரெனத் தகுவாரோ? 85

தமிழனெனில் தமிழகத்தில்
தமிழுயர்வுக் கெழவேண்டும்;
தமிழனெனில் தாய்நாட்டின்
தனியுயர்வுக் கெழவேண்டும்;
'தமிழ'னென உணர்வோடு
தன்னினத்தைத் தழுவலொடு
தமிழனெனில் உலகமதில்
தலைதூக்கி நின்றிடுக!

86

தமிழ் அழிக்க நினைப்போனின்
தலையழிப்போன் தமிழனன்றோ!
தமிழினத்தைச் சுரண்டுவோனைத்
தகர்த்திடுவோன் தமிழனன்றோ!
தமிழகத்தில் தீப்பழக்கம்
தயக்கிடுவோன் தமிழனன்றோ!
தமிழ்மொழிக்கே தனிச்சிறப்பைத்
தருவோன்சீர்த் தமிழனன்றோ!

87

மலையெதிர்ந்தே வந்திடினும்
மார்பெதிர்ந்த தமிழர்கள்
தலைவணங்கித் தகாதோர்க்குத்
தரைநோக்கித் நிற்பதோகாண்!
கலைவளர்த்த தமிழ்க்கலைஞர்
கயமையினார் உண்ணவிரி
இலைவளர்க்க வாழ்தனன்றோ!
இலையோகாண் தன்னுணர்வே?

88

மொழிப்பற்றே விழுப்பற்றாய்
மொய்ப்புற்றோன் முழுத்தமிழன்;
பழிப்பற்ற விழிப்புற்றுப்
பதைப்புற்றுத் தமிழ்க்கிடரை
அழிப்புற்றுக் களிப்புற்றோன்
இழிப்பற்ற மறத்தமிழன்;
செழிப்புற்ற செந்தமிழ்ப்பேச்
சுறப்பெற்றோன் செழுந்தமிழன்.

89

தமிழ்ப்பண்பா டொழுக்கமதன்
தகவறிந்து தழுவவரும்
இமிழ்கடலர் உலகினத்தார்
இனியரென அரவணைத்துக்
கமழ்அன்பால் நண்பரெனக்
கண்டிடுவோன் தமிழ்ப்பண்பன்;
அமிழ்தன்புக் குயிரதையும்
அளித்திடுவோன் அருந்தமிழன். 90

உள்ளத்தே கேடெடுத்தே,
உதட்டகத்தே பீடெடுத்து,
முள்ளொத்தே மொழியெடுத்து,
முறுவலித்த முகமெடுத்த
கள்ளத்தார் தமையொதுக்கிக்
'கசடற்றார் தம்'ரெனவே
கொள்ளத்தான் 'யாதும்மூர்
யாவருங்கே ளிர்'என்றான். 91

[தரவு கொச்சகக் கலிப்பாக்கள்]

## 20. தமிழா கேள்!

திண்ணிய என்றன் தமிழா,கேள்!
சிலசொல் தருவேன் எண்ணிப்பார்!
எண்ணத் தெழுந்த விடையெதுவோ,
எடுப்போ ததனை இயற்றிடுவாய்!
திண்ணம் செறிந்த உளத்துடனே
திரண்டு, முயன்று செயல்புரிவாய்!
மண்ணில் மலையே எதிர்த்திடினும்
மலைக்கா தே,நீ விரைந்தெழுவாய்! 92

புதுமைக் குடியாய்ப் புகுந்தவர்கள்
புன்மை மொழிகள் வளர்க்கின்றார்;
ஒதுக்கி யுன்றன் உயர்மொழியின்
உருவைக் குலைப்பார், உலைவைப்பார்,
மதுவின் குழியில் வண்டெனவே
மயக்க வழியில் வளர்கின்றாய்,
புதுக்கி யுன்றன் தமிழ்மொழியைப்
புனைய வேண்டும் முனைந்தெழுவாய்! 93

நம்மை உயர்திணை யாக்கியவள்
நந்தாய் மொழியாந் தமிழன்றோ?
செம்மை நிலையில் அவட்பேணல்
சேயாம் நமது கடனன்றோ?
'மும்மைத் தமிழும் ஆள்வோரே
முனைந்து வளர்க்க வேண்டும்'என
அம்மை மீதில் ஆணையிட்டே
அறிவித் தியக்க முயன்றிடுவாய்! 94

பிழையில் லாத எழுத்தொலிப்பும்,
பிறழ்வில் லாத எழுத்ததுவும்,
விழைவாய்த் தமிழைக் கற்பதுவும்
விளங்குந் தமிழ்க்கே தொண்டாகும்.
புழைவாய்ச் செடியாய்த் தமிழ்வாடப்
புன்மைச் சில்லோர் கீழறுப்பாய்
நுழைவார் செயலை *நூக்குதலும்
நுவலுந் கொண்டென் றுணர்வாயே! 95

நூக்குதல் - சிதைத்தல்

அடுத்து வந்தோர் அடாப்பழக்கம்
அவ்வப் படியே கடைப்பிடித்துக்
கெடுத்தே விட்டாய் தமிழ்வழக்கே!
'கேலி'க் கிடமே கொடுத்திட்டாய்!
படுத்தல் ஒன்றிற் பணிவதன்றிப்
பணிதல் ஓரும் தமிழ்மகனே!
எடுத்தே யுள்ளாய் என்பதன்றிக்
கொடுத்த துண்டோ? இதுநன்றோ? 96

திருக்குறள் முழுதுங் கற்றிடலால்
திருந்திய வாழ்வே பெற்றிடலாம்;
'உருப்படி மனிதர் தமிழர்'என்றே
உலகில் திகழக் குறள்துணையாம்;
துருப்பிடித் துதிர்ந்த இரும்பென்றே,
துளையிடப் பட்ட எலும்பென்றே,
இருப்பது தமிழர் பண்பன்றே;
இனியுந் தாழ்க்கல் இடரன்றோ? 97

[அறுசீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 21. நாணம் எங்கே?

கட்டுடைய தமிழரசைச்
கடிந்திட்டார் எனுஞ்சொற்கள் இங்கே
எட்டியதும் வடநாட்டை
எதிர்த்தெழுந்து வென்றிட்ட துங்கன்
குட்டுவனாஞ் சேரமன்னன்
குலத்துதித்த தமிழரீர்;நீர் இன்றோ
குட்டுதற்குச் சாய்ந்துதலை
குனிகின்றீர், நாணமெங்கே? நன்றோ! 98

தேங்கமழும் முத்தமிழின்
தேன்பருகிச் செம்மாந்து, தேர்ந்து,
வீங்குகின்ற தோள்புடைத்து
வீரத்தின் திறங்காட்டி ஆர்ந்த,
வேங்கையென வாழ்ந்திட்ட
வேர்க்குலத்தீர், தமிழரீர்;நீர் இன்றோ,
தீங்கினத்தின் கையாளாய்த்
தீர்ந்துவிட்டீர், நாணமெங்கே? நன்றோ! 99

ஆர்ப்பரித்த ஆரியத்தின்
ஆணவத்தை அடக்கி,அதற் கேய்ந்த
தூர்பறித்து வெற்றிகண்ட
தூய்மன்னன் பாண்டியனாம், ஆய்ந்த
தேர்ப்பரியன் நெடுஞ்செழியன்
தேர்குலத்தீர், தமிழரீர்;நீர் இன்றோ,
பார்ப்பவரின் காலடியில்
படிவதுவோ; நாணமெங்கே? நன்றோ! 100

கடைப்பிணமாய்ப் பிறந்திடினுங்
கருவாளால் வெட்டிவெற்றி கண்ட,
படைப்பிணமாய் மதித்ததற்குப்
பலசிறப்புஞ் செய்தேசீர் கொண்ட,
உடைப்பிணமாய் உயிர்நீத்த
உயர்குடியின்[11] தமிழரீர்,நீர் இன்றோ,
நடைப்பிணமாய் வாழ்ந்துவரல்
நமக்கழகோ; நாணமெங்கே? நன்றோ! 101

மலையெங்கே எதிர்த்திடினும்
　　மானமங்கே காப்பதற்குப் பாய்ந்தே
தலையங்கே தடிந்தேனும்
　　தந்திடுவார் உயிரங்கே, மாய்ந்தே;
அலையங்கே எழுந்ததெனை
　　அலைக்கழிந்த தமிழரீர், நும் பொன்றாக்
கலையெங்கே? மானமெங்கே?
　　கவினெங்கே? நாணமெங்கே? நன்றோ! 102

[நெடிலடி
ஆசிரிய விருத்தங்கள்]

# 22. கேட்ட தாய்

தாய்மொழிக்குந் தாய்தனக்குந் தகவளித்தார்
நம்முன்னோர்
சேய்மொழிக்குப் பூரித்துச் செம்மாக்குந் தாய்தன்னின்
வாய்மொழிக்குத் தலைதாழ்த்தி வாழ்வெல்லாம்
பெருமையொடு
தூய்மையுற்ற நந்தமிழர் துகளேற்ற நிலைகேளீர்!
103

'யாய்'என்றால் எனையீன்றாள்; 'ஞாய்'என்றால்
நினையீன்றாள்;
'தாய்'என்றால் பொதுவினின்றாள்; யாயவட்குந்
தாயவட்குஞ்
'சேய்'என்பார் உளங்குவிப்பார்; செறிபண்பின் எல்லவருந்
'தாய்'என்றால் தலைதாழ்த்தித் தகவளித்தார்
தாய்மைக்கே.
104

'ஈன்றெடுத்த பொழுதைவிடப் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனே எனக்கேட்ட தா'யென்ற அக்குறிப்பில்
தோன்றினனே வசைக்கென்ற துயர்ச்செய்தி
தாய்கேட்டால்,
'ஈன்றனனே இவனை'யென ஏங்குகுறிப் புளதன்றோ?
105

சான்றோர்கள் இக்குறிப்பைச் சார்ந்துநின்று
கடைப்பிடித்தார்!
ஈன்றுபுறந் தந்தில்லில் இயைந்திருக்குந் தாயுள்ளஞ்
சோர்ந்துவிடுஞ் சொற்சொல்லார்; சேயிழிவு செயின், தந்தை
சான்றோனாக் கிலன்எனத்தாய் சாம்புவளென்
றெண்ணினரே.
106

செந்தமிழர் இவ்வகையிற் செறியவைத்த பண்பெல்லாம்
நந்தமிழ்நர் நயக்காமல் நலித்திட்டார்; நவைதந்தார்.
இந்தவகை நிலைநேர இடைக்காலத் தேவிரித்த
பொந்துகளாய் உளங்கொண்டார் பொதிந்தமைக்கே
இதுகேண்மின்:
107

'ஆசுகவிக் கெனையன்றி யாருளரென்' றேநிமிர்ந்தே
வீசுகவி யாம்காள மேகத்தை நாமறிவோம்;
தேசுபுகழ்ப் பெருங்கவிஞன்; தெளிவாக மறுப்பில்லை;
கூசுசெயல் அவன்செய்தால் கூறுவமோ புகழென்றே?
108

ஊரூராய் அவன்போவான்; உளமினிக்கும் பாட்டெடுப்பான்;
யாரேனும் வசைமொழிவான்; யாப்பவன்பால் ஏவல் செயும்;
சோறோங்கும் மடமெங்கும் சோர்வின்றிப் புகுந்துண்பான்;
நீரோங்கு குடமூக்காம் கும்பகோ ணஞ்சார்ந்தான். 109

குடமூக்கிற் சோற்றுமடங் குனியாமல் குலையாமல்
மடந்தைமுகக் கவிவாணன் மண்டுகிறான் அவன்காண்மின்!
இடந்தேடி இலைபிடித்து இருந்துண்பான் அவனெதிரே
கிடந்தாடும் முன்குடுமிக் கிளர்சோழி யனுங்காண்மின்! 110

குனிந்துண்ட சோழியனின் குடுமியவிழ்ந் ததுகாண்மின்!
துணிந்தந்தக் குடுமியினைத் தூக்கியதால், அவன்இலையின்
நனியெச்சிற் சோறிரண்டு நங்கவிஞன் இலையில்விழ
முனிந்தேநம் பெருங்கவிஞன் முழக்கியவெண் பாக்கேண்மின்! 111

## காளமேகம் பாட்டு:

"சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா! சோற்றுப்
பொருக்கவிழ்ந்த வாயா! புலையா!-திருக்குடந்தைக்
கோட்டானே! நாயே! குரங்கே! உனையொருத்தி
போட்டாளே! வேலையற்றுப் போய்"[12]

*பாடினான், பாடிடுக! பாடியதில் வெண்பாச்சீர்*
*நேடினான், நேடிடுக! நேடியதில் சோழியனைச்*
*சாடினான், சாடிடுக! சாடியதில் ஈற்றடியைப்*
*பாடினனே, 'பாடிடுக' எனப்பகரேன், பண்பிலதால்.* 112

*நாயென்றான்; குரங்கென்றான்; நவின்றிடுக! தவறுசெய்த*
*சேயென்றே ஏசுபவன் "போட்டாளே வேலையற்றுப்*
*போய்'என்றே பாடுவதோ? பொதிந்தில்லில் வாழ்கின்ற*
*தாயன்றோ ஏச்சுற்றாள்? தாய்க்களிக்குந் தகவாமோ?* 113

*இதுதகவன் றென்றுணர இனியதிதோ ஒன்றறிவாம்;*
*எதுவரினும் ஏச்சறியா எழிற்சான்றோர் மன்றதனில்*
*புதுவனொரு பெருமூடன் புரையற்ற பாட்டதற்குக்*
*கதுமெனவே முனிதக்க கருத்துதிர்த்தான்; அதுகேட்டு,* 114

வேலடியே பட்டதென வெகுண்டுவிட்ட ஒருசான்றோர்
நாலடியார் தமைநாடி நயந்துநின்று கேட்கின்றார்:
'வேலடிமுள் போன்றுறுத்தும் வீண்கருத்தைக் கேட்டும்நீர்
சாலடித்துச் சாடாமல் சமழ்த்தீரே; ஏன்' என்றார். 115

நாலடியார் பாட்டு:

"பாடமே ஓதிப் பயன்றெரிதல் தேற்றாத
மூடர் மனிதக்க சொல்லுங்காற்—கேடருஞ்சீர்
சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே மற்றவரை
ஈன்றாட் கிறப்பப் பரிந்து'[13]

பாடினார் நாலடியார்; பாடியதில் வெண்பாச்சீர்
நேடினார் நேர்மைமொழி; நேடியதில் மூடனையே
சாடினரோ? அவன்தாய்க்குச் சார்வாகப் பரிந்துநின்று
நாடியஅச் சான்றாண்மை நயமோர்தல் நலமன்றோ? 116

வீட்டிற்குள் அடைந்திருக்கும் விரகற்ற ஒரு தாயை
ஈட்டிசொலால் கவிகாள மேகமவன் தீட்டியதும்,
பாட்டெடுத்த நாலடியார் பரிந்துநின்றே ஈன்றவட்குக்
கோட்டமின்றிக் கழறியதும் கூர்ந்துணர்தல் சீரன்றோ? 117

---

*சமழ்த்தனர் - மனம் தவித்தனர்

*ஊட்டமுடைத் தமிழ்ப்பண்பே ஊனமுற்று நாடோறும்*
*வாட்டமுறல் காண்கின்றோம்; வான்புகழில் தமிழரவர்*
*மீட்டிருந்து திகழ்வதற்கு மீட்டுகின்ற நற்செயலில்*
*கேட்டதாய் உவக்கும்வகை கெழுதகைமை பெருகுகவே!*
*118*

*[தரவு கொச்சக் கலிப்பாக்கள்;*
*இடையில் இரு நேரிசை வெண்பாக்கள்]*

# 23. பண்பு-அடையாளச் சின்னம்

பழந்தமிழர் பண்பாடு பழகுந் தோறும்
பசுந்தென்றல் பட்டலரும் மலராய்த் தோன்றும்;
பழந்தமிழில் இனிமையொடு பரிவுந் தோன்றும்;
பசுமைதவழ் எண்ணங்கள் பளிச்சிட் டேறும்;
பழந்தமிழ்நா டியற்கையெனும் பதிவில் ஊன்றிப்
பழுதில்லா வளஞ்சுரந்து *பழுனிக் காட்டும்;
பழந்தமிழ்நூல் படிப்பதற்குப் பரிவு கூட்டும்;
பயனெல்லாம் பசுமலையாய் நிலைத்து நிற்கும். 119

நிகழ்தமிழர் பண்பாட்டை நிலைநி றுத்த
நினைவெல்லாம் தமிழ்மரபில் நிறுத்த வேண்டும்;
திகழ்தமிழில் கலைச்சொற்கள் திருத்தி வைத்துத்
தீய்க்கின்ற கலப்படத்தைத் தீர்க்க வேண்டும்;
புகழ்தமிழ்நா டெனச்சொல்லப் புகட்டும் கல்விப்
பயிற்றுமொழி தமிழாகப் பதித்தல் வேண்டும்;
முகிழ்தமிழ்நூல் பகுத்தறிவின் முழுவோட் டத்தில்
முனைப்போடு மிகப்பலவாய் முடுக்க வேண்டும். 120

---

* பழுனி — முதிர்ந்து

தமிழகத்தில் புகுந்தமைந்து தமது வாழ்வில்
தழைப்பதற்குத் தக்கசெயல் தழுவி நின்றே
அமிழ்தமெனச் சுவைகண்டார் உளரே; காண்க!
அதற்கிடையில் தமிழர்க்கே ஊறு செய்த
உமிழ்செயலை நினைக்குங்கால் ஊறும் எண்ணம்
உதைத்தவரைத் திருத்துதற்கே தூண்டுங் கண்டீர்!
தமிழ்மொழியிற் பிறமொழியைக் கலப்போர் தம்மின்
தகவின்மை தகர்த்தெறிய வேண்டு மன்றே! 121

கற்றறிந்த கவினான கருத்தை யெல்லாம்
கழித்தெறிந்து, தன்கசடே கவினாய்க் கொண்டு,
புற்றெழுந்த பாம்பெனவே புரிந் தெழுந்து
புன்தொழிலே மிகப்புரிவார், புழுக்கள் அன்னார்;
மற்றிவர்க்கு மறையாத பழியால் வாழ்வும்,
மக்களொடு மனையுறவும் மறுப்பாய் நின்று
அற்றுவிழுந் துயர்தருங்கால் அமைதி கொள்ளார்;
'அந்தகோ' ஈங்கிவர்க்காய் அவலங் கொள்வாம். 122

சந்துவிட்டால் 'வந்துவிட்டேன்' என்றே ஓடிச்
சளைக்காமல் தமைப்புகழ்ந்து சார்ந்து நின்று,
பந்துவிட்டால் தனைப்பற்றும் பான்மை போலே
பலபயனும் பற்றிநின்று பதவி கொள்வார்
எந்தவகைப் பயன்பெறலாம் எற்றி' என்றே
எத்தவறும் செய்வதற்கே இணங்கி நிற்பார்;
இந்தவகை மாந்தரினால் ஏற்றம் எல்லாம்
இழிசெயலாய்ப் போவதுமோர் அவலம் அன்றோ?
123

தாயன்பை நன்குணர்ந்த தனயன் அன்றோ
தாய்மொழியைப் போற்றுகின்ற தகைவைப் பெற்றுத்
தாய்நாட்டைப் பேணுகின்ற தக்கோன் ஆவான்;
தன்விரலைத் தான்இயக்கத் தெரியா மூடன்
தோயின்ப யாழ்இயக்க வல்லான் கொல்லோ?
தொல்தமிழின் தகவறியான் தூயன் ஆகான்;
வாயின்பம் எனப்பிறரைத் தூற்றும் வாயான்
வளர்த்துவிட்ட தாய்மொழிக்கும் தாய்க்கும்
பொஃல்லான்.
124

பேரலைகள் சிற்றலையைத் துரத்தி வந்து
பெயர்ந்தேதான் சிற்றலையாய்த் தேய்ந்து மாளும்;
வீரரென்போர் ஓய்பவரை வீணே ஓட்டி
வீணாகார்; விழைந்தவர்க்கே உதவி நிற்பார்;
சீரமைப்பே வாழ்வதனில் சிறக்க வேண்டின்
சினமின்றி, வன்சொல்லும் சிறிதும் இன்றிப்
பாரதனில் பண்புடனே பழகல் வேண்டும்;
பஞ்சைகளைப் பரிந்துநின்று பேண வேண்டும்.
125

உற்றவர்க்கே ஓடோடி உதவ வேண்டும்;
உதவிபெற்றே நன்றிமறந் தெதிர்ப்ப ராயின்
மற்றவரை மனத்தகற்றி மறக்க வேண்டும்;
மற்றொருகால் உதவியெனில் மதுகை முப்பால்
சொற்றகுறள் 'நன்றா ற்றல் உள்ளும் தீய
தவறுண்டாம்; அவரவர்தம் பண்பறிந்தே
பற்'றென்ற[14] பொருள்நினைவிற் பற்ற வேண்டும்;
பழிநேரா தலைகொள்ளப் பரிய வேண்டும்.
126

பெற்றவர்கள் பண்பின்றிப் பேசிக் கொண்டால்,
பிள்ளைகளோ கொச்சைகளாய் ஏசிக் கொள்ளும்;
கற்றவர்கள் கடுஞ்சொல்லை வீசிக் கொண்டால்
காண்பவர்கள் கல்லெடுத்து வீசிக் கொள்வர்;
கொற்றவர்கள் கையூட்டு கோடி பெற்றால்
கொடுத்தவர்கள் குடிமக்கள் நாடி தேய்ப்பர்,
முற்றியதே சொத்தையெனில், முளையோ வெம்பல்,
முதல்கோணல் முற்றிலுமே கோண லாகும்!
127

நாட்டினிலே நல்லவர்கள் பெருக வேண்டும்;
நல்லவர்கள் சொல்லறிந்து நவில வேண்டும்;
நீட்டுகின்ற சொல்லதனில் பண்பி ருந்தால்
நிரம்பைக்கும் இடும்பைக்கும் நிகழ்வே இல்லை;
தேட்டவளத் தமிழகத்தில் திகழும் வாழ்வு
தேர்ந்துசெயும் திறச்செயலால் தேற்ற மாகும்;
நாட்டமெலாம் நேர்மையிலே நடக்க விட்டு
நாட்டிடுவீர் நற்புகழை! நலமே வாழ்க!
128

பண்புடையார்ப் பட்டுண்டாம் உலகம்' என்றார்;
'பண்பின்றேல் உலகம்மண் ஆகும்'[15] என்றார்!
'பண்பென்றால் பாடறிந்தே ஒழுகல்'[16] என்றார்;
'பண்பில்லார் அரம்எனினும் மரமே' என்றார்;
பண்புடைமை பகைநட்பாக் கொள்ளும்'[18] என்றார்;
'பண்பின்றேல் அன்பில்லை, இல்லை'[19] என்றார்
பண்பொன்றே மக்கள்அடை யாளச் சின்னம்;
பண்பென்னும் உயிர்கொண்டு பணைத்து
வாழ்வோம்.
129

நிகழ்தமிழர் பண்பாட்டை நிலைநி றுத்த
நினைவெல்லாம் தமிழ்மரபில் நிறுத்த வேண்டும்;
திகழ்தமிழில் கலைச்சொற்கள் திருத்தி வைத்துத்
தீய்க்கின்ற கலப்படத்தைத் தீர்க்க வேண்டும்;
புகழ்தமிழ்நா டெனச்சொல்லப் புகட்டும் கல்விப்
பயிற்றுமொழி தமிழாகப் பதித்தல் வேண்டும்;
முகிழ்தமிழ்நூல் பகுத்தறிவின் முழுஓட் டத்தின்
முனைப்போடு மிகப்பலவாய் முடுகல் வேண்டும்.
130

[எண்சீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 24. தைத் திங்கள்.

தங்கம் எனில்தள்ளித் தண்டமிழை அள்ளுகின்ற
*துங்க மறத்தமிழர் 'துன்னும் வளமெல்லாம்
எங்கள் தமிழகத்தின் ஏற்றங்காண்' என்றவராய்ச்
சங்கில் முழக்கமிட்டே, சாலக் களிப்புற்றுப்
'பொங்கல்' எனும்பேர்ப் பொலிவாம் விழாக்கண்டார்;
திங்கள் இரண்டாறில் தேர்ந்தெடுத்தார் தைம்முதலே.
131

கொண்ட தொழில்முற்றிக் கொள்ளும் பயன்அள்ளி,
அண்டத் துயிருக் களித்து மகிழ்ந்தபின்
உண்ட உணவே உவப்பாம், இனிப்பென்று
கண்டார் களிபொங்கல், கன்னல், கதலி,பால்
தண்டாச் சுவைகொள் தமிழமை பொங்கலாய்;
'உண்டோ உலகிலிதற் கொப்'பென்பார் போன்றே.
132

* துங்கம் - தூய்மை

வெம்மை தணிய வேண்டுநம் நாட்டிற்குத்
தண்மை தருந்திங்கள் தைத்திங்கள் அன்றோகாண்!
செம்மை பிறக்கச் செழுந்'தை' பிறக்குமென்பார்;
நம்மை மகிழ்த்தி நறுவாழ்வைத் தோற்றுகின்ற
* கொம்மைத் தைம்முதலைக் கொள்ளுவம், புத்தாண்டின்
‡ சும்மைப் புதுநாளாய்ச் சுவைப்பம் தமிழ்ச்சுவையே.
133

தை'எனும் சொல்லடியால் '†தைவரல், தைத்திடல்,
தையல்'என் சொற்கள் தளிர்த்தன; அவ்வெலாம்
கையால் தழுவல், கவினாய் இணைத்திடல்,
மொய்குழல் மங்கையாய் மொய்க்கும் பொருள்கண்டு,
தையலை இணைத்துத் தழுவும் திருமணத்தைத்
தையமை திங்களில் தண்டமிழோர் கூட்டினரே.
134

---

* கொம்மை - பூரித்த பெருமை; ‡ சும்மை - நெற்போர்
† தைவரல் - தழுவல்

தைத்திங்கள் நீரோடைத் தண்மை நலம்என்றார்;
தைத்திங்கள் தண்ணிய தண்மைக்குச் சான்றாகும்;
தைத்தென்றல் வீச்சு தனிக்குளிர் இன்பமாம்;
தைத்திங்கள் காதல் தழுவல் புதுமையாம்;
தைத்திங்கள் இவ்வாறு தக்கபல் லின்பமே
* தைக்கக்கூத் தாடுவோர் 'தைதை'என் றாடுவரே.
135

[ஆறடித் தரவு
கொச்சகக் கலிப்பாக்கள்]

* தைக்க - இணைந்து பொருந்த

# 25. கையிலொரு தாலியுடன் வருவேன் கண்ணே!

தலைவன் :

*வெப்பத்தால் நலிந்தவனை விலக்கி விட்ட*
*விரைமலர்த்தீம் பொய்கையதைக் கண்டே னில்லை;*
*கப்பியதோர் பசிகொண்டோன் கலங்கி நிற்கக்*
*கனிமரந்தான் தடுத்ததெனக் கேட்டே னில்லை;*
*'தப்பத்தான் நம்மணத்தைத் தள்ளி வைத்தல்;*
*தவிக்கின்றேன் அறியீரோ' என்ற நீயே*
*ஒப்பத்தான் மறுக்கின்றாய் மணத்திற் கின்றே;*
*ஒண்டொடியே, தடையென்ன கண்டாய் கண்ணே!*
136

தலைவி:

*அத்தானே! அன்பூறுந் தமிழத் தேனே!*
*'அடுக்காது சாதிவிட்டுச் சாதி போதல்;*
*செத்திடவா; வாழ்ந்திடவா' என்றாள் அன்னை;*
*'செத்திடுபோ' எனச்சொல்லித் தடைநீக் கிட்டேன்;*
*'சொத்தில்லை, அப்பனில்லை' என்றார் தந்தை;*
*சொத்தையுங்கள் பேச்சென்று சொல்லி வைத்தேன்;*
*இத்துணைக்கும் மேலாக என்தாய் மாமன்*
*எதிர்த்துவந்தார்; எடுத்தெறிந்தே ஏசி விட்டேன்.*
137

தலைவன்:

தடையென்ன இனிக்கண்ணே? தளர்ச்சி யென்னே?

தலைவி:

தமிழ்த்தாயின் முகங்கண்டேன்; தளர்ந்து போனேன்.
படைபடையாய் வடபுலத்தார் பலமு னையில்
பயிரழிக்கும் விட்டிலெனும் பழுதார் இந்தி
நடைமுறையில் திணிக்கின்றார், நலிவே செய்வார்.
நந்தமிழ்த்தாய் தாழ்ச்சியொடு நறுந்த மிழ்நர்
அடைந்துள்ள பெருந்தாழ்வை அகற்று முன்னர்
அத்தானே, நமக்குமொரு 'திருவாழ்' வுண்டோ?

138

தலைவன்:

அப்படியா! அதுசரியே; அறிவு கெட்டேன்;
ஆரணங்கே! தமிழ்க்குலத்துக் காவற் பெண்டே!
இப்படியோ சூடுதந்தாய்; இனித்தாழ்க் கேன்யான்
இன்றமிழ்க்கே இந்திதன்னால் இடுக்கண் சூழும்
செப்பிடுவித் தைக்காரர் செயல்தூ ளாக்கிச்
செந்தமிழ்நாட் டினில்நுழைந்த இந்தி தன்னைக்
கைப்பிடியாய்ப் பிடித்துடனே அனுப்பி விட்டுக்
கையிலொரு தாலியுடன் வருவேன் கண்ணே

139

[எண்சீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 26. பறந்தே போ!

மரத்தடியில் தனித்தவனாய்ப் படுத்தி ருந்தேன்;
மகிழம்பூ 'பொலபொ'லென்றே உதிர்ந்த தங்கே;
உரத்ததொரு குரலெடுத்து 'யார்தான் அங்கே
உதிர்த்த' தென்றேன்; உருக்காணேன்; சொல்லே கேட்டேன்:
'மரத்தடியின் மணவாளா! மணமா காத
மங்கைநான், பலரணைக்கும் பெண்ணென் றாலும்
பரத்தையல்லேன்; ஆடிவரும் பருவத் *தென்கால்
பெயரெனக்கு; கவிஞரெலாம் 'தென்றல்' என்பார்'
140

எனக்கூறி முடிக்கவில்லை தழுவி விட்டாள்;
என்னுடலில் இன்பந்தான் ஓடக் கண்டேன்;
'உனக்கெனவே இங்குவந்தேன்; ஆயி னும்யான்
உடன்போக வேண்டுமங்கு காத்தி ருப்பான்;
கணக்காக நேற்றுமாலை கழறி வந்தேன்,
'கட்டாயம் இன்றுமாலை வருவன்' என்றே
மனக்கவலை கொள்ளாதே விடைகொ' டென்றாள்;
'மற்றொருவன் யார்'என்றேன்; மாற்றம் சொல்வாள்:
141

---

* தென்கால் - தெற்கிலிருந்து வீசும் காற்று.

'கொட்டுகின்ற தேள்போலுந் தனிமை தன்னில்
கொதித்ததனால் இன்றைக்குக் குமரி யோடு
கட்டிளைஞன் வந்திருப்பான் கைகோத்' தென்றாள்;
'கட்டழகி பக்கத்தில் காந்தட் கையால்
தொட்டணைத்த படியிருப்பாள்; தோழி உன்பால்
துளியேனும் நோக்கமிடான், நில்லாய்' என்றேன்
மொட்டினிலே சுற்றிவரும் மோப்ப வண்டாய்
மொய்த்தென்னைச் சுற்றிவந்து மொழிய லானாள்: 142

'நெருப்புக்கு முன்னமர்ந்திட் டெதையோ சொல்லி,
நெய்யுணவை விழுங்கிவிட்டுச் சந்த னத்தால்
உறுப்பெல்லாம் பூச்சிட்டே ஐய ரங்கே
உடல்வியர்வை வழிந்தோடச் சாய்ந்தி ருப்பார்;
விருப்பில்லா அவ்வியர்வை விலக்கு தற்கு
விரைந்தேக வேண்டாமோ விளம்பாய்' என்றாள்;
'துருப்பெனவே கைநழுவா விசிறி யங்கு
துணையிருக்கும்' எனப்பகர்ந்தேன்; துணிந்து சொல்வாள்: 143

வெய்யிலுக்கே உடல்மறைத்து வளம னைக்குள்
வேலிஎண்ணும் நோயினென்னும் ஒன்றாய்க் கொண்டு
பொய்யுடனே வஞ்சகந்தான் பொலிவுக் கென்று
பொழுதெல்லாம் அதைநடத்தும் பணத்தோட் டத்தார்
கொய்யாத மலர்போலும் கொழும் உடற்கே
குளிரேற்றப் போகவிடை கொடுப்பாய்' என்றாள்;
'கையடித்தால் காற்றடிக்கும் மின்னாற் றல்தன்
காற்றிருக்க நீயெதற்கு வேண்டாம்' என்றேன். 144

'கோழிகூவக் கேட்டெழுந்து, கோட்டான் தன்னின்
கூக்குரலால் குடிசைவந்து கூழ்கு டித்துப்
பாழ்இமையை மூடுதற்குப் படிக்கட் டின்மேல்
படுத்துதலை யணைத்துக்கண் படுக்கும் போது
தோழியென நான்தழுவத் தொடர்வன்' என்று
தோள்பெயர்ந்தாள்; 'நடைவேண்டாம் நேரம் போகும்;
வாழியஎன் தென்றலன்பே, ஓட்ட மாய்ப்போ!
வான்வழியே பறந்தேபோ' எனம றைந்தாள். 145

[எண்சீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 27. மே நாள்- ஓர் எச்சரிக்கை.

படுக்கைக்கே ஒய்வளித்து மச்சா னோடு
பண்ணையர்க்கே வாழ்வளிப்பாள்; அவள்வாழ் விற்கோ
வடுக்களையே பரிசாகப் பெற்றி ருப்பாள்;
வளமெல்லாம் படைத்திடினும் உரிமை யின்றி,
அடுப்பினிலே நெருப்பேற்ற வகையு மின்றி
அடிவயிற்றில் நெருப்பேற்றி அயரும் நாளில்,
'அடுக்காது கொடுமை'யென அலறு கின்ற
அந்நாளில் மேநாளின் வாடை வீசும்! 146

'கரம்பையினைப் பண்படுத்திக் கழனி யாக்கிக்
கணக்கில்லாப் பொருள்குவித்துக் கனிந்த நாங்கள்
நிரம்பாத மூளிகளாய் நிலவும் போதில்,
நிலவொளிபோல் உடலமைந்த நீவிர் சில்லோர்
வரம்பில்லாச் சுவைபெறுதல் ஏன்?ஏன்?' என்றே
வல்லுழவர் கேட்டுவிடின் வளைந்த அன்னார்
நரம்பெல்லாம் முறுக்கேறித் துடித்துப் போகும்;
அத்துடிப்பே மேநாளாய் வெடித்துப் போகும். 147

பல்லிளித்து வந்தவர்கள் பதவி பெற்றுப்
பழையவரைச் சுரண்டலொடு தாழ்த்து கின்ற
பொல்லாங்கு தீரத்தம் வாழ்வு வேண்டிப்
பொங்கியெழும் போதவரின் கிளர்ச்சி யெல்லாம்
வெல்லவரும் மேநாளின் மறுப திப்பாம்,
வளவாழ்வில் தருக்கிநிற்பீர்! தாழ்ந்த வர்கள்
சொல்லுகின்ற மேநாளின் செய்தி உங்கள்
செழிப்புக்கே எச்சரிக்கைச் செய்தி யாகும்!
148

'நிறையீட்டால் குறைதவிர்க்கும் எங்கள் வாழ்வின்
குறையீட்டைத் தகர்த்திடுமின்' என்று ழைப்போர்
அறைகூவி நெஞ்சழுகிக் கூறு கின்ற
முறையீட்டைப் புறக்கணித்தல் மடமை யாகும்;
முறையீடு முறைப்பாடாய் மாறிப் பின்னர்
முறைப்பாடும் தாக்கீதாய் மீறிப் போனால்,
சிறையீட்டின் தலையீடு செல்லா தாகும்;
சொல்லிவைத்தோம்; மேநாள்தான் வெற்றி சூடும்!
149

[எண்சீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 28. [20]நல்ல குத்தகை.

மன்னவர் குடிதனில் சின்னையர் பண்ணையார்
பன்னிரு வேலிநிலம் பட்டா உடையவர்;
தன்னலம் அவரது தனிக்குணம்; படுத்தே
தன்நில விளைச்சலைத் தான்காண விரும்பினார். 150

காத்தான் என்றொரு பண்ணையாள், தன்நிலம்
காத்தான் என்பது கணக்கொடு கண்டவர்;
காத்தான் சேரிக்குக் காலையி லேபோய்க்
'காத்தா' என்றனர்; காத்தனும் வந்தனன். 151

'தன்னலம் நோக்காது என்னலம் நோக்கியே,
பன்னெடு நாள்களாய்ப் பண்ணைநீ செய்கிறாய்;
அன்னதால் குத்தகைக் கென்நிலம் யாவையும்
உன்னிடம் விடுகிறேன், மாவிற்குப் பத்தாய். 152

நல்லமண் ஆகையால் நன்னான்கு விளைவதும்
எல்லையே என்பதும் நல்லைநீ அறிந்ததே;
செல்லும் விரைதசு செலவுகள் உன்னதே;
சில்லரைக் கடன்களும் தருகிறேன்' என்றார். 153

மச்சான் பிச்சையும், மருமகன் முருகனும்
கச்சூரி லிருந்து கடுகிவந் தடைந்தனர்;
சச்சர விலாமலே சளைக்காமல் கவலையாய்
மிச்சங் கண்டிடவே மாடோ டுழைத்தனர். 154

'அழுதிட்ட வாழ்க்கையில் அலைந்தோம் பலநாள்
பழுதினைப் போக்கியே பெருகுவோம் இனி'எனத்
தொழுதனர் கடவுளைக் கொளுவினை மாட்டியே
உழுதனர் நிலத்தினை ஊடுருவி ஆழமாய். 155

விதைத்தனர்; பறித்தனர்; விரைவாய் நட்டனர்;
சதைத்தாள் கதிர்கள் சாய்ந்திடும் வேளையில்
சிதைத்தது காற்றும், சேர்ந்தது சூரையும்;
பதைத்தனர் 'விளைந்தது பத்துதான்' என்றதும். 156

செத்திடா உடலினான் சென்றான் ஐயரிடம்;
'சொத்தையும் சூரையும் சொக்கிய' தென்றான்
'பத்துக்குக் குறையாமல் பதரெலாம் தூற்றியே,
மொத்தமாய் வரவேண்டும் முழுமையாய்' என்றார். 157

'வஞ்சகம் என்னிடம் கொஞ்சமும் இல்லையே;
வஞ்சமாம் காற்றினால் பஞ்சையாய்த் துடிக்கிறேன்;
கஞ்சிக்கே அலைந்திட கடுகாதீர்' என்றுமே
கெஞ்சினான்; தொழுதான் எஞ்சாமல் உழைத்தவன்
158

'என்னிடம் நில்லாதே சொன்னபடி செய்தி' டெனக்
கன்னாத உடலினார் கழறவே 'வயிற்றுக்கும்
என்னரும் மக்கட்கும் எதுதான் வழி'என்றான்
'தின்னுபோ மண்'எனத் திமிரினால் உருமினார்.
159

கண்டுமுதல் எல்லாம் கொண்டுபோய்க் கொட்டினான்;
விண்ட நிலைபெற்றே விளிந்தது குடும்பமே;
கண்டாலும் பண்ணையார் கவலைமேற் கொள்வரோ?
உண்டநாய் போலவே உலவித் திரிகிறார்.
160

நெல்லெலாம் வந்தபின் நெருக்கினார் பணத்திற்கே.
இல்லாத அடிமையாய் இறைவனை வாழ்த்தியே,
பல்லெலாங் காட்டியே பண்ணையாள் ஆயினான்;
கல்லுருப் பெற்றதால் கடவுளும் பாழே!
161

[கலி விருத்தங்கள்]

## 29. [21]முதலடிதான் பாடுகிறாய்.

எனதருமைக் கருங்குயிலே!
 எனைமயக்கும் இசைப்படமே!
உனதருமைக் குரலெடுத்தே
 உவகைதரும் பாட்டிசைப்பாய்!
மனதறுத்த அடிமைநிலை
 மடிந்துவிட்ட தினியிங்கே;
தனதாட்சித் தொடக்கமெனத்
 தலைநிமிர்த்திக் கூவிடுவாய்! 162

'வெளிக்கதவைத் திறந்துவைத்தே
 வெண்கழுகை விரட்டிவிட்டேன்;
களிக்கின்றேன் விடுதலையால்
 கவிக்குயிலாய்ப் பறக்கின்றேன்;
குளிக்கின்றேன் தன்னுரிமைக்
 குளத்தினிலே' எனக்குதித்துத்
தெளிக்கின்ற முதலடியைத்
 தெள்ளமுதாய்க் கூவிடுவாய்! 163

நல்லிசையில் இனிக்கின்ற
    நறும்பாட்டால் முதலடிதான்
சொல்லுகின்றாய் கருங்குயிலே!
    செழிப்பெல்லாம் தனதென்னும்
பொல்லாத பருந்துனது
    பொந்துக்குள் இருப்பதனை
வெல்லுவதால் மற்றடியை
    விரித்திடலாம் முயற்சிப்பாய்!

164

அலுப்பின்றி, உழைப்பின்றி
    அடுத்தவனைச் சுரண்டுகின்ற
உலுத்தரெனும் கோட்டான்கள்
    உன்னகத்தில் வளர்வதனைக்
'கழுத்தினிலே கைவைத்துக்
    கவிழ்த்துவிட்டேன்' எனும்இசையை
எழுப்புவதே உன்பாட்டின்
    இறுதியடி முயற்சிப்பாய்!

165

[தரவு கொச்சகக்
கலிப்பாக்கள்]

# 30. [22]புதுக்கினர் எமனுக்கு வாய்.

'அன்பெனில் உனக்குநான் ஆள் ஆள் ஆள்—அதை
அடுபகை எனிற்கடுந் தேள் தேள் தேள்;
வன்பெனில் வந்துபார் தூள் தூள் தூள்—வசை
வாலதைச் சுருட்டிநீ மீள் மீள் மீள்;
பண்பெனில் உனக்குநான் கேள் கேள் கேள்;—அறப்
பண்புடை உலகமே கேள் கேள் கேள்'
என்பதே இந்தியச் சூள் சூள் சூள்—உடன்
றெழுந்தன வெற்றிகொள் தோள் தோள் தோள். 166

'என்னருங் காளையே பாய் பாய் பாய்!—எழும்
எதிரியாம் புல்லரை மேய் மேய் மேய்!
மண்ணிலும் விண்ணிலும் தேய் தேய் தேய்!—மடை
மறிகடல் தன்னிலும் சாய் சாய் சாய்'
என்றனள் இந்திரா தாய் தாய் தாய்—உடன்
எழுந்தனர் இந்தியச் சேய் சேய் சேய்;
பொன்றினர் பகைவரைப் போய்ப் போய்ப் போய்
—புழை
புதுக்கினர் எமனுக்கு வாய் வாய் வாய். 167

தாக்கிட எடுத்தனை போர் போர் போர்-தடை
தகர்த்தனர் முப்படை வேர் வேர் வேர்;
மூக்குடை பட்டனை *ஓர் ஓர் ஓர்—முடை
மூளிக்குப் பின்னுண்டோ †ஏர் ஏர் ஏர்?
ஆக்கினர் தனிவங்கச் சீர் சீர் சீர்—அரும்
வங்கத் திழப்பினால் பார் பார் பார்!
பாக்கித் தானமுன் பேர் பேர் பேர்—குறை
‡பாக்கித் தானமே தேர் தேர் தேர்!
168

எடுபடை யின்றியே நாம் நாம் நாம்—முன்
இசைத்தனம் விடுதலைத் தீம் தோம் தீம்!
விடுபடை கொண்டொரு தேம் தேம் தேம்—நறும்
விடுதலை வங்கம தாம் ஆம் ஆம்
படிதுணை நின்றனம் யாம் யாம் யாம்—பகர்
புகழ்க்கொடி கொண்டனம் ஆம் ஆம் ஆம்!
பொடிப்பொடி யாய்ப்பகை போம் போம் போம்—புகும்
பொட்டைமி ரட்டல்கள் சாம் சாம் சாம்.
169

---

* ஓர் - எண்ணிப்பார் † ஏர் - அழகு
‡ பாக்கித்தான் - பாக்கிப்பட்ட இடம்

நாட்டிற் கிறப்பவன் ஆண் ஆண் ஆண்—அவன்
வீட்டிற்கு நாமன்றோ தூண் தூண் தூண்!
கேட்டினை ஓட்டினன் காண் காண் காண்—அவன்
கூட்டுக்கு நாமன்றோ பூண் பூண் பூண்!
நீட்டுவம் பொன்பொருள் ஊண் ஊண் ஊண்—அது
நீட்டா தொதுங்குதல் வீண் வீண் வீண்.
நாட்டறம் கூட்டுவோன் ஆண் ஆண் ஆண்—அது
நமக்கென்ன என்பவன் சாண் சாண் சாண்.
170

பங்குறும் போரெதும் பேய் பேய் பேய்—பகைப்
பாக்கித்தான் நமக்கொரு நோய் நோய் நோய்.
கங்குசீ னம்எட்டிக் காய் காய் காய்—இவை
கனவினும் மறந்திடல் தீய் தீய் தீய்!
அங்கொரு இந்திரா யாய் யாய் யாய்—தமிழ்
இங்கொரு கலைஞராம் சேய் சேய் சேய்.
துங்கசோ வியத்தொடு தோய் தோய் தோய்—நலம்
துலங்கிடும்; வாழ்த்துவம் தாய் தாய் தாய்!
171

வந்தவிப் போரிதால் தான் தான் தான்—புது
வங்கம லர்தந்த தேன் தேன் தேன்.
இந்தியப் போர்த்திறம் வான் வான் வான்—புகழ்
இட்டது பாரினில் மேன் மேன் மேல்.
நந்தமக் குள்பிரி வேன் ஏன் ஏன்—என
நாட்டினர் ஒற்றுமைத் தேன் தேன் தேன்
பைந்தமிழ் மேலாணை யாம் யாம் யாம்—உடன்
பாரித்தோர் சூளுற்றோம் காண் காண் காண்!

172

[இடையே ஓரசைக் கூன் அமைந்த
அறுசீர் ஆசிரிய விருத்தங்கள்]

# 31. படைஞர் [இராணுவ] ஆட்சி.

*சிரித்தனையோ கொல்லைவளர் முல்லாய்!*
*சிக்கடுத்த அரசியலை எண்ணி,*
*விரித்தனையோ இதழ்க்கட்டை முல்லாய்!*
*விரித்தவலை ஆட்சிதனில் பல்லோர்,*
*அரித்துவருங் கறையானாய் மாறும்*
*அதுபொழுதாய்ப் படைஞரவர் ஆட்சி*
*கறித்தெழுதல் நினைத்தனையோ; அல்லால்,*
*'களுக்'கென்றே ஏன்சிரித்தாய் சொல்லாய்!* 173

*படையொருகை, கோலொருகை கொண்டே*
*படைஞரவர் ஆட்சியெழுந் திட்டால்,*
*புடைபெயரும் பெருந்தலைகள் சாயம்*
*'பொள்'ளெனவே வெளுப்பதைநி னைந்தோ,*
*தடையதுவும், குடைவதுவும் வீணே*
*தாக்குவதால் தளர்ந்தபொது மக்கள்*
*தொடைநடுங்கும் நிலைநினைந்தோ முல்லாய்,*
*தொடர்ந்தவெடிச் சிரிப்புற்றாய், சொல்லாய்!* 174

‘ஊர்பறிக்கும் வணிகரவர் மிக்கார்;
‘ஊதாரி’ச் செலவினத்தார் ஆள்வோர்;
நேர்மையதை விற்றுவளர் செல்வர்;
நெடுந்தூக்க மந்தைகளாம் மக்கள்;
பேர்இவற்றின் அறிகுறியே கண்டீர்,
பெரும்படைஞர் ஆட்சிமூண்ட’ தென்றே
ஊர்சிரிக்க நீசிரித்தாய் போலும்!
உன்சிரிப்பை அடக்கஎவர்க் கேலும்?

175

[அறுசீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 32. வானம் பாடி நீ மானம் பாடு

பக்குவக் கண்களை நீட்டி,—எழிற்
பாட்டின் அலைகளை ஓட்டி,
திக்கெலாம் யாரையோ தேடி,—உடல்
திரிகின் றவானம் பாடி!
கொக்கென வாழ்பல பேரில்—உனைக்
கொத்திய காதலர் யாரில்,
சொக்கிப் பறக்கின்றாய் துள்ளி—அதைச்
சொல்லிப் பறந்திடு கள்ளி! 176

பூவையர் குரலில் கூடி—இசை
பூணுகின் றவானம் பாடி!
பாவை,நீ வானத்தை நோக்கி—ஒன்று
பாடவில் லையது பாக்கி:
தேவைக் குழைத்திடும் தோழர்,—உடல்
தேம்புகின் றதிரு வாளர்,
சேவைக் குயர்வினைப் பாட்டாய்—வாழும்
செல்வர் திருமுன்னர் நீட்டாய்! 177

மக்கள் விழி,உடல் பட்டு—மலை
மண்ணில் இணைந்ததால் கெட்டு,
தொக்கநீர் உண்ணாது தள்ளி—வானம்
தூவிடும் முத்தென உள்ளி,
நக்க முழுமதி உருகி—வழி
நற்றுளி அமுதெனப் பருகி,
சொக்கு குரலடைந் தாயே—இணை
சொல்ல வழியடைத் தாயே! 178

கொல்லி மலைசேரத் தாவி,—உயிர்
கொல்லும் இசையினில் கூவி,
செல்லும் வழியினில் தோற்பாய்;—ஒரு
செல்வி குரலுக்கு வேர்ப்பாய்!
கெல்லியென் உயிரில் பாதி—வாரிக்
கொண்டவள் அவளென் தாதி,
மெல்லியல் தனக்குச் சேதி—இசை
மெருகொடு சொல்லிப் போதி! 179

'சென்றவர் மீள்திசை நோக்கி—உயிர்
செல்வதை ஈர்த்துநான் தேக்கிப்
பொன்றிடும் வாயினில் உள்ளேன்—துணைப்
பேடையே, கண்டாயோ; விள்ளாய்!
என்றுனைக் கேட்பது முறுதி—அவட்
கிதனைச் சொல்லிதே இறுதி:
தென்றமிழ் யாவினும் ஆளும்;—அவள்
தெள்ளுடற் கென்னின்பம் மீளும்'.

[அடிதோறும் இடையே ஓரசைக்கூன்
பெற்ற அறுசீர் விருத்தச் சந்தப் பாட்டு]

# 4.[23] தன் நெஞ்சு அறிவது



நெஞ்சறிந்த உண்மைகளை
விஞ்சிவரும் பட்டறிவைக்
கொஞ்சுதமிழ்த் தாய்மொழியின்
செஞ்சொலினால் பாடுகின்றேன்.

பாடாமல் விட்டுவிடின்
சூடாகும் என்நெஞ்சம்;
கூடாது சூடெனவே
பாடிவைத்த வள்ளுவர்சொல்:

"தன்னெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"
(குறள்: 293)

'கவிஞர்கோ' கோவை. இளஞ்சேரனின்
அறுபதாண்டு அகவையின் அறிவுப் பாட்டு;
பட்டறிவை உருக்கி வார்த்த பதிவம்;
உலகியல் ஊட்டாட்ட உணர்ச்சிப் பட்டயம்;
மொழியின் பாங்கை முரலும் முத்திரை:

↓

## ஆறு பத்து:


| | பொருள் எண் |
|---|---|
| மொழிப் பத்து | - 33. |
| நெறிப் பத்து | - 34. |
| நிறைப் பத்து | - 35. |
| குறைப் பத்து | - 36. |
| பணிப் பத்து | - 37. |
| பொதுப் பத்து | - 38. |

# 33. மொழிப் பத்து.

போற்றுவதும் வாழ்த்துவதும்
பொழியன்பை அறிவதனைப் புலப்பா டாக்கித்
தோற்றுவதும் மாந்தன்எனத்
தனிப்படுத்தித் தோற்றியதும் மொழியே கண்டேம்;
சாற்றிவரும் மொழிகளிலே
சால்பமைந்த சொல்லாலும் பொருளி னாலும்
மாற்றுயர்ந்த செந்தமிழே!
மனமொன்றிப் போற்றுகின்றேம்; மாற்றே காணேம் 181

அம்மா'என் றன்பூறும்
அமுதச்சொல் சுரந்தெம்மை அருமை செய்த
அம்மாவோ! செந்தமிழாம்
அன்னேயோ! ஆருயிர்க்குள் ஆர்ந்தாய் கண்டேம்;
அம்மா!எம் நா,கையை
அசைத்ததனால் அவைபெற்ற அருமைப் பேற்றை
அம்மாவோ என்'என்றே
செம்மாந்தே வாழ்கின்றேம்; சிதைவே காணேம். 182

வாயூறுஞ் சுவையூற்றாய்,
வளம்ஊறுஞ் சொல்லூற்றாய், வனப்பின் ஊற்றாய்த்
தாயூறும் அன்பூற்றாய்த்
தனித்தூறுந் தேனூற்றாய்த் தமிழைக் கண்டேம்;
ஆய்வாலும் அகழ்வாலும்
அறிவாலும் உணர்வாலும் அணுகித் தோயும்
தோய்வாலும் நூல்படைக்குந்
தொழிலாலுந் திகழ்வன்றித் தொய்வே காணேம்.
183

இளநுங்கு, கற்புமனை,
இசையாழோ டிளந்தென்றல், இரவு வானம்,
வளவயல்நெல், மழலைச்சொல்
வழங்குவதை இன்பத்தின் வடிவாய்க் கண்டேம்;
உளம்உவக்கும் இவையாவும்
ஒருங்கிணைந்த பேரின்ப ஒலிய தாகிப்
புலம்உவக்கப் பொலிகின்ற
பைந்தமிழைப் போல்உலகிற் புதுமை காணேம்.
184

உள்ளுணர்வின் ஊற்றுக்கண்,
    உயர்நோக்க நாற்றங்கால், உண்மை நன்செய்,
தெள்ளுபொருள் கதிர்மணியாய்த்
    திகழ்சங்கத் தமிழ்நூல்கள் திகழக் கண்டேம்;
அள்ளுறும் இவையுண்டால்
    அன்பூறும்; பண்பூறும்; அறிவே ஊறும்;
ஒள்ளியகா தல்,வீரம்
    உடனூறும்; இடையூறே ஊறல் காணேம்.

185

பலமொழிகள் பயில்வதனால்
    பரந்தறிவு பெருகிவரும்; பயனும் உண்டாம்;
கலவைமொழி ஆக்காமல்
    கற்றிடுதல் எம்மொழிக்கும் காப்பே கண்டேம்;
உலவுமொழி அரபிதனில்
    ஒருசொல்லிற் பிழையெனினும் ஒவ்வார்; சோர்வார்.
குலவுமொழித் தமிழதனைக்
    குலைத்துவரும் பிழைக்கென்று குலைவோ காணேம்.

186

பழுத்ததமிழ்ச் சொல்லிருக்கப்
பிறமொழிச்சொல் கலப்பதனால் பைந்த மிழ்ச்சொல்
வழக்கொழிந்து போகாதோ?
வண்டமிழ்ச்சொல் குறையாதோ? வடவெ ழுத்தை
இழுத்திழுத்துக் கலந்தெழுதும்
இழிசெயலைத் தமிழர்களும் இயற்றல் கண்டேம்;
கழுத்தறுப்புக் காரர்இவர்
கைக்கொள்ளும் மொழிக்கொலைவே றெங்குங்
காணேம்!

187

உலகத்தில் முன்னேறி
உயர்ந்துவரும் நாடன்றோ சப்பான் நாடு!
பலகலையும் அந்நாட்டார்
பரிவுடனே தாய்மொழியில் பயிறல் கண்டேம்;
அலகில்லாச் சொற்படைத்த
அருந்தமிழே! 'மம்மி'யென்றே 'அம்மா' சொல்லி,
மழலைகளைக் குலைக்கின்ற
மடமைதான் மாறுவதும் என்றோ காணேம்!

183

பேச்சிற்கும் வாய்ப்பிற்கும்
　　பெரும்படியாய்ப் பைந்தமிழைப் பற்றிக் கொண்டு
பூச்சிற்கும் பூசெய்க்கும்
　　பூரிப்பாய் வடமொழியைப் புனையக் கண்டேம்;
மூச்சிற்குள் ஒன்றுவைத்து
　　மூக்கிற்குள் வேறுவைப்பார் முகத்தைப் பார்த்துப்
பேச்சிற்குத் தாந்தமிழர்,
　　பிறப்பிற்குத் தமிழரெனப் பிறங்கக் காணேம்.
189

தமிழ்க்கடவுள் முருகன்எனத்
　　தமிழ்ச்சான்றோர் பகர்ந்திட்டார்; தமிழ்க்குப் பொல்லார்
தமிழ்ச்சொல்லாம் முருகுவிட்டுத்
　　தனிப்பெயர்[24]சுப் பிரமணியன் தந்தார் கண்டேம்;
சிமிழ்ப்பொருளாம் நல்லபிரா
　　மணனென்றே தமிழ்க்கடவுள் சிதைத்தல் நன்றோ?
கமழ்பொருளாம் மொழிமாறின்
　　வழிமாறும், பழியேறும்; உணர்வார் காணேம்.
190

# 34. நெறிப் பத்து.

நெறியென்றால் ஒழுங்குவழி;
நுல்-நெல்-இன் வளர்ச்சிச்சொல்; நேர்மைப் பாதை,
அறிவார்ந்த வழக்குநடை,
அறஞ்சார்ந்த முறையோடே அமைப்புச் சீர்மை,
செறிவார்ந்த நூற்பாதை,
செம்மைசால் ஒழுக்கம்இவை பொருளாய்க் கண்டேம்
குறியில்லாக் கடைப்பிடியும்,
குணமில்லாக் கோட்பாடும் நெறியாய்க் காணேம்.
191

மொழிக்கும்நன் மரபிற்கும்
முன்னைத்தொல் காப்பியமும், முறையாய்ச் செல்லும்
வழிக்கும்நல் வாழ்விற்கும்
வள்ளுவமும் நன்னெறியாய் வாய்ப்பக் கண்டேம்;
செழிக்கும்முத் தமிழ்க்கலைக்குச்
சிலம்பஃதும், புதுமைக்குக் கவிதைப் பாங்கு
கொழிக்கும்பா ரதியாரும்
பாரதிதா சனாரும்போல் சிறக்கக் காணேம். 192

தனக்குத்தான் துலாக்கோலாய்த்
    தன்தகுதி தானறிதல் திறவு கோலாய்,
மனச்சான்று செங்கோலாய்,
    மாசின்மை நிறைகோலாய் மதித்துக் கண்டேம்;
குணக்குன்றாய் வாழ்வோரைக்
    குறைதீர்க்கும் நல்லாரைக் கும்பிட் டேத்தி
எமக்கேற்ற சான்றோராய்
    ஏற்கின்ற நெறிஇவற்றால் எய்ப்பே காணேம். 193

நேருக்கு நேர்பேசல்,
    நேரத்தில் தவறாமை, நெகிழ்தல் அன்பில்,
யாருக்கும் உதவிடுதல்,
    ஏய்ப்பாரை மறந்திடுதல் யாப்பாய்க் கண்டேம்;
பாருக்குப் பகுத்தறிவைப்
    பரிவுடனே பரப்பிட்டுத் தன்மா னத்தின்
வேருக்கு நீர்பெய்த
    *வெண்தாடி வேந்தர்நெறி விடுதல் காணேம். 194

* வெண்தாடி வேந்தர் - பெரியார் ஈ.வே.இரா.

'அன்புடையான், புலமையினான்,
அருஞ்செயலில் திறனுடையான்' என்ப தன்மேல்
'பண்புடையான்' எனச்சொல்லும்
பதிவிற்கே உளமுவக்கும் பரிவைக் கண்டேம்;
துன்புடைய சாதிப்பேய்,
தொல்லைதரும் மூடங்கள், துணியாத் தாழ்வு,
என்புருக்கும் பண்பின்மை,
ஏழ்மைத்தீ இவைநெறியாய் ஏற்கக் காணேம். 195

வைகறையில் *இருக்கையிடல்,
விடியல்நூல், காலைக்குளி, பகலி லெல்லாம்
செய்பணிகள், மாலைநடை,
சேர்இரவில் எழுத்து,துயில் செயலாய்க் கண்டேம்;
மெய்யுணர்வும், மேலறிவும்
மிகுதெளிவும் பயன்விளைவும் உடல்ந லத்தோ
டெய்துகின்ற அமைதியதும்
ஏற்றுகின்ற நெறிப்பயனில் ஏங்கல் காணேம். 196

* இருக்கை - ஆசனம்

நகைக்கும்பல், தனித்தமிழ்வாய்,
நறுமூக்கு, நயக்குங்கண், நற்சொல் நாக்கு,
முகைக்குங்கை, முந்துங்கால்,
உழைக்குமுடல் இவையென்றும் உயர்த்தல்
கண்டேம்;
புகைக்கும்வாய், தம்பலப்பல்,
பொடிமூக்கு, திரைப்படக்கண், கள்சேர் நாக்கு,
தகைக்குங்கை, தடுக்குங்கால்,
தடித்தவுடல் இவைநெறிகொள் தகவாய்க் காணேம்.
197

பெரும்பாடாம் நன்னோக்கம்
பிறங்கிடவே அலுப்பின்றிப் பிழைகள் இன்றி
அரும்பாடு படுவதனால்
அடுநோயும் கவலையதும் அறுதல் கண்டேம்;
இரும்பாடும் காட்டாற்றின்
இடையுருண்டு மெருகேறும் கூழாங் கல்லில்
வெறுப்பாசி பிடித்ததென
வேடிக்கைப் பேச்சினிலும் விளம்பக் காணேம்.
198

தாமரையின் நூற்றிதழைத்
　　தகுமுல்லை மணமதனைத் தடுப்பார் இல்லை;
நாமவற்றைப் பாராட்டி
　　நலஞ்சேர்த்து மகிழ்ந்திடுதல் நாட்டிற் கண்டேம்;
தீமையற்ற திறமையதைத்
　　தினவற்ற அறிவதனைத் தம்பால் கொண்டோர்
நாமமுறு பகையெனினும்
　　நலங்கொண்டு போற்றுநெறி நலிவாய்க் காணேம்.
199

நெறிகொள்ளும் வாழ்வதுதான்
　　நிறைவாழ்வு, நீள்வாழ்வு; நீங்கல் தாழ்வு.
குறிகொள்ளும் தன்மைதான்
　　குணத்தன்மை, மனத்தன்மை; கொளாமை புன்மை.
பொறிகொள்ளும் புலத்தூய்மை
　　பொலிதூய்மை, மலிதூய்மை; புகழ்மை கண்டேம்
வெறிகொள்ளும் செயலேதும்
　　பழிகொள்ளும், முறிகொள்ளும்; பயன்கள் காணேம்.
200

# 35. நிறைப் பத்து.

நிறையென்றால் கற்பொழுக்கம்;
நுல்-நில்-இன் சொல்வளர்ச்சி; மகிழ்ச்சி, மாட்சி,
நிறைவு,துலா, மறைகாத்தல்,
மரபமைதி; பெறுபயன்கள் பொருளாய்க் கண்டேம்
கறையில்லா இவைகொண்டு
கவனமுடன் கடைப்பிடியாய்க் காணில், இன்பம்
உறைவாழ்வாம், முழுநிறைவாம்;
உயர்திணைக்கு நிறைவேற்றம் வேறாய்க் காணேம். 201

அவள்ஒழுக்கம் கற்பென்றும்
அவன்ஒழுக்கம் நிறையென்றும் ஆன்றோர் கண்டார்;
அவள்பரத்தை என்றிட்டால்
அவன்பரத்தன் என்கின்ற நூற்சொல் கண்டேம்;
அவள்கெட்டால் அலறுகின்ற
ஆணழகன் தான்கெடுதற் கழவேண் டாமோ?
எவள்கெட்டால்- எவன்கெட்டால்
எமக்கென்ன என்றிருந்தால், ஒழுக்கங் காணேம். 202

கருவறையில் காத்தளித்த
    கனிவுத்தாய், அறிவறையை அளித்த தந்தை
இருவரையே உயிருடலாய்,
    இன்னுயிர்கள் உடன்பிறப்பாய் இணைத்துக் கண்டேம்;
பெருவரவாய் நற்பெயரைச்
    சிறுசெலவாய் இல்லறத்தைத் தமிழ்நூல் தொண்டு
புரிவதிலே பெருமகிழ்வைப்
    பிறர்க்குநலம் பேணுதலைப் பிறழக் காணேம். 203

என்னென்பேம் என்னென்பேம்
    எழிற்றமிழைப் புகட்டுங்கால் ஏறும் மாண்பை!
பொன்னென்பேம் செல்வத்தில்;
    பெண்ணெனன்பேம் இன்பத்தில்; பெருமை கண்டேம்;
தின்னென்றே அமுதத்தைப்
    பூணென்றே வைரத்தைத் திரட்டி வைத்தால்
மண்ணென்றே மதித்தவற்றை
    மறுக்கின்ற மாந்தரைஇம் மண்ணிற் காணேம். 204

வணிகத்தால் பொருள்நிறையும்;
வடிவழகால் கண்நிறையும்; வளஞ்சேர் ஊட்டம்,
அணிகளினால் உடல்நிறையும்;
அளவளாவல் இல்லத்தும், புறத்தே செய்யும்
பணிகளையே திருத்தமுறப்
படைப்பதனால் மனநிறைவே பதியக் கண்டேம்;
மணிமணியாம் பலநிறைவும்
மனநிறைவைப் போல்நிறைவை மலர்த்தல் காணேம். 205

பகுத்தறிவும் நூலறிவும்
இருதட்டாய்ப் பட்டறிவு கயிற்றுக் கோப்பாய்,
வகுத்தஇலக் கணங்கோலாய்,
வளைக்காத நேர்மையதே வடித்த முள்ளாய்த்
தொகுத்துவைத்த நூல்ஆய்வைத்
தொடர்புள்ள வாழ்வைச்சீர் தூக்கிக் கண்டேம்;
புகுத்தித்தம் கருத்தைவலி
யுறுத்துவதும் வருத்துவதும் பொருத்திக் காணேம் 206

திரைமறைவுச் செய்திகளைத்
தீங்குதரும் நாற்றத்தைத் திறந்து காட்டி,
அறைபறையாய் அறிவித்தல்
அருவெறுப்புச் செயலாகி அழிக்கும், கண்டேம்;
மறைபொருளாய்த் தாம்செய்த
மாசுகளை மற்றவர்க்கு மலர்த்திக் காட்டி
அறைவாரோ? அதற்குமனம்
இசைவாரோ? அப்பணியில் அமைவார் காணேம்.
207

''வணக்கம்''என் றுரைப்பதினும்
''வணங்கிமகிழ் கின்றேன்''என் றுரைக்கும் பாங்கில்
இணக்கத்தின் இணங்குகின்ற
இடையேறும் மென்மையொலி இனிதாய்க் கண்டேம்;
கணக்கற்றோர் இத்தொடரின்
கனிவறிந்தும் பணிவறிந்தும், கையும் வாயும்
மணக்கும்வகை மேற்கொண்டார்;
'மரபளித்தோம்' எனும்நிறைவிற் கெல்லை காணேம்
208

பொதுத்தொண்டு மனநிறைவாம்;
புகழ்சேர்ந்தால் பொறாமையினார் பொல்லாங்
கேற்றி
வெதுப்புற்றே குறைசொல்வார்;
'விளம்புகுறை எம்மிடத்து 'விளைவோ' என்று
மதிப்பிட்டுத் தள்ளலுடன்
வெற்றுரைகள் மறத்தலினால் அமைதி கண்டேம்;
குதிப்பிட்டுப் பழிசொல்வார்
குணக்கேட்டைக் குணமறிந்தார் கொள்ளல்
காணேம்.
209

தமிழ்பயிற்றப் பயின்றவர்தாம்
தம்திறத்தால், தகுபண்பால் தம்கால் ஊன்றிக்
கமழ்புகழ்சேர் வாழ்வுற்றுக்
கவினுறுதல் காணுங்கால் களிப்பே கண்டேம்;
'தமிழ்கற்றோர்; தகவுடையார்,
தமிழ்ப்பகைக்குத் துணைபோகார், தமிழ்வ
ளர்ப்பார்,
தமிழினத்திற் குழைத்திடுவார்,
தவறுசெயார்' எனும்பயன்போல் தழைப்பைக்
காணேம்
210

# 36 குறைப் பத்து.

''கற்றதனால் ஆயபயன்
என்கொ''லெனுங் கருத்துடைய குறளைச் சொல்லிக்
கற்றவரைச் சாடிடுவார்,
கடவுளருள் பெற்றவராய்க் கருதல் கண்டோம்;
'கற்றதனால் ஆயபயன்'
கவின்அறிவின் தாள்அளவுங் காணல்' என்றே
கற்றவரே அறிந்திடுவார்
கடவுள்எனும் போர்வைக்குள் கவிழ்வோர் காணார் 211

'ஒழுக்கமுளான், அறிவுடையான்,
இறையன்பைக் கொள்ளாமை இழுக்கம், என்றால்
'ஒழுக்கமதில் அறிவதனில்
இறையில்லை' என்கின்ற இழுக்கம் கண்டோம்;
களுக்கென்றே நகுமுல்லை
கருநிறத்தில் பூக்கவில்லை; கமழா தென்றே
சுளுக்கேறிக் கூறுவதில்
சூடுண்டு, பொருளில்லை; சுவையுங் காணோம். 212

உடலதனில் அரிப்பெடுத்தால்
உடன்கையால் தமைச்சொறிந்தே உவப்பைக்
கொள்வார்;
'படப'டென்றே மனமரித்தால்
பதறிப்போய் மற்றவரைப் பழிச்சொல் சொல்வார்;
உடலரிப்போ தீர்ந்துவிடும்,
உளத்தரிப்பாம் தீராநோய்க் குழல்வார் கண்டேம்;
மடல்அவிழ்கள் தேன்மதுவாம்,
மற்றொருகள் குடலறுக்காத் தேனாய்க் காணேம்.
213

ஆள்பிடித்துக் கால்பிடித்தே
அண்டங்காக் கைப்பிடித்தே அடம்பி டித்து,
வால்பிடித்து வளம்பிடிக்க
வலைபிடிப்பார் பல்லோராய் வளர்தல் கண்டேம்;
சூல்பிடிக்கப் பெண்நாயைச்
சூழ்ந்துநின்று வால்குழைத்துச் சுற்றிச் சுற்றிச்
சால்பிடிக்கும் வெறிநாய்கள்
சந்தியிலும் இழிவன்றிச் சால்பாய்க் காணேம்.
214

இறையன்பர் என்றிடுவார்,
இறையேனும் மனத்தூய்மை இலராய்ப் பல்லோர்
குறையெல்லாம் தமக்கென்றே
குத்தகையாய்க் கொண்டிருப்பார் கோணல் கண்டேம்;
கறையுள்ளம், புறையுள்ளம்,
கசடெல்லாம் நிறையுள்ளம், களங்க உள்ளம்
இறையுள்ளம் என்றிட்டால்
'இறை'என்னுஞ் சொல்லுள்ளும் எதையுங் காணேம்.
215

'நெற்றுக்குள் முத்தில்லை
நெருங்காநீர் எமைநெருங்கி நிற்பீர்' என்றே
வெற்றுக்கண் வெடிக்கின்ற
வேடிக்கை மாந்தர்செயும் வேட்டை கண்டேம்;
புற்றுக்குள் பெருமுத்தாய்ப்
பொலிகின்ற முட்டையது பொரிந்து விட்டால்
உற்றுவரும் பாம்பன்றி
உறவுகொளுங் குஞ்சாக உலவல் காணேம்.
216

கடுக்காய்கொ டுத்திட்டுக்
காதுகுத்திக் குழிபறித்துத் தூற்றி நிற்பார்,
வடுக்களுக்கே வித்திடுவார்;
வன்செயலாங் கதிரறுப்பார் வன்மங் கண்டேம்;
கடுக்காயை வயிற்றிற்கும்,
காதுகுத்தல் குழந்தைக்கும், குழிப றித்தல்
செடிக்கும்,அள்ளித் தூற்றிவிடல்
செந்நெற்கும் சேர்ப்பதனால் சிதைவே காணேம். 217

இனம்புரியாத் தமிழினத்தார்,
இயல்புரையாத் தமிழ்ப்புலவர், திரைப்ப டத்தார்,
மனம்விரியா மேற்படியார்
மாறாட்டத் தால்நாட்டை மயக்கல் கண்டேம்;
குணம்விரிந்த நன்மையினார்,
கூர்த்தமதித் திறனுடையார், குறைகள் இல்லார்,
பணம்விரிந்தும் பண்புடையார்
பரிந்தெழுந்து தமிழகத்தைப் பார்க்கக் காணேம். 218

கலையெல்லாம் அழகென்றே
　　கற்பழிக்குங் கடுஞ்செயலுங் கலையாய்க் காட்டி,
விலையாக இளைஞர்தம்
　　வீறெல்லாம் குலைக்கின்ற விளைச்சல் கண்டேம்;
மலையெல்லாம் கல்லெனினும்
　　எரிமலையுங் கற்குழம்பே மலைவாழ் வாமோ?
இலையெல்லாம் பசுமையெனில்
　　பசுமையெலாம் இலையாகும் பான்மை காணேம்.
219

வழிவழியாய் வருகின்ற
　　வளமார்ந்த பெருஞ்செல்வர், வளமை இல்லார்;
எழில்வழியில் புகழ்பெற்றே
　　ஏறுவதைக் கீழறுப்பால் இடறல் கண்டேம்;
வழிவழியாய் வளர்கின்ற
　　வளமரங்கள் தமைச்சார்ந்து வளர்வ தற்குக்
குழியேறி வருகின்ற
　　கொடியதனைக் கீழறுப்பாய்க் கொய்யக் காணேம்.
220

# 37. பணிப்பத்து

நூற்பணியும் பொதுப்பணியும்
மொழிப்பணியும் இல்லறத்தின் பணியும் ஆக
நாற்பணியும் நற்பணியாய்
நாடறிந்து நடத்திடுதல் நலமாம் கண்டேம்;
சீர்ப்பணிகள் செய்யுங்கால்
சிறப்புவரும், சிதைவுவரும்; எதுவந் தாலும்
ஏற்பணியாய் ஏற்றதனை
எருவாக்கிப் பணிமுடித்தால் இழப்பே காணேம். 221

வெள்ளிவிழா அகவையினில்
விரும்புதமிழ் ஆசிரியப் பணிமேற் கொண்டு
கள்ளவிழா மலர்முகத்து
மாணவர்முன் நின்றக்கால் களிப்பே கண்டேம்;
துள்ளியெழும் புலமையுடன்
துணுவுடைய சொல்லாற்றல் துணையாய்க் கொண்டு,
பள்ளியதை இன்பத்தின்
பள்ளியறை யாய்க்கண்டேன்; அதுகா ணாதேன். 222

வீட்டுணர்வும் நாட்டுணர்வும்
உடலுணர்வும் உறவுணர்வும் ஒன்றாய்க் கூடி
மாட்டிடினும் வகுப்பறையில்
மாணவர்தம் முகம்பார்த்தால் மறையக் கண்டேம்;
பாட்டதனைப் பொருளதனைப்
பதமாக வழங்கிடுங்காற் பட்டி மாடாய்த்
தேட்டையிடும் மாணவனும்
தேன்வண்டாய் மாறாமல் திகைத்தல் காணேம். 223

முத்தெடுத்துச் சாறெடுத்து
முறுவலுடன் கொடுக்கின்ற முறைபோல், நல்ல
பொத்தகத்தில் உலகியலில்
பொதிந்துள்ள பூட்டகத்தைப் புதிரை, பூத்த
கொத்தெனவே எழுத்துருவில்
கொடுக்கின்ற பணிசீரைக் கொடுத்தல் கண்டேம்;
அத்தகவுப் பணிநிலைத்த
அரும்பணியாய்; என்றென்றும் அழிதல் காணேம். 224

கோட்பாடும் பண்பாடும்
கூலிக்குப் படும்பாடும் சுவையால் ஒன்பான்
சாப்பாடும் கடப்பாடும்
செந்தமிழின் மேம்பாடும் பகுத்தறி வின்பால்
கூப்பாடும் கொண்டதமிழ்க்
குளிர்பாடல் பாடுதொழில் பணியாய்க் கண்டேம்;
நேரப்பாடும் வழிபாடும்
நோய்ப்பாடாய்க் கொண்டதன்றி நுழைந்து
காணேம்.
225

முடங்கலிலும் அழைப்பினிலும்
மேடையிலும் வீட்டினிலும் மேற்கொள் கின்ற
அடங்கலிலும் புதியமுறை,
அமைப்புமுறை, மரபுமுறை அணியாய்க் கண்டேம்:
தொடங்கலிலே துணிவின்மை,
தொடர்வதிலே தொய்வடைதல், தொல்லை செய்யும்
தடங்கலிலே தளர்வடைதல்,
தற்குறிபால் தொடர்பமைதல் துணையாய்க்
காணேம்.
226

செஞ்சொற்கள், சுவைஆழம்
சேர்பொருள்கள், குரல்மிடுக்கு, செவிசாய்ப் போரை
நெஞ்சத்தால் நோக்கமிடல்,
நெறிமேடை நாகரிகம், நிகழ்ச்சி யாளர்
கிஞ்சிற்றும் குறைபடாமை,
குறிக்கோள்கொள் சொற்பொழிவும் பணியாய்க் கண்டேம்;
விஞ்சுகுரல், வெற்றளப்பு,
வீண்கதைகள் சொற்பொழிவில் விரித்துக் காணேம். 227

கலப்புமணம் சாதிச்சாக்
கடைபோக்கும்; கரணமின்றிப் பெரியார் கண்ட
நலப்பெருஞ்சீர் திருத்தமண
நற்றலைமைப் பணியேற்று, மரபை நன்கு
புலப்படுத்தி, நெல்முல்லைப்
பூச்சொரிந்து பலநூறு புரிந்து கண்டேம்;
குலப்பெருமை கொண்டுதமிழ்க்
குடிப்பெருமை குலைத்தபுரா ணத்தீ காணேம். 228

குழிபறித்த கைகளினால்
கும்பிடுவார் கூப்புகின்ற குவிவி ரல்கள்
விழிபறிக்கத் தீட்டுதற்கும்
விரைந்தெழுமாம் எனுங்குறிப்பும் விளங்கக்
கண்டேம்;
பழிபிறக்கும் கும்பிடையும்
பரிவாக ஏற்பதுமோர் பண்பு தோன்ற
வழிபிறக்கும்; பண்புமொரு
வகைப்பணியாம் எனக்கொண்டே வழுவாய்க்
காணேம்.
229

தமிழ்வளர்ச்சி, இனவளர்ச்சி,
தமர்வளர்ச்சிப் பணிசெயினும் தமது வாழ்வின்
கமழ்வளர்ச்சிப் பணியின்றேல்
காண்கின்ற வளர்ச்சிகளில் தளர்ச்சி கண்டேம்;
சிமிழ்வளர்ச்சித் திரியொன்றால்
சேர்விளக்கு பலவற்றிற் கொளிதந் தாலும்
அமைதிரிக்கே எண்ணெய்தான்
அமையாக்கால் அதன்பணியும் அமைதல் காணேம்.
230

# 38. பொதுப் பத்து.

பொதுவாக உலகத்தில்
பொருளியலும் அறிவியலும் பெருகி னாலும்
புதுவரவாய் வருபவைகள்
பொல்லாங்காய், ஒழுக்கமிலாப் பொழுது போக்காய்
அதிவிரைவாய் வளர்வதுடன்
அறிஞர்கள், அருங்குணத்தார் அடங்கல் கண்டேம்
எதுவரையும் இவைசெலுமோ?
என்னமுடி வைத்தருமோ? எல்லை காணேம். 231

நெஞ்சத்துள் ஈரத்தை
நிறைத்திருப்பார் நிறைமாந்தர்; நிழல்போல் வாழ்ந்தும்
வஞ்சத்தில் தீங்கெண்ணும்
வன்மனத்தார் செயலெண்ணி வதங்கல் கண்டேம்;
பஞ்சிற்கு மென்மையதும்,
பசுமைக்குக் குளுமையதும் பாங்கென் றாலும்
வெஞ்சூட்டில் விரைந்தவைகள்
வெந்துகரி யாவதன்றி விளங்கக் காணேம். 232

தேட்டமிகு நுண்ணறிவைத்
தேங்கமழும் நூலறிவைத் தேடி வந்து
நாட்டமொடு தாம்பெற்று
நனிபோற்றிப் பாராட்டி நயப்பர் கண்டேம்;
கூட்டிவரும் ஊற்றின்நீர்
கூப்பிட்டுக் குடியென்று கூறல் உண்டோ?
மீட்டிவிட யாழிருக்க
மீட்டாத இசைவாணன் மிகுதல் காணேம்.
233

''இடிந்திட்ட குடும்பத்திற்
கெட்டாடும் இருமுருங்கை மரமுஞ் சேர்ந்தால்
விடிந்திடுமே வாழ்''வென்று
விளங்குபழ மொழியொன்றன் விழுப்பங் கண்டேம்;
ஒடிந்துவிழும் மரம்போலும்,
ஒழுங்கறியா விலங்கும்போல் உழல்வோர்க் கெல்லாம்
முடிந்தவரை உதவிடுதல்
முதற்பணியாய்க் கொளநினைந்து முனைவோர் காணேம்.
234

கற்பனையின் களஞ்சியங்கள்,
கதையளக்கும் புராணங்கள், கடவுட் பேரால்
விற்பனைக்குக் கடைவிரித்த
வெற்றார்ப்பாய்ச் சமயங்கள், விளங்கக் கண்டேம்;
பொற்புடைய பாக்களினால்
பொலிவுடைய தமிழ்வளத்தைப் பொதிந யத்தைக்
கற்பதற்கும் சுவைப்பதற்கும்
கவின்பூச்சில் தரலன்றிக் கடைகால் காணேம். 235

உருவக்கல் நாட்டாமல்
ஒளிநாட்டிப் புதுக்கோயில் ஒன்று கண்டே
கருவறைக்குள் பேரொளியைக்
காட்டிட்ட இராமலிங்க வள்ளல் கண்டேம்;
வருமவர்தம் அடியாரோ
வடிவக்கல் வழிபாடும் வைத்துக் கொண்டே
கருவறுப்பார் அவர்கருத்தை;
கனவினிலும் அவரடியார் ஆதல் காணேம். 236

தமிழ்கற்றுத் தமிழ்மறந்து
தமக்குவருஞ் சிறுகாசைத் தகவாய் எண்ணித்
தமிழ்க்குற்றம் எத்துணையோ
தவறாமல் அவைசெய்யும் தமிழர் கண்டேம்
கமழ்செயலாய் இவைபேசிக்
களிக்கின்ற கயவர்தாம் பெருகி நிற்கும்
உமிழ்செயலைக் காணுங்கால்
உறைகின்ற குருதியதும் உலரக் காணேம். 237

ஒருதமிழில் தான்புகுந்து
தெலுங்கு,மலை ஞாலம்,கன் னடமாம் நான்காய்ப்
பிரித்தொருமைப் பாட்டதனைப்
பிளந்திட்ட வடமொழியின் *பீறல் கண்டேம்;
'விரிந்தஇந் தியநாட்டின்
விளங்கொருமைப் பாட்டிற்கம் மொழியே' என்று
பரிந்துரைக்கும் சொற்குள்ளே
படும்உண்மை தீங்கன்றிப் பயனைக் காணேம். 238

* பீறல் - வெற்று ஆரவாரம்

இல்லவர்கள் வளம்பெற்றே
இன்பத்தில் தோய்ந்திடுதல் இனிய நாளாம்;
நல்லவர்கள் நெஞ்சுவக்க
நாடாளக் காணும்நாள் நல்ல நாளாம்;
எல்லவரும் பண்புடையார்
எனச்சொல்லும் நாளுயர்ந்த நாளாம், கண்டேம்;
செல்லமொழிச் செந்தமிழால்
சீருலகம் பெறும்அதுபோல் சீரே காணேம். 239

திருக்குறளின் நன்னெறிகள்
திசையெல்லாம், உலகனைத்தும் திகழும் என்றால்
உருக்குலைவே இல்லாமல்
உலகத்து மாந்தரெலாம் உவப்பர், காண்போம்.
திருக்குறளின் நெறிவெல்க!
தெளிபண்பே உலகத்தில் திகழ்க! நன்மை
பெருக்கெடுத்து நனிவளர்க!
பெருமக்கள் எனமாந்தர் பெட்பில் வாழ்க! 240

[அறுசீர் ஆசிரிய விருத்தங்கள்]

கண்ட அறுபதும் காணா அறுபதும்
கொண்ட உணர்ச்சியின் கொத்து. [குறள் வெண்பா] 241

# 5. மணல் கேணி



தோண்டத்தோண்ட மணல்ஊற்று
தோண்டும்அள விற்கேற்ப
மூண்டுநல்ல நீர்ஊறும்;
வேண்டுகின்ற கல்விஅதை

முனைந்துகற் பதற்கேற்ப
இணைந்துவரும் நல்லறிவாம்;
மணற்கேணி பள்ளியதாம்;
உணச்சொல்லும் குறள்காண்க:

"தொட்டனைத் தூறும் மனற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

(குறள்: 396)

## கேணியின் ஊற்றுக்கள்:

பொருள்
எண்

கல்விக் கூடம் - 39.

பள்ளி நாற்பது - 40.

மாணவர் பத்து - 41.

பிழை ஒரு கொலை - 42.

அறிக்கை ஒன்று - 43.

அறியாமையில் அறிவு - 44.

# 39. கல்விக் கூடம்

'கல்' என்னும் சொல்லடியே கல்வி யாகும்;
கற்பவர்தாம் கூடுவதாற் கூட மாகும்
'பள்'என்னும் சொல்லடியே பள்ளி யாகும்;
பள்ளிகொள்ளக் கூடுவதாற் கூட மன்று.
தெள்ளருஞ்சீர் சமணமதத் துறவி யர்தாம்
தேர்படிப்பு, படுக்கைக்கும் ஒருகூ டத்தைப்
'பள்ளி'எனக் கொண்டிட்டார்; அந்தப் பாங்கில்
பரவிவழக் கானதுதான் பள்ளிக் கூடம். 242

குழந்தைக்குத் தாய்மடிதான் கல்விக் கூடம்;
குமரிக்குக் குமரன்தோள் கல்விக் கூடம்;
உழந்தோர்க்கோ உழுமுனைதான் கல்விக் கூடம்;
உயர்ந்தோர்க்கோ உலகமதே கல்விக் கூடம்;
முழந்நாட்கு முன்றானை கல்விக் கூடம்;
முயற்சிக்கு நெஞ்சுரந்தான் கல்விக் கூடம்;
இழந்தோர்க்கோ ஆறுதலே கல்விக் கூடம்;
இவற்றிற்கோர் மூலவலம் பள்ளிக் கூடம். 243

ஒழுக்கத்தில் உறைவிடமே கல்விக் கூடம்;
ஒழுக்கமெனும் புள்ளியிலாக் கல்விக் கூடம்;
அழுக்குற்ற கூடமதாம் கலவிக் கூடம்
அக்குற்றம் அகன்றுதான் பள்ளிக் கூடம்
இழுக்குற்ற நடைமுறைகள் இயங்கும் கூடம்;
இடைபட்டுத் தடைபட்ட நீரின் ஓடம்;
முழுக்குற்றம் கல்வியின்மேல் மூளா வண்ணம்
முனைந்துநின்று காப்பதுதான் நமது பாடம். 244

அன்பூறும் ஊற்றுக்கண் கல்விக் கூடம்
அறிவாறு பாயுமிடம் கல்விக் கூடம்;
பண்பூறிப் பழகுமிடம் பள்ளிக் கூடம்,
பயனெல்லாம் விளைவயலாம் பள்ளிக் கூடம்.
தெம்பூறித் தேங்குமிடம் கல்விக் கூடம்.
தெளிவுக்கோர் பைஞ்சுனைதான் கல்விக் கூடம்.
என்பேறும் உணர்வூட்டும் பள்ளிக் கூடம்.
எல்லவர்க்கும் வாழ்வுமனை பள்ளிக் கூடம். 245

இனப்பகைக்கோர் எதிர்ப்படைதான் கல்விக் கூடம்;
இல்லார்க்குப் பெரும்புதையல் கல்விக் கூடம்.
சினப்பகைக்குச் சிறைக்கோட்டம் பள்ளிக் கூடம்;
சிறார்க்கெல்லாம் சிறப்பிதழாம் பள்ளிக் கூடம்.
மனப்பகைக்கு மருந்தகமாம் கல்விக் கூடம்;
மருண்டவர்க்குத் தெருண்டவிடம் கல்விக் கூடம்;
குணப்பகைக்குக் குழிநெருப்பாம் பள்ளிக் கூடம்;
கூடமெனிற் குறையற்றோர் கூடும் கூடம்.
246

குருடர்க்கு விளக்கொளியாம் கல்விக் கூடம்;
கூன்செவிடர்க் கின்னிசையாம் கல்விக் கூடம்.
திருடர்க்குத் திருப்புமையம் பள்ளிக் கூடம்.
திக்கற்றோர் திசைகாட்டி பள்ளிக் கூடம்.
“பொறியின்மை பழியன்றாம்” எனுங்குறள்கொள்
பொருளதனின் உருவகமாய்ப் பொலிந்து நிற்கும்
உருவார்ந்த மாளிகைதான் கல்விக் கூடம்.
உலகினர்க்குப் பெருங்கோயில் கல்விக் கூடம்.
247

கலைக்களமாம் கூடமிது கவின்சேர் கூடம்.
　　கடற்களமாம் புல்லறிவைக் கடக்கும் ஓடம்.
கொலைக்களமாய் இக்கூடம் குலைக்கும் மூடம்.
　　கொள்களமாம் கூடமிதில் கொழிக்கும் பாடம்.
உலைக்களமாய்ச் சிற்பிகளை வார்க்கும் கூடம்.
　　உறுகளமாம் புலமைக்கோ இதுகல் லாடம்.
நிலைக்களமாய் இளமைக்கு நிலைத்த மாடம்.
　　நீள்களமாய் மூதுமைக்கும் நினைவில் ஆடும்.
248

பொதிகைமலைத் தென்றலிங்கு பேச்சாய் வீசும்;
　　பொன்மலையின் தொழிலிங்கு செயலாய்ப் பேசும்;
அதிகைமலை நெல்லியிங்கே அன்பாய்க் கூடும்;
　　அழகர்மலைத் தெய்வமிங்கே அழகை நாடும்;
உதகைமலை ஓடையிங்கே உணர்வாய் நிற்கும்;
　　உயர்ந்தமலைப் பனியிங்கே உருகக் கற்கும்;
மதுகைமலைப் பொன்னியிங்கே அறிவாய்ப் பாயும்;
　　மலையெல்லாம் இம்மலையால் மலைத்த தாகும்;
249

பிஞ்சுள்ளம் இங்கேதான் பாய்க் காண்போம்;
பேயுள்ளம் இங்கேதான் ஓயக் காண்போம்;
நெஞ்சுள்ள உயிரினத்தை நேரே காண்போம்;
நிறைவுள்ள முகமதிகள் ஊரக் காண்போம்;
நஞ்சுள்ளம் இங்கேதான் நழுவக் காண்போம்;
நலிவுள்ளம் தன்குறைகள் நசுங்கக் காண்போம்;
குஞ்சுள்ள கூடிதனைக் கூடிக் காப்போம்;
குஞ்சுகள்பின் கூடுவிட்டால் நாட்டைக் காக்கும். 250

காவிரியின் நன்னீரில் கழிவு நீரே
கலந்துவிடின் கடுநோய்கள் விரிதல் போன்றே
பூவிரியும் சோலையெனும் பள்ளிக் குள்ளே
புன்குரங்காம் இனத்திமிர்தான் புகுந்து விட்டால்
தீவிரியும், உடல்விரியும், விரியும் தீமை
திகில்விரியும், பழிவிரியும்; விரியலாமோ?
பாவிரியும் பள்ளியில்பேய் விரியா வண்ணம்
பயன்விளையும் சூளுரைநாம் விரிக்க வேண்டும். 251

[எண்சீர் ஆசிரிய விருத்தங்கள்]

# 40. பள்ளி நாற்பது

### மாணாக்கன்

'மாண்பினை ஆக்குவோன் மாணாக்கன்' எனறநம்
ஆன்றவர் நற்பொருள் ஆக்கு! 252

'மாணாக்கன்' என்னும் பொருளுக் கிலக்கியம்
தானாகி நிற்றல் தலை. 253

### பண்பாடு

'வணக்கம்' என்கை குவித்துவாய் ஆர
இணக்கமாய் ஆசாற் கியம்பு! 254

சூழ்நிலை, காலம், சுவைச்சொல் உணர்ந்துநன்
காழ்ந்து பழகல்பண் பாடு. 255

### பல்லொரு முத்து

பல்லொரு முத்தாய்ப் 'பளிச்'சிடச் செய்திடின்
இல்லையாம் சொல்லில் இடர். 256

'பளிச்'சிடாப் பல்லும் பறிக்கா நகமும்
பழிச்சுமை மாணவர் பாங்கு. 257

## படிப்பில் பயன்

விடியல் இருமணி, அந்தி அதுவாய்ப்
படிப்பின், விளையும் பயன். 258

ஐயம், பிழைகள் அகற்றாது கற்பது
*செய்யிற் களைநோய் செறிப்பு. 259

## குளியல் நலன்

காலைக் குளியல் கவினும், நலனுமாம்;
மாலைக் குளியல் மயக்கு. 260

குளித்து வரின்அயர், கொட்டாவி, சோம்பல்,
இளித்துச் சொறியல் இலை. 261

## எழில்பெறச் சீவல்

எண்ணெய் தடவி எழில்பெறச் சீவிடின்
எண்ணமும் எய்தும் எழில். 262

ஒட்டடைக் கம்பதை ஒக்குமே, எண்ணெயைத்
தொட்டிட்டுச் சீவாத் தலை. 263

---

* செய் - வயல்.

## உடையில் ஒழுங்கு

அழுக்கிலா ஆடை, அழுக்கா றிலாமை
இழுக்கிலா மாணவர்க் கின்பு. 264

பொத்தான் பொருத்திடாச் சட்டை அணிதலின்
கத்தரித்து வீசல் கவின். 265

## நிமிர்ந்த நடை

நிமிர்ந்த நடையும், நிகழ்கணீர்ச் சொல்லும்
திமிர்ந்ததே மாணவத் தீர்வு. 266

நடையதில் ஏறாய் எழுக; நயமே
அடைய மொழிதல் அழகு. 267

## நேரந்தவறா நெறி

நேரந் தவறா நெறிகொளும் மாணவன்
சீரொடு கொள்வன் சிறப்பு. 268

பணிக்குமுன் நிற்றல், பழிக்குப்பின் நிற்றல்,
மணிக்குநேர் நிற்றல் மகிழ்! 269

## உணர்ச்சி நிற்கை

நிற்க உணர்ச்சிக் குறி[!]என; நில்லற்க
அற்கும் வினாக்குறி[?] ஆங்கு!
270

காலை வளைத்துக் கழுத்தை நெளித்துத்தீப்
*பீழையாய் நிற்றல் பிழை.
271

## அமரும் அழகு

கன்னத்தில் கையைக் கவைக்கம் பெனவூன்றின்
குன்றி முதுகடையும் கூன்.
272

'அமர்தல்' எனுஞ்சொல் 'விரும்பல்' பொருளாம்;
அமர்தலில் அஃதையுண் டாக்கு!
273

## சொல்லில் தெளிவு

தொடங்கிய சொல்லைத் தொடர்ந்து தெளிவாய்
முடங்குதல் இன்றி முடி!
274

சொல்லின் இறுதி எழுத்தைத் தெளிவொடு
சொல்லான் படிப்பது சோர்வு.
275

---

* பீழை - பெரும் இழிவு.

## நற் பழக்கம்

கொடுத்திட வாங்கிடக் கொள்க வலக்கை;
இடக்கை எடுத்தல் இழுக்கு.
276

நினைவில் தெளிவும், மொழியில் பணிவும்,
வினையில் துணிவும் விளக்கு!
277

## தீப் பழக்கம்

நகத்தைக் கடித்தல் நகைப்புக் குரித்தாம்;
நகத்தின் அழுக்கொரு நஞ்சு.
278

முகத்தைச் சுளித்தல் முதுமைக் கழைப்பாம்;
முகத்தில் மலர்ச்சி முகிழ்!
279

## பசி போக்கல்

பசியொடு மாணவன் பள்ளியில் சோரப்
'புசியேன்' எனநீ புகல்!
280

கொடுத்துப் பழகல் கொடிதோ; பசியைக்
கெடுத்துப் பயிற்றல் கடன்.
281

## உடல் நலம்

வியர்வை சிதற விளையாட் டெடுத்தல்
அயர்வை அழிக்கும் அறி.
282

குளித்தற்குத் தண்ணீர், குடித்தற்கு வெந்நீர்;
களித்தற்கு வித்தாகும் காண்!
283

## பள்ளி ஒழுங்கு

ஒருநா ளதுவும் ஒருவாது பள்ளி
வருகைப் பதிவை வழங்கு!
284

பள்ளிக் கெனவொரு பாங்குடைச் சீருடை
கொள்க உளங்களி கூர்ந்து!
285

## காலைக் கழுவுக

காலைக் கழுவிநீர் காயுமுன் உண்ணுதல்
நூலைப் பயில்வார்க்கு நோன்பு.
286

காலைக் கழுவிநீர் காய்ந்து படுத்திடல்
வாலைக் குமரர் வனப்பு.
287

## அணியும் தூணும்

தூய்மை, தெளிவு, மொழிப்பற்றே, ஒப்புரவோ
டாம்நான்கு கல்விக் கணி.
288

ஒழுங்கு, பயிற்சி, உடலோம்பல், நுண்மை
துலங்குகல் விக்குநாற் றூண்.
289

## முழக்கம்

நாடும் மொழியும் நமதிரு கண்களாம்;
ஏடும் பயில்வும் எழில்.
290

'ஒன்றாய்ப் படிப்போம்; ஒருங்கே படிக்குவம்;
நன்றாய்ப் படிப்போம்' நவில்!
291

(குறள் வெண்பாக்கள்)

# 41. மாணவர் பத்து

**மாண்பி**னை ஆக்குவோர் மாணாக்கர்; இச்சொல்லை
மாண்புறு சான்றோர் வகுத்தனர் — காண்தகு
மாணவர் என்பவர் மாண்பினை ஆக்கியே
ஆண்திமிர் ஆழ்த்தி**வாழ் வோர்.**
292

**வாழ்வோர்** இசைவிழா; வாழ்வில் இளமையோ
தாழ்வில் தமிழிசைப் பாடலாம் — யாழ்படு
தேனிசை என்னத் தகுவதே, மாணவர்
வானிசைத் தேன்**பரு வம்.**
293

**பருவத்** துடிப்பது பள்ளிப் படிப்பில்
உருவிடப் பாய்தல் உயர்வாம்; — திருவுடைத்
தாய்மொழி யோடொரு தாழ்விலாப் பார்மொழி
வாய்மொழி தோய்ந்திடல் **வாக்கு.**
294

**வாக்கிற்** பணிவொடு, யாக்கைத் துணிவொடு
நாக்கில் தமிழும் நயந்திட — 'நீக்கரும்
ஏந்தல் இவன்'என ஏகாப் புகழுதே
ஏந்தும் இருகை **எடுத்து.**
295

எடுத்த குரலும், மிடுக்கு நடையும்,
உடுத்த உடையில் ஒழுங்கும் - தொடுத்த
படிப்பில் உயர்வும், பழக்கிற் பணிவும்
நொடிப்பிற் செயலும் **நுகர்!** 296

**நுகர்**நேரம் பொன்போல் நுகர்ந்து, பகலோன்
நிகர்பெருமை ஆசான் நிழலாய்ப் - பகலில்
படித்தவை *கங்குலிற் பார்த்துப் படுத்து
**விடியற் பொழுதில் விழி!** 297

**விடியற் பொழுதில் விழி**த்துப் பயிலின்
கடிதிற் படிந்திடுங் கல்வி; - படித்தவை
ஓய்விற் படுக்கையில் ஓர்ந்துநி னைந்திடத்
தூய்தாய் அறிவொன்றும் **கால்** 298

**கா**லைப் படிப்பும், கடமைத் துடிப்பொடு
மாலைக் குதிப்பும் மருவிட - வாழைக்
குருத்தின் வளர்வும், திருத்த அறிவும்,
எருத்தின் வலிவும் **எழும்.** 299

* கங்குல் - இரவு

**எழும்**பொது நூல்கள், எழுஞ்செய்தித் தாள்கள்
பழம்பே ரிலக்கியப் பாடல் - உளம்புக
நாடியே கற்றிடும் மாணவர், நாடெனும்
ஏடதிற் செம்பொன் **எழுத்து.**
300

**எழுத்துப்** பிழையோ கழுத்துறு புண்ணாம்;
கழுத்துறு புண்ணொரு கூற்றாம்; - பழுத்தநல்
தேன்தமிழ் வாழ்ந்திடத் தேர்பிழை நீக்கியே
மாந்திடல் மாணவர் **மாண்பு.**
301

[நேரிசை வெண்பாக்கள்
மண்டலித்த அந்தாதித் தொடை]

## 42. பிழை ஒரு கொலை.

எம்பெருமான் திருவருளால் ஒருவர்
  எழில்மகட்கே மணம்முடிக்க எண்ணி
அன்பழைப்பை அச்சேற்றக் கொடுத்தார்;
  அச்சகத்தார் எம்பெருமான் சொல்லில்
முன்பமைந்த புள்ளியதை விட்டார்;
  *முழுத்தத்தில் **எமபெருமான்** நின்றார்.
பின்பொருவர் வாழ்த்துவதற் கெண்ணிப்
  பெருகிவாழ்க காவிரிபோல் என்றே, 302
எழுதுங்கால் மகரத்தின் புள்ளி
  எட்டவைத்தார்; **வாழக்கா விரியாய்ப்**
பழுதாகிப் போயிற்று காண்பீர்!
  பைந்தமிழிற் புள்ளியொன்று தள்ளின்
முழுதுமந்தப் பொருள்மாறிப் போகும்;
  முனைப்பான கருத்தெழுத்திற் கொள்ளின்
அழுதுநையுந் தமிழ்அமுதாய் வாழும்;
  அதையருந்தித் தமிழினத்தார் வாழ்வர். 303

---

*முழுத்தம் - முகிழ்த்தம் - முகூர்த்தம்

ஆங்கிலத்தில் (T)'டீ'யோடு (D)'டீ'யாம்
ஆயிரண்டின் ஒலிமாற்றம் அறிந்து
தீங்கின்றி உச்சரிப்போம்; அன்றித்
தெருவிளக்குக் கம்பம்போல் (T)'டீ'யாம்
வாங்கிவைத்த வில்லு'டீ'(D) என்றே
வழங்கினமோ, உருவத்தைக் கொண்டே?
பாங்குற்ற ணகரமொடு னகரம்
நகரத்தோ டொருமூன்றாம் எழுத்தை, 304

'மூன்றுசுழி இரண்டுசுழி இந்'தென்
றுச்சரித்தோம் சுழிபார்த்த மாடாய்;
ஆன்றநம தருந்தாய்மை மொழியே
ஆக்கமுற நுணுக்கமறிந் துரையோம்;
தோன்றுபிற மொழிநுணுக்கங் கண்டோம்.
டண்ணகரம், றன்னகரம் என்றும்
சான்றமைந்த தந்நகரம் என்றும்
சார்பறிந்து வழங்கல்தமிழ்த் தொண்டாம். 305

என்புருக்கி நோய்நீக்கும் ஒருவன்
எடுப்பான மூலிகையொன் றறிந்தே
துன்படக்கிப் பிணிதீர்த்து வந்தான்;
தொலைவில்வாழ் பிணியாளன் ஒருவன்
'அன்பையா! மருந்தெழுதி விடுப்பீர்;
அங்குவர இயலாதேன்' என்றான்;
தென்பாங்குத் தமிழெழுத்தின் நுணுக்கம்
தெரியாதான் மருந்தெழுதி விடுத்தான். 306

முடங்கலதைக் கண்டபிணி யாளன்
முள்கண்ணில் குத்தியதாய் அதிர்ந்தான்;
அடங்கவேண்டிந் நோய்'என்று துணிந்தே
அரிவாளைக் கூர்முனையாய்த் தீட்டித்
தடங்காணா வைகறையில் ஆற்றின்
தண்கரையில் மந்திரத்தை ஓதத்
தொடங்கியவர் ஆடாத தலையைத்
துணித்தோடி வந்தில்லம் புகுந்தான். 307

நாற்பத்தெண் பங்காக்கி, எலும்பை
நறுக்கியெறிந் துண்டும்நோய் தீரான்;
'கூர்ப்படையால் கொலைசெய்தேன் பாவீ!
குறையவில்லை பிணி'யென்றே வரைந்தான்.
நேர்ப்பட்ட மருத்துவன்'என்' என்றான்.
'நின்சொல்லால் ஆடாத தலையைத்
தீர்த்த'னென்றான்; 'ஆடாதணழ யன்றோ
தீர்க்கு'மென்றான்; 'தழைதலையாய்க் குறித்தாய் 308

பகைநேர்ந்து பழியாயிள்' றென்றான்;
பற்காட்டிக் கிடந்தமண்டை ஓடு
நகைப்பதற்கே முடியாமல் இவர்கள்
நலிசெயலின் பழிகாட்டிற் றன்றே!
நகைச்சுவைக்கே இக்கதையைச் சொன்னேன்;
நடவாத கதையெனினும் இதுபோல்
பகையேதும் விளைந்திடலாங் கண்டீர்!
பைந்தமிழிற் பிழைசெய்தல் பீழை! 309

[அறுசீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 43. அறிக்கை ஒன்று

*என்நாட்டுப் பெரியோரே; அன்னை மீரே!*
*ஏறுகளே! மாணவன்மீர்! எளியேன் உங்கள்*
*முன்நாட்டும் அறிக்கையொன்று கொண்டேன்; அஃது*
*முத்தொளியாம் சொத்தையன்று கேளீர், நல்லீர்!*
*பொன்னோட்டில் எழுத்தென்னும் வைரக் கல்லால்*
*பொருள்செதுக்கிப் பேரறிவில் திகழ்ந்த, நந்தம்*
*தென்னாட்டுக் கல்விநிலை கடல லையாய்த்*
*தேய்கின்ற கதைகேளீர், தேம்பிச் சொல்வேன்!* 310

*பெற்றெடுத்த தந்தையரே, 'மைந்தர் தம்மைப்*
*பெரும்பள்ளி தனிற்சேர்த்து விட்டோம்; அன்னார்*
*கற்றிடுவார்; கற்பிப்பார்' என்றே நீவிர்*
*கருத்தின்றி அமையாதீர்! பள்ளி விட்டால்*
*சுற்றுகின்றார் - அலைகின்றார் - திரிகின் றாரால்*
*சுருக்கென்று தைக்கின்ற அன்புச் சொல்லால்*
*மற்றவரை வீடடக்கிப் பயில்நே ரந்தில்*
*மல்லிகைமுன் வண்டெனவே பயில வைப்பீர்!* 311

பள்ளிதனில் ஆசிரியன் பயிற்று விப்பான்;
படிப்பிக்கும் வீட்டாசான் பெற்றோ ரன்றோ?
துள்ளிவரும் சேய்அவனை 'இன்றைப் பாடம்
துவக்கிவைத்தார்; விளக்கதனை' என்பீர்! அன்பை
அள்ளிவிடும் அன்னையரே! நும்பால் உண்டே
அறுசுவையாம் கடிவாளம்; அதனைக் கொண்டே
தெள்ளுகல்வி வண்டியில்இக் குதிரை பூட்டிக்
கொள்உண்ணப் பின்செய்வீர்; கொழித்து வாழ்வான். 312

படிக்கின்ற மாணவர்க்குத் தோழர் காள்; நீர்
படிப்புணர்ந்தோர் ஆயிடினும், ஊரின் மூலை
முடுக்கெல்லாம் 'பதம்'பார்ப்போ ராயி னும்கண்
முகம்மறைக்கும் இரவுவரின் நண்பன் தன்பால்
'வெடுக்'கென்று 'போய்ப்படிபோ' என்றே சாற்றி
வெருட்டிடுவீர் விளையாட்டு நேரம் வந்தால்,
துடுக்காய்ச்சென் றிழுத்துவந்து தழுவி நின்றே
தோழனுக்கு நல்லவனாய்த் தோள்கொ டுப்பீர்! 313

புதுமையாய் யான்ஒன்றும் புகன்றே னில்லை;
புரிந்ததற்கே கவிதைமெரு கேற்றித் தந்தேன்.
இதுநிகழ்ந்தால் இளைஞர்நிலை உயர்ந்தி டாதோ?
இனியவரே, இயற்றிடுக! மாண வர்காள்;
முதுநாட்டின் விழுதுகளே! விடியற் போதில்
முனைகின்ற படிப்பதுதான் வேராய்ப் பாயும்;
அதுகொள்க! தாய்நாடு சிறக்க, நீவிர்
அருந்தொண்டு செயல்வேண்டும்; அறைவன் கேளீர்!
314

எழுத்தினிலே சிறுபிழையுந் தவிர்க்க வேண்டும்!
எடுப்பான தமிழ்ச்சொல்லிற் பேசல் வேண்டும்!
பழுத்தசுவைத் தமிழ்ச்சொல்லிற் பாகே உண்டு;
பார்த்தெடுத்துச் சுவைத்ததனை வழங்கல் வேண்டும்!
இழுத்திழுத்துப் பிறமொழியைக் கலக்கும் அந்த
இழிசெயலை விடவேண்டும்! உலகோர் நும்மை
வழுத்துவதற் காங்கிலத்திற் புலமை கொள்க!
வாழ்க்கைக்குக் குறள்கொண்டு நீடு வாழ்க!
315

[எண்சீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# 44. அறியாமையில் அறிவு.

கல்லாமை கேளாமை கனிவில் லாமை
கடமையதை ஆற்றாமை அழுக்கா றாமை
பொல்லாமை ஈயாமை பொறுப்பில் லாமை
புரியாமை தெரியாமை புகழில் லாமை
நல்லாமை இன்னாமை நலமில் லாமை
நடவாமை முடியாமை நயமில் லாமை
இல்லாமை எனும்ஆமை இவைகட் கெல்லாம்
ஈன்றபெருந் தாயாமை அறியா மைதான். 316

எழுத்துபொருள் அறியாமை, உலகி யல்கொள்
இயல்புநலம் அறியாமை, இலக்கி யத்தின்
பழுத்தசுவை அறியாமை, பயனில் தன்மை
பழியிவைகள் அறியாமை, பிணிகள் செய்யும்
அழுத்தமதை அறியாமை, அறிவி யல்கொண்
டருநிலவில் அடிவைக்கும் அருங்கா லத்தே
செலுத்தஒன்றும் அறியாமை எனமா ளாமல்
செழிப்பாக அறியாமை சிறக்கக் கண்டோம். 317

தெரியொளியின் பெருமையெலாம் இருளால் அன்றோ!
திகழுநிழல் அருமையெலாம் வெயிலால் தோன்றும்
அறிவுடைமைப் பெருமையெலாம் அறியா மையை
அறிவதனால் உண்டாகும்; அதனால் யாரும்
அறிவின்மை தம்பாலுண் டெனவு ணர்தல்
அடைவெற்றி முதற்படியாம்; இதனை நன்றே
[8]"அறிதோறும் அறியாமை கண்டற் றால்"என்
றறக்குரிசில் வள்ளுவனார் அறைந்தா ரன்றே!
318

உலகத்தில் அறியாமை இலாதார் இல்லை;
ஒன்றறிந்தார் மற்றொன்றில் அறியா தாராம்;
உலகத்தில் அறிவற்றார் எவரும் இல்லை;
ஒன்றறியார் மற்றொன்றில் உயர்ந்து நிற்பார்.
[29]'பல்கற்றும் உலகவியல் பயிலா ராயின்
பயினில்லார்' எனுஞ்சொல்லின் பயன றிந்தே
கலகலத்தே அறியாமை கழிவ தற்குக்
கடமையறிந் தவரவரும் கடுக வேண்டும்.
319

நத்துகலைக் குளிக்கரைவாழ் பிச்சை யப்பா
    நயமாகக் குழல்ஊத, முழவொ லிக்க
ஒத்தகலை இசையரங்கு நிகழக் கண்ட
    ஒருகாட்டுப் புறத்தான்நன் குற்றுப் பார்த்துப்
'பொத்தல்பட்ட பட்டமரக் கொட்டா விக்குச்
    செத்துவிட்ட மாடுகம்பால் அடிபட் டிங்கே
கத்துவதை இத்துணைபேர் காண்பார்' என்றே
    கத்திநின்றான், இசைக்கலையில் அறிவில் லாமல்.
320

இசைக்கலையில் அறிவில்லான் எனினும் அன்னான்
    எடுத்துவிட்ட ஏளனத்தில் இழைந்து நிற்கும்
நகைச்சுவையில் அவன்மூளை நடப்பைக் கண்டோம்;
    நகத்தக்கார் ஆயிடினும் அவரி டத்தே
முகைத்துவரும் அறிவுமுளை இருக்கு மென்றே
    முனைப்பாக அதைவளர்க்க முயலல் வேண்டும்;
பகைப்பில்லா வெற்றியதன் படிஒன் றாகும்;
    படியேறிச் செல்வதற்குப் பயிற்சி வேண்டும்.
321

'அறிவுடையம் யாம்'என்றே அகந்தை கொள்ளின்
'அறியாமை அஃதே'என் றறையும் முப்பால்;
செறிவுடையார் இஃதுணர்ந்து செருக்கு நீக்கில்
செழித்துவரும் வெற்றியதன் படிஒன் றாகும்;
அறியாமை தனையறிதல், அடுத்த வர்தம்
அறிவறிதல், செருக்ககற்றல் எனுமிம் மூன்றும்
அறியாமை அகற்றிவெற்றி பெறுவ தற்கே
அரும்படைகள்; அவைமனிதற் கமைதல் நன்றாம்.
322

அறிவிருந்தும் திறமிருந்தும் அவற்றின் பாங்கால்
அடைவாழ்வை அடையாமல் அவலங் கொள்ளப்
பொருளியலால், பிறப்பதனின் உயர்வு தாழ்வால்
பொதித்தழுத்திப் பொக்கையராய்ப் புழுக்க லாக்கி
மருளவைத்தார் செல்வத்தார், மதத்தின் பாலார்;
மற்றிவற்றை அறிவிருந்தும் அறிதற் கேற்ற
தெருளமைந்த சூழல்இல்லா நிலையால் பல்லோர்
தேக்கமெனும் அறியாமைத் திசையில் உள்ளார்.
323

கல்வியினால் அதன்வேரைக் கெல்ல வேண்டும்;
கருத்தெனும்வாள் கொண்டதன்கால் கடியவேண்டும்;
பல்கலையாம் கூர்வேலைப் பாய்ச்ச வேண்டும்;
பகுத்தறிவாம் குறடால்பல் பிடுங்க வேண்டும்;
ஒல்வகையாம் கணைகொண்டே ஒடுக்க வேண்டும்;
ஒளிஉளியாற் பெருந்தலையை உடைக்க வேண்டும்
செல்வவள நன்கொடையால் செகுக்க வேண்டும்;
செய்தொண்டால் பெருவெற்றி பெறுதல் வேண்டும். 324

பள்ளியெலாம் கோயிலெனப் பரவ வேண்டும்;
படிப்பதிலே பிஞ்சுளத்தைப் பதிக்க வேண்டும்;
துள்ளியெழும் காளையரைத் தூண்டி விட்டுத்
துடிப்பாக அறிவியலைத் துய்க்கச் செய்து
தெள்ளுதமிழ் இலக்கியத்தைத் தெளிவாய்க் கூறித்
திகழ்கின்ற ஆங்கிலத்தில் தேறச் செய்து
தள்ளிவைக்க ஒருவரில்லை உலகத் தென்றே
தகவான வெற்றியதைப் பெறச்சூள் கொள்வோம். 325

[எண்சீர்
ஆசிரிய விருத்தங்கள்]

கோவை. இளஞ்சேரன் கவிதைகள்

# 6. நவில் தொறும் நூல் நயம்



நூல்போலும் பண்புடையார்
மேல்நட்பு இன்பமதாம்;
நூலதைப்பயி லப்பயில
மேன்மேலும் நயந்தோன்றும்;

கால்கொள்ளும் அறிவெல்லாம்;
நூல்கள்பல் துறைநூல்கள்
சால்பமைய நவில்நவில்க!
நூல்குறள்நூல் கூறுவதோ:

நவில்தொறும் நூல்நயம் போலும், பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

(குறள்: 783)

## நூல் தொடர்பு:

பொருள்
எண்

தமிழ் அணிகலன் - 45.

கவிதைப் பொங்கல் - 46.

எதிர்மறை முகத்தால் ஏற்றம் - 47.

நெடுநல்வாடை - 48.

ஏட்டுச் சுரங்கங்காள் - 49.

களஞ்சியத்தில் கறையான் - 50.

# 45. தமிழ் அணிகலன்

செந்தமிழ் இன்பமதே - தமிழீர்,
செப்பும் அளவுளதோ?
அந்தமிழ் வான்அளக்க - தமிழீர்,
அளவுகோல் கண்டதுண்டோ? 326

கன்னல் கசப்பென்பார் - செந்தமிழ்
கண்டிட்ட நுண்சுவையோர்;
மின்னல் இருட்டென்பார் - செந்தமிழ்
மேவும் ஒளியுணர்வோர். 327

உள்ளம் கவிழ்ந்திருப்பின் - செந்தமிழ்
ஊக்கம் அளிப்பதுகாண்;
வெள்ளம் எனஅறிவைச் - செந்தமிழ்
வெற்றிக் களித்திடுங்காண்! 328

முன்னவர் வாழ்ந்தநிலை - செந்தமிழ்
முன்னிற்கச் செய்வதுகாண்;
பின்னவர் வாழ்வினுக்கும் - செந்தமிழ்
பெற்றி அளிப்பதுகாண்; 329

வள்ளுவ னார்இளங்கோ - கபிலர்
பரணர் சாத்தனாரை
அள்ளித்தன் செல்வங்களாய்ச் - செந்தமிழ்
அணைத்து நிற்பதுகாண்! 330

வீரத்திற் குச்சேரன் - செந்தமிழ்
வளர்த்த பாண்டியனை,
சாரப் புகழினுக்கும் - சோழனைச்
சாற்றி மகிழ்வதுகாண்! 331

துலக்கும் மொழிவரம்பில் - செந்தமிழ்
'தொல்காப் பிய'த்ததுகாண்:
இலக்கண நூலதுகாண் - அதற்குள்
இலக்கியம் மிளிர்ந்திடுங்காண்! 332

'பத்துப்பாட் டெட்டுத்தொகை' - 'பதினெண்
கீழ்க்கணக்' கெனும்ஒளிசேர்
முத்தணி, பட்டுடையால் - செந்தமிழ்
முறுவல் கொள்வதுகாண்! 333

கண்ணகி தன்'சிலம்பும்' — 'மேகலை'
கன்னித் துறவதுவும்
பண்ணொடு கூத்ததுவும் — செந்தமிழ்
பணைக்க நிற்பதுகாண்! 334

தேவர்'சிந் தாமணி'யே — தேன்சுவை
தேக்கும்'முத் தொள்ளாயிரம்'
மேவு'நன் னூல்காரிகை' — எனும்பல
மேன்மைகொண் டிசைப்பதுகாண்! 335

நாவுக் கரசரியல் — ஞான
சம்பந்தர் தேனிசைச்சொல்
பாவுக்கு மாணிக்கமும் — சுந்தரர்
பாட்டும் தமிழ்க்கணிகாண்! 336

கம்பர் கலையதனால் — சேக்கிழார்
கனிதமிழ்ச் செஞ்சொலினால்
செம்மைச் செயங்கொண்டார் — கலிங்கச்
செழும்'பர ணி'ச்சுவையால், 337

குமர குருபரரால் — தூயநம்
   மாழ்வார்இ ராமலிங்கர்
கமழ்புகழ்ச் சுந்தரனார் — மீனாட்சி
   சுந்தரர் பேரறிவால். 338

தங்கம் எடுத்ததென — நம்மரும்
   சங்கநூல் கொண்டுதந்த
பொங்கு தமிழ்த்தாத்தா — உ. வே. சா.
   பொற்பால் பொலிந்திடுங்காண்! 339

பாவுக் கொருபுலவன் — பாரதி
   பாட்டில் தனிப்புகழ்காண்!
'தேவி'க் கொருமழலை — செந்தமிழ்
   தேக்கி வைத்ததுகாண்! 340

தனித்தமிழ் மறைமலையால் — தென்றல்
   தருந்திரு. வி.க. தன்னால்
இனித்தசோ பாரதியால் — செந்தமிழ்
   இயங்கும் தனிப்பொறிகாண்! 341

தந்தை பெரியார்நா — ஊட்டிய
தன்மானக் கருத்தால்
நந்தம் அறிஞர்அண்ணா — நாட்டிய
தமிழ்நா டெனும்பெயரால், 342

பாரதி தாசனெனும் — புரட்சிப்
பாவேந்தர் தேன்பாவால்,
சீரதி கம்பெற்றே — பகையைச்
சீறியே வெல்வதுகாண்! 343

இயற்புல வர்குழந்தை — இயற்றிய
இராவண காவியமும்
நயப்புடை நாமக்கல்லார் — நல்கிய
நற்கவியும் அணிகாண்! 344

விண்ணில் ஒளிர்மீன்கள் - கணக்கில்
விரிக்க ஒண்ணுமோகாண்;
எண்ணில் தமிழ்நூல்கள் - எண்ணில்
எண்ணும் கிடைக்குமோகாண்! 345

'தமிழ்தமிழ்' என்றுசொல்ல — வாயினில்
தண்ணெனத் தேனாறாம்;
தமிழொன்றை எண்ணிடிலோ — வாழ்வினில்
தங்கிடா இன்பமுண்டோ?

346

[இடைச் சீர் விட்டிசைக்கும்
ஈரடிக் கலித்தாழிசைகள்]

# 46. கவிதைப்பொங்கல்

கவிதை என்னுஞ் சொல்லில்
கவியுந் தையும் உண்டு;
கவியும் வளங்கொள் தையும்
கவிதை என்னத் தகுமே.

[வஞ்சி விருத்தம்]

347

சிற்றில் நற்றூண் பற்றித் *தெற்றியில்
கற்சிலை போலொரு பொற்சிலை நின்றாள்.

உள்ளம் சிப்பியாய் உந்திய முத்துகள்
கொள்ளை வியர்வைக் கோவையாய்ப் புருவ
வில்லில் விரிந்தன; விரிந்த முத்தெலாம்.
சொல்லின ஏக்கமாம் சுடரிலாப் பொருளை.

முழுநிலா முகத்தில் மூட்டமாம் ஏக்கம்
பழுதினை யாக்கிப் பரப்பிட, நெய்யில்
பொரித்த அப்பளம் போன்றது முகமே.

நிறுத்தின யாழ்என நின்றுள் நெளிந்தே.

---

* தெற்றி - திண்ணை

மங்கல நாண்வழி மனம்புகுந் தாங்கே
தங்கின பொறையன் தமிழா சிரியன்
ஒருவனுக் கென்றே ஒதுக்கிய ஒப்பனை
புரிந்திடா தொத்தாள் புனையா ஓவியம்.
அஞ்சல் ஊழியர் அவட்கொரு முடங்கல்
கொஞ்சுதற் கென்றே கொடுத்தார்; அந்தக்
கற்சிலை நெகிழ்ந்து கனிச்சிலை யானது.
சொற்கலைக் கடங்காச் சுடர்பெற் றதுவே.
முடங்கிக் கிடந்தஅம் முனையிலாக் கம்பி
முடங்கல்மின் னாற்றலால் மூரி நிமிர்ந்தது.
ஓடினாள் அறையில் உணர்வாம் முடங்கலைக்
கூடிய பொறையனாய்க் கூட்டியே அணைத்தாள்;
ஒட்டிய இடத்தில் ஒருநூறு முத்தம்
இட்டே பிரித்தாள்; இவளோ கிழிப்பாள்?
எழுத்தொவ் வொன்றும் பழுத்த சுளையாய்
அள்ளி விழுங்கும் ஆயிழை
தெள்ளிய ஓசையாம் துள்ளலிற் படிப்பளே.

[நேரிசை ஆசிரியப்பா]

348

முத்தும் பவளமும் முந்திரி நீலமும்
வைத்துப் பதித்த வளர்நிலா ஊர்ந்திடும்
புத்தூர் மனையிலும், பூத்தஎன் உளத்தும்
முத்திரை யாய்வாழ் முகிழ்நகைப் பொன்னீ
நத்திய பிரிவால் நலிந்து சாம்பிடும்
அத்தான் பொறையன் அலறுவ கேளாய்:

— தரவு

துளித்துமலைப் பிறவாதென்
துணைக்குவந்த பொன்னியன்பே!
பழித்தல்இலாத் தமிழ்பயின்றேன்;
பாவாய்!உன் பக்கலின்றிக்
கலித்தொகையுங் கசந்ததடி;
குறுந்தொகையுங் குமட்டியதே;
குளித்துள்ளேன் ஏக்கத்தில்;
குளிர்காய வருகின்றேன்.

உருக்கியெடுத் தொளிராதென்
உயிர்க்கொளிரும் பொன்னியன்பே!
உருக்கமைந்த உடல்பெற்றேன்;
உயிரே!உன் துணையின்றிப்

பருக்கைபகை யானதடி;
பஞ்சணைகல் லாகியதே;
முறுக்கவிழ்ந்த கயிறானேன்;
முறுக்கேற்ற வருகின்றேன்.

மெருகேற்றும் பொன்னன்றி
மெருகளிக்கும் பொன்னியன்பே!
முருகேற்ற எழில்கொண்டேன்;
முற்றிழைஉன் முகமின்றிச்
சருகேற்ற உடலானேன்;
சாம்பல்நிற மாகியதே;
உருகேற்றுச் சோர்கின்றேன்;
உருப்பெறவே வருகின்றேன்.

- தாழிசைகள்

இவ்வணம், - தனிச்சொல்

நந்தம் பிரிவதை நசுக்கியே இன்பம்
தந்திட வந்திடும் தமிழர்தம் திருநாள்
பொங்கலுக் குளத்தே பொங்கிடும் நன்றியைத்
தங்கமாய்ப் படைத்தே தமிழ்ச்சுவைக் கண்ணே!

பிற்குறிப் பொன்றைப் பின்னே வைத்து,
நற்சேர்க்கை நாடும் நாடித் துடிப்பொடு
நின்னுளம் தொத்தி நிலைத்த
பொன்னிப் பொறையன் பொதித்தேன் வணக்கமே.

— கரிதகம்
[நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா]

பிற்குறிப்பு:

பொங்கலுக்கெனப் பெறவேண்டுமே
தங்கச்சீரகச் சம்பாஅரிசி
கற்கண்டொடு கமழ்வெண்ணெயும்
சொற்கண்டன சுவைஆன்பால்
ஏலமுந்திரி பசும்*பாளிதம்
கோலமணப்பொருள் குலைக்கனிகளும்
மேலும்உள்ளன நாலும்வாங்கிவை!
நானோ,
உணர்ச்சி வெள்ளமாய் வருவேன்
குணச்சித் திரமே குறிப்பிது கண்ணே!

[குறளடி வஞ்சி350]

* பாளிதம் — பச்சைக் கருப்பூரம்

படித்தாள்; படித்தபின்
பாய்ந்த உவகையால் படிநிறை கண்ணீர்
வடித்தாள்; வடித்தபின்
வருநாட் கிடைநாள் கணக்கெடுத் திடத்தான்
துடித்தாள்; தொங்குநாட்
காட்டிமேற் சீற்றமாய்ப் பற்களைக்
கடித்தாள்; கசிந்த
குருதியைத் துடைத்தே நகைத்தாள்.

351

பொன்னிவெள்ளம் பெருக்கெடுத்துப்
பெருங்கடலிற் பாயும்என்னும் பொருளை மாற்றிப்
பொன்னிஇவள் தனைக்கூடப்
பெருவெள்ளம் எனப்பாய்ந்து பொறையன் வந்தான்;
திண்ணையிலே கண்ணுண்டார்;
திரைக்குள்ளே கள்ளுண்டார்;
தென்னைதராக் கள்ளுண்பார்
தெளிவோ கொள்வோர்.

352

[ஓரொலி வெண்டுறை]

வாடிக்கை யாகவே அவர்க்குள்ளே
வாங்கல் கொடுக்கல் தீர்த்தபின்னர்,
வேடிக்கை யாய்ச்சில பேசிவந்தார்;
வெற்றுப் புரிசைகள் ஓய்ந்தபின்னர்
ஆடிக்கை கோத்தவப் பொறையனுமே
ஆம்,எங்கே பொங்கலுக் காவனதாம்
தேடிக்கை கூடின தேட்டமெல்லாம்
தேன்குடிலே! யான்காண வேண்டும்'என்றான். 353

'பொருத்த மாயுள பொருளெல்லாம்
பொலிவாய் வாங்கிநான் பேழையுளே
திருத்தி வைத்துளேன் பாரும்'என்றாள்;
திறந்து காட்டினாள் பேழையினை.
உறுத்துப் பார்த்தனன் ஒன்றுமிலை;
ஓரிரு நூல்களும் மைக்கூடும்
பருத்த மையூற்றுக் கோலிரண்டும்
பக்கத்தில் தாட்பொதி* யுங்கண்டனன். 354

---

* தாட்பொதி - தாள்கட்டு

ஒன்றும் விளங்கா தவன்விழித்தான்;
'ஒன்றிய பொங்கற் பொருளிவைகள்
என்றால் பொங்குதல் யாதென்றே
எண்ணிய எண்ணம் எடுத்துரைப்பாய்'
என்றான்; அவளும் புன்முறுவல்
எளிதாய் அலர்த்தி 'எனதன்பே!
கன்றிய உள்ளம் களிப்படைவீர்;
கண்ணிய பொங்கல் கழறுவனே: 355

[அறுசீர்
ஆசிரிய விருத்தங்கள்]

பொன்னியன்னை பதினெட்டாம் பெருக்குப் பேரால்
பொலிவாகத் தேர்கட்டிப் பொட்டைப் பாங்கில்
பொன்இலங்குங் கருத்தொளிரும் பனைஏ டெல்லாம்
புனலோட்டம் தனிலிட்டுப் போற்றி செய்தோம்;
கண்இயங்க மாட்டாமல் கனித மிழ்த்தாய்
கண்ணீரை விட்டதற்கே கழுவா யாகப்
பொன்னுலவும் பலநூல்கள் கவிதைப் பாங்கில்
பொலியவைத்துப் பொங்கிடுவோம், கவிதைப் பொங்கல் 356

உள்ளந்தான் நல்லடுப்பாம்; உணர்வே தீயாம்;
உயர்தமிழே ஆவின்பால்; உவமை தேனாம்;
வெள்ளைத்தாள் புதுப்பானை; விழைவே வெண்ணெய்;
விளைகருத்தே கற்கண்டாம்; அணிகள் பாகாம்;
ஒள்ளியநல் எழுத்தரிசி; சொல்லே சோறாம்;
ஒளிர்நயங்கள் மணப்பொருள்கள்; ஓர்தல் யாப்பாம்;
தெள்ளித்தான் வருஞ்சுவைகள் கனிகள், கன்னல்;
தேர்ந்தமைத்துப் பொங்கிடுவோம், கவிதைப் பொங்கல். 357

காப்பியங்கள் பலபடைப்போம்; காப்பி யத்துள்
கற்பனைகள் கலைச்சுவைகள் அளவாய்ப் பெய்து
காப்பளிக்கும் வாழ்வியலின் கவின்சுக் கானாம்
கலைப்பொறியோ டறிவியலும் பூத்துக் காய்க்குந்
தோப்பெனவே காப்பியங்கள் தொடுப்போம்; நந்தம்
தொல்காப்பி யத்தமைந்த மொழியி யல்பாம்
கோப்பெல்லாங் களமாக்கிக் குன்றம் போன்றே
கோலமொழிச் சொற்பெருக்கிக் குவிப்போம், பொங்கல். 358

[30]"வளிவழங்கு மல்லன்மா ஞாலம்" என்றே
வள்ளுவனார் ஒருகுறிப்பை வழங்கி வைத்தே
துளியளவாய் அறிவியலைத் தொடங்கி வைத்தார்;
தொடர்ந்ததனை நாம்தொட்டு வளர்த்தோ மல்லோம்;
வளிவழங்கு மண்டிலத்தை, வானத் தாய்வை
வகையாக மேனாட்டார் வகுத்துக் கண்டார்.
வழியறியோம் வள்ளுவனை உலகிற் கீந்தே
வானம்செல் வான்புகழும் அவர்க்கே ஈந்தோம். 359

[31]"வான்நிழல்"என் 'றசரீரி' வடமொ ழிக்கே
வழங்கியசேக் கிழார்வழியில் வளர்ந்தோ மோநாம்?
கால்நிழலாய்க் கதைகளையே கதைத்து வந்தோம்
காப்பியத்தில் இலக்கியத்திற் காணும் நல்ல
மேனிலைகொள் சொற்களெலாம் தொகுத்த மைத்து
மிகப்பாங்காய்க் கவிதையுரு வாக்கி நூலாய்க்
காணுகின்ற பொங்கல்எனுங் கலைச்சொற் பொங்கல்
கலங்கலமாய்ப் பொங்கிடுவோம், கவிதைப் பாங்கில். 360

உரைவளங்கள் நயநூல்கள் சிலவாய்ச் செய்தே,
உடலூட்டக் குறிநூல்கள் பலவாய்ச் செய்து,
குறைவழங்கும் பகைநூல்கள் குறையச் செய்து,
குணம்வளர்க்கும் நகைநூல்கள் நிறையச் செய்து,
முறைவழங்கும் அரசியல்நூல் முழுமை செய்து,
முழுக்கதைநூல் சிறுகதைநூல் அளவாய்ச் செய்தே
கறையில்லா மெய்ந்நூல்கள் கனிவாய்ச் செய்தே
கவின்இசையும் கூத்தும்நன் கியங்கச் செய்வோம்: 361

நிலத்தேர்வும் மண்ணாய்வும் நீரின் தேர்வும்
நிகழ்த்துகின்ற பழஞ்செய்யுள் நிலைப்பாய்க் கூட்டி,
உளத்தேர்வும் உடைத்தேர்வும் உரைக்கும் நல்ல
உவப்பாக்கும் தேர்வெல்லாம் ஒன்றாய்க் காட்டி
வளத்தேராய் நூல்கள்பல வனப்பாய்ச் சேர்த்து
வளர்பொங்கற் பானையுடன் வைத்துப் போற்றி
உளப்பொங்கல் பொங்கிட்டால் உண்மை யாக
உயர்ந்தோங்கும் தமிழ்க்கீடும் உலகில் உண்டோ? 362

[எண்சீர்
ஆசிரிய விருத்தங்கள்]

'தைப்பொங்கல் தமிழ்த்திருநாள்
தமிழ்த்திருநாள்' என்பதற்கு
மெய்ப்பங்காய்த் தமிழ்நூல்கள்
மெருகமைந்த செய்யுளிலும்
தெய்ப்பில்லா உரைதனிலும்,
தொகுத்தமைத்தும் தாம்படைத்தும்
மெய்ப்பொங்கல் பொங்குதற்கே
முதற்பொங்கல் நாமிடுவோம்.

363

என்றெண்ணி இக்குறிப்பில்
எடுத்தமைத்தேன் பேழையிலே;
நன்றெண்ணி இக்குறிக்கோள்
நடைமுறையில் வருவதற்கே
துன்றெண்ணம் கொளஉமைநான்
தொழுதுபணிந் தேன்'என்றாள்.
குன்றன்ன தோளுடையான்
குனிந்ததலை நிமிர்ந்திட்டான்:

364

[தரவு கொச்சகக் கலிப்பாக்கள்]

'நெஞ்சமர் கோதாய்! நெகிழ்ந்தனன்;
நெஞ்சம் மகிழ்ந்தனனே.
விஞ்சிய நின்னுரை வீழ்ந்தனன்,
நின்தலை ஆணைசொன்னேன்;
சொஞ்சொலை ஈட்டிய செய்யுளில்
நூலினைச் செய்யுமுன்னே
துஞ்சிலன்; நின்னைத் தழுவலன்
நோன்பிது தோய்ந்தனனே.

365

[கட்டளைக் கலித்துறை]

இனிமேல் நமது பொங்கல்
அணிதோய் கவிதைப் பொங்கல்;
கனிதோய் பொன்னிப் பெண்ணே!
துணிந்தேன் இதனை' என்றான்.

366

[வஞ்சி விருத்தம்]

குணங்கொள் பொன்னி மனங்கொள் பணியில்
நுணங்கிய பொறையன் நுழைந்தே முடித்தான்.
கணங்கொல் உலகில் கவிதைப் பொங்கற்
கிணங்கிய இருவரும் இனிதே வாழ்ந்தனர்.

367

[கலிவிருத்தம்]

# 47. எதிர்மறை முகத்தால் ஏற்றம்.

'கல்லணையில் நிற்கின்றோம் கண்ணம்மா! உன்னுடைய
சொல்லணையைச் சற்றே திறந்துவிடு! - வல்லவனாம்
சோழன் கரிகாலன் சோர்விலாக் காவிரிக்கு
ஞாலம் புகழும் கரையெடுத்தான் - கோலும்
கரையின்றேல் காவிரியால் கண்டபயன் என்னாம்?
உரை'என்றான்,
கண்ணப்பன்; 'எண்ணும் - வரை யறையாய்க்

கட்டுப் படுத்துங் கரையின்றேல் காவிரிதான்
கட்டவிழ்த்து விட்ட கடக்களிறாய் — இட்ட
தலைக்கயி றில்லாத் தடிமாடாய், ஊரை
அலைக்கழித் தோடாமல் என்றும் — நிலைத்த
அணையும் கரையும் அமைந்தே வளங்கொள்
பணையும் வயலும் பயனாய் — முனைந்து
வரையறை செய்த கரிகா லனைப்போல்
உரைசெய யாரும் உளரோ? — உரை'என
அன்னவள் சொல்ல அவனுரை செய்குவன்;

'அன்னமே, வற்றாத காவிரித் — தண்ணீர்
வழிக்குக் கரையெடுத்த வல்லமைக்கு மேலா
மொழிக்குக் கரையெடுத்தோன் உள்ளான்; — கழிக்கின்ற
கல்லால் அணையமைத்தான் காலன்; அழிந்திடாச்
சொல்லால் அணையமைத்தான் காப்பியன்; — மெல்லக்
கரையும் கரையெடுத்தோன் மன்னன்; கரையாக்
கரையெடுத் தோன்சொற் புலவன்; — புரையும்
கதையளக் காமலே காப்பியம் செய்தான்;
விதையெனச் செந்தமிழ் வித்தித் — துதையும்
தமிழுக்குக் **காப்பின் இயம்**என நின்றே
இமிழ்கடல் நானிலத் தீன்றோன்;— அமிழ்தெனும்
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றியே
தொல்காப் பியநூலைத் தோற்றினோன் — மல்குநூல்;
நந்தாய் மொழிக்கொரு நாடி; ஒளிதரும்
நந்தா விளக்கது கோடியாம் — முந்திச்
சிதைக்கும் பகைக்கது காப்பு; பதித்த
சிதைவிலா முத்திரைக் கோப்பு — விதையாய்

இலக்கணத் தின்வை ரக்கல்; வளரும்
இலக்கியத் திற்கோர் உரைகல். — முழக்கும்
எழுத்ததி காரம்நற் சொல்லதி காரம்
வழுத்தும் பொருளதி க்காரம் — பழுத்திட்ட
முக்கனியாம் பாங்கில் முறையாய்ப் படைத்திட்ட
அக்கனியில் மிக்கசுவை எக்கனியோ? — *மைக்கணியே
சொல்'என்றான். கண்ணம்மா சொல்லும் மொழியதில்!
வெல்லமொழி நன்னயமாய் வைத்திட்டே — சொல்ல
லுற்றாள்
'முக்கனி என்றிட்டாய் முற்றிலும் உண்மையே;
பொய்க்கனி ஒன்றைப் புகன்றிட்டாய்; — ஒக்கக்கேள்!
தொல்காப் பியனேதான் தோற்றிய தொன்னூலாம்
தொல்காப் பியமதில் தோலாது — பல்கும்
எழுத்ததி காரமென் றில்லவே யில்லை
அழுத்தமாய்ச் சொல்வேன் அன்பா! — எழுத்தைத்
தொகுத்தும் விரித்தும் தொடர்ந்தும் கனிபோல்
வகுத்த இனிமையைக் கொண்டு — பகுத்தால்
'எழுத்து அதி காரமாய் இல்லையே என்றாள்.
(எழுத்ததி காரமாய்)

*மைக்கணியே - மைபூசிய கண்ணை உடையவளே.

'முழுத்தும் நயமதே; ஆனால் — எழுத்திற்குச்
சாரியை 'கார'மெனச் சார்ந்திருக் கும்போது
காரமே இல்லையோ' என்றிட்டான். — 'காரந்தான்
ஒன்றே உளதால் அதிகாரம் (அதி காரம்) இல்லையே'
என்றாள். 'அதனால், அதிகாரம் — என்பதே
தொல்காப் பியமதில் தோற்றிய தில்லெனச்
சொல்லவுஞ் சொல்வாய்' எனச்சொல — மெல்லியல்
'சொல்லதி காரமும்' தொல்காப் பியமதில்
இல்லென் பதற்கும் இடமுண்டு — சொல்வேன்:
வளவிய செந்தமிழ்ச் சொல்லில் வடசொல்
நுழையும் விதிப்பில் "வடசொற் — கிளவி
வடவெழுத் தொரீஇ" எனவே, வடசொல்
முடம்படச் செய்த முறையால் — வடசொல்
முழுவுரு வம்போய் முடங்கித் திரிந்து
எழுதற் கியலா நிலையுற் — றமும்வட
சொல்அதி காரமும் தொல்காப் பியமதில்
இல்லென் பதற்கும் இடமுண்டு; — செல்வப்
பொருளை விளக்கும் பொருளாய் எதையும்

அருளாது விட்ட அமைப்பால் — மருள்தரும்
செல்வப் பொருளின் அதிகாரம் காப்பியச்
செல்வத்தில் இல்லாமற் செய்ததால் — செல்வப்
பொருளதி காரமும் இல்லையாம்' என்றே
பொருள்நயந் தோன்றப் புகன்றாள் — மருளாத
கண்ணப்பன் 'ஏதேது கண்ணம்மா, உன்போக்கில்
பண்ணற்கு விட்டிட்டால் காப்பியனார் — துன்னும்
இலக்கணச் சான்றோன் அலன்எனப் பாங்காய்க்
கலக்கமே இன்றிக் கழறிக் — கலக்குவையே'
என்றவன் சொற்போல் இளங்கொடி சொல்லுவாள்:
'ஒன்றிய தொல்காப் பியனைநான் — என்றும்
இலக்கணச் சான்றோன் எனவொன் றியம்பேன்.
முழக்கிய தொல்காப் பியத்தில் — விளக்கும்
இயல்லாம் கண்டிடின், நூன்மரபு தன்னால்
முயலும் நெடுங்கணக்கு முன்னோன்; — அயலாம்
பிறப்பியல் தன்னால் உடற்கூ றறிஞன்
சிறக்கும் புணரியல் தன்னால் — திறக்கும்
இசைப்பியற் சான்றோன்; கிளவியாக் கத்தால்

வசையில் மொழிசூழ் அறிஞன்; — இசையும்
விளிமரபு தன்னால் விளித்தே உறவின்
கடியதீ உதைப்பக் கலங்கி, இடையே
நெடியவே ஓட்டமாய் நெஞ்சம் பதறிட,
மடியவே எண்ணி மனஞ்சலித் தலைந்தனே, 514

துன்பக் காட்டினில் இன்ப மலர்ச்சியாய்
என்பிலா நங்கையென் ஏழ்மைக் கிரங்கி
அன்பினால் அதிர்த்துடன் அலைகளை அனுப்பும்
என்பெரும் புக்கக இருப்பிடங் கண்டே, 515

ஆர்வம் பொங்கிட அசைந்தே நகர்ந்து
சோர்வெலாம் விலகிடச் சேர்ந்தேன் அவ்விடம்;
சார்வதால் நன்மையே சாருமென் றெண்ணினேன்;
ஊர்வலம் வந்ததில் உற்றதே பெற்றனே. 516

நல்லார் நாவினில் நனைத்திடில் துப்புவர்;
வல்லார் பலரிடம் வணங்கும் வேலையோர்:
கல்லார் கூட்டம் கற்றாரை ஒதுக்கலாய்ப்
புல்லா தென்னையே நிறுத்தினர் புறத்தே. 517

தனித்து நின்றதால் தக்கலூய் வெடுத்தேன்;
இனித்தடை இல்லையென் றிரும்பெருங் கருநிற
நனித்துவர்க் கடலும் நன்றெனச் சேர்த்தது;
குனித்துத் திரையுடன் குலவினன் கலந்தனே. 518

ஆண்பால் இல்லையே யாருமிங்' கென்றேன்
மாண்பாங் காதலும் மகிழ்ச்சியுந் தருபவன்
காண்பாய், வருவான் காலைகொண்' டென்றனர்;
வீண்போக வில்லைவந் தனன்கதி ரவனே. 519

காட்டினான் பொன்னுடல்; ஊட்டினான் காதலை;
தீட்டிய அழகில் தெவிட்டான்; ஆயினும்,
நாட்டிடுந் தொழிலோ காட்டொளிர் தீயாம்;
ஆட்டமும் அழகுநஞ் சார்ந்தபாம் பிடத்தே! 520

வருவதை அறிந்ததும் வணங்கியே நாணினேன்;
பருவம் அறிந்தவன் பொற்கையாற் பற்றியே,
உருவிலி ஆக்கி உயரக் கொண்டுபோய்
'இரு'வெனக் கூறினான்; இருந்தேன் பாங்கிலே. 521

விருப்பினால் என்றவன் விழைந்தெனைப் பற்றியே
நெருப்பினைக் கக்கினான்; நெக்குவிட் டுடலெலாம்
கருப்பாய்க் கருகிடக் கருப்பமும் உற்றதால்,
விருப்பாய்த் தோகையை விரித்தன மயில்களே. 522

'நாலாம்'பே ரறியா நங்கையா யிருந்தேன்;
கோலா கலத்தாற் கொண்டிமா டாக்கிக்
*காலாம் வண்டியைக் காட்டித் தாயகம்
மேலாய்ச் சென்றுவா' என்றான் மணாளனே. 523

அன்னமாய் இருந்தநான் °அண்டங் காக்கையாய்,
இன்னிசை ஒலிபோய் இடிக்குரல் ஒலியாய்,
அன்னை'என் றழைத்தவர் 'அரக்கி'என் றேசிட
நன்னயம் இழந்து நலிவுற் றலைந்தே, 524

---

* காலாம் வண்டி - காற்றாகிய வண்டி; கால்நடை.
° அண்டங்காக்கை - கருங்காக்கை; உலகத்தைக் காப்பாற்றுபவள்.

காற்றெனுங் கூற்றுவன் காலால் உதைத்துத்
தூற்றியே தள்ளித் 'தூ'வென் றுமிழ
நாற்றிசை எங்கணும் நாயாய்த் திரிகையில்
மாற்றிலா அன்புகொள் மலைகண் டணுகியே, 525

'அன்னாய்' என்றவள் அருந்தாள் நோக்கினேன்;
'பெண்ணே' என்றெனைப் பொறுத்தனள் தலைமேல்
தன்னேர் இலாத தாய்மடிக் குழவியாய்த்
துன்னியே படிந்து தூங்கினேன் அயர்ந்தே. 526

வெப்பத் தினாலே வெந்ததென் உடல்எனச்
செப்பியே *கருநோய் செகுத்திட அன்னையும்
ஒப்பியே அழைத்தனள் உயர்தண் தென்றலை;
தப்பா தடைந்தெனைத் தழுவியே நின்றதே. 527

உண்மை ஒளியால் பொய்யிருள் அகறல்போல்,
திண்மை பிறந்ததுந் திகைப்பெலாம் அறுதல்போல்
தண்மை அணுகவுந் தீநோய் பறந்திட
வெண்மை பெற்றுடல் 'வெலவெல'ப் படைந்தே, 528

* கருநோய் – கருப்பம்; கருமையாகிய நோய்.

இன்னதென் றென்னால் இயம்ப இயலா
தென்ன தகமெலாம் அயர்வதை அறிந்தேன்;
'தன்னலங் கருதாத் தக்கோர் தோன்றிட
உன்னிடங் குறி'யென உரைத்தனள் அன்னையே. 529

குடியாய்க் கொண்டு குளிரெனை வாட்டப்
பிடியாய் நடுக்கம் பிடித்திடப் பசும்பொன்
*தடியாய் மின்னல் 'தகர்ப்பேன்' எனஅஞ்சித்
துடியாய்த் துடித்தே இடியாய்க் கத்தியே, 530

குலையைத் தள்ளியே குலைந்திடும் வாழைபோல்,
கொலைசெய் கருவியாம் அழகமை மலர்போல்,
விலையிலா மக்களை விண்ணின்று மாரியாய்
மலையினிற் பொழிந்து மறைந்தொழிந் தேனே. 531

விண்ணெலாம், நிலமெலாம் வெருவியே நடந்ததால்
எண்ணிலாத் துன்பங்கள் எய்தினும், என்னால்
மண்ணுளோர் வளமெலாம் மலிந்து மகிழ்வதை
எண்ணினேன், உண்டேன் 'ஈத்துவக்கும் இன்ப'[66]மே. 532

* தடி - தடிக்கம்பு; மின்னல்.

நீரெனத் தோன்றினேன்; ஆறென ஓடினேன்;
வாரலைக் கடலென வளர்ந்தேன்; ஆவியாய்
நேரிலா முகிலாய் நேர்ந்தேன்; வாழ்த்திடப்
பாரெனும் மடந்தைக்குப் படைதன் மழையே. 533

[கலி விருத்தங்கள்]

# கடன் அறி காட்சியவர்



திகழ்சான்றோர் புகழ்பாடி
மகிழ்வதொரு மதர்ப்பாகும்.
முகிழ்தொண்டே முனைப்பாக்கி
இகழ், வறுமை, இடர்வரினும்

பொதுநலம்தம் கடன்என்றே
உதவிடுவார்; உயர்வாழ்வை
உதவிடுவார்: அவர்அறிவிற்
கெதிரில்லை. ஏனென்றால்,

''இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்''

(குறள்: 218)

## காட்சிப் பெட்டகத்தில்:

பொருள்
எண்

பாட்டுக்கு நேர் எந்தப் பாட்டு? - 66.
தமிழன்னைக்குத் தோழி - 67.
பொதுமை திகழும்; புதுமை நிகழும் - 68.
பொன்றாப் புகழில் புதுக்கிய கொற்றன் - 69.
புதுமை தந்த குணக் குன்று - 70.
உணர்ச்சியின் ஊற்றுக்கண் - 71.
ஆன்மிக ஓடை - 72.
ஏழைக்கு இலக்கியம் சோறு - 73.
சிலையில் ஓர் ஆண்மை மலை - 74.
பண்பாட்டின் விரிவுரை - 75.
அறிவுப் புதிர் - 76.
ஓர் இலக்கியப் படிவம் - 77.
முடியாத பாட்டு - 78.
எதிர்முழக்கிட்ட எரிமலை - 79.
புரட்சித் தென்றல் - 80.
வாழ்க! வாழ்க! - 81.



# 66. பாட்டுக்கு நேர் எந்தப் பாட்டு?

*வள்ளுவர் வாழ்வியல் வல்லவர்; வாழ்ந்திடத்*
*தெள்ளிய நல்வழி தேர்ந்துதந் தார்குறள்;*
*கொள்ளுவம் வாழ்குறிக் கோள்.* 534

*சிக்கியது வாழ்வுப் படகு; திருக்குறள்*
*சுக்கான் திருத்திச் செலுத்தியது, வள்ளுவராம்*
*தக்காரின் கைப்பட்டுத் தான்.* 535

*வெள்ளம் துளியாக்கி, வேண்டும் சுவையேற்றி*
*மெள்ளச் செவியூட்டி, மேன்மை வளமாக்கும்*
*வள்ளுவர் தாயன்பின் வார்ப்பு.* 536

*தமிழர்க் கொருநூல்; தரணித் திருநூல்*
*அமுதக் கருநூல்; அறிவுப் புதுநூல்*
*கமழ்வைத் தருநூல் குறள்.* 537

உலகியலை நுண்ணறிவால் ஓர்ந்து, தெளிந்த
நலவாழ்வைப் பட்டறிவால் தேர்ந்து,நல் மாந்தர்
குலவாழ்வாய்த் [redacted]தந்தார் குறள். 538

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறனே'[67]
எனத்தக்க தோர்குறள் ஏற்கும்உல கந்தான்
குணத்துக்குள் நிற்கும் குறி. 539

கற்றவற்றை விற்றுவிற்றுச் சுற்றிவரும் வெற்றவர்க்குக்
'கற்றபடி நிற்க'[68]வெனச் சொற்றதிரு வள்ளுவனார்
முற்றறிவின் ஆசிரிய முத்து. 540

'பிறப்பொக்கும்''[69] என்றே பிறப்புயர்வு தாழ்வை
அறுப்பதற்குச் சொன்ன அறிஞர்; அவர்சொல்
துருப்பெனவே கொள்வோம் துணிந்து. 541

'உயிர்செகுத் துண்ணாமை நன்'[70]றென்று, தீயில்
'அவிசொரிந்து வேட்டலை' ஆழ்த்தித் தமிழர்க்
கவர்சொரிந்த சொல்போற்று வோம். 542

சோற்றுக்குக் கையேந்தச் சொன்ன கடவுளை
'வீட்டுக்கு வீடுகை ஏந்[71]தென்ற வள்ளுவர்
பாட்டுக்கு தேர்எந்தப் பாட்டு?

543

வீட்டுலகை விட்டுவிட்டு நாட்டுலகைக் காட்டுகின்ற
பாட்டுலகாம் நற்குறளைத் தீட்டியசீர் வள்ளுவர்சொல்
கேட்டுலகம் வாழ்க கிளர்ந்து!

544

ஆரியக் கொள்கை அருந்தமிழ்க் கொள்கைக்கு
மாறெனும் உண்மையை மாண்புறு பாங்கினில்
கூறினார் வள்ளுவ னார்.

545

மாரடைப்பு நோய்க்கென்றே ஓரடைப்பு
சொல்லிவைத்தார்,
சீரடைப்பாம் நானூற் றிருபத்தொன் பான்குறளால்
நீரடைப்பீர் அந்நோய் நிறுத்து.

546

'சுழலும் உலகம்', 'கலங்கிய விண்மீன்',
'வளிவழங்கு ஞாலம்'[72] எனவே அறிவியல்
வழங்கிற்று வள்ளுவர் வாய்.

547

மொட்டுக்குள் நாற்றம்'என்றும், 'மோப்பக் குழையும்'
என்றும்
'நெட்டுத்தண் டின்நீட்டம்' என்றும்[73] செடிமவியல்
தொட்டுக்காட் டுங்குறள்கள் துய்ப்பு. 548

'கண்ணோட்டம் என்னும் கழிபேர் அழகாலும்?'
"பண்புடையார்ப் பட்டுண்"[74] டதனாலும் பாருலகம்
உண்டெனல் நுண்ணறிவின் ஊற்று. 549

உலகத் தறிஞர் உவந்து புகழ்ந்து
பலநன் மொழியிற் பரிந்து பெயர்க்க
இலகும் திருநூல் குறள். 550

வள்ளுவர் முப்பால் வழங்கினார்; இஃதொன்றே
கொள்ளற் குரியது; கோத்த கதையெல்லாம்
கள்ளக் குடுக்கைகள் காண்! 551

ஒத்த தறிந்த உயிர்வாழ்ந்தார்[75] வள்ளுவனார்;
செத்தாரோ! நம்மிடையே வாழ்கின்றார்; நாம்உலகில்
ஒத்த தறிந்துவாழ் வோம் 552

(சிந்தியல் வெண்பாக்கள்)

# 67. தமிழன்னைக்குத் தோழி



தமிழன்னைக் குத்தோழி; தமிழினத்துச் செவிலித்தாய்;
தமிழ்மகளிர் தலைமகளாம்; தமிழரசிற் கொருதூதி;
தமிழ்மிடுக்கிற் பேரரசி; தமிழ்நெறியின் ஆசிரியை;
தமிழ்ப்பாட்டிற் கொருபாட்டி; தமிழவ்வைப் பெயரினளே. 553

கருநெல்லிக் கனிபெற்றும், கழன்றவேல் சிறப்பித்தும்,
அருநல்லோர் வழியேதான் நிலம்நல்ல[76] தெனக்குறித்தும்,
பெறும்பரிசில் வாழ்வெனிலும் பிறழாத வாழ்வேற்றாள்,
உறும்பெரிய மதர்ப்புள்ள உயர்சங்கத் தவ்வைத்தாய். 554

'கோலோச்ச அமைச்சனெனக் கொள்வதுயாம் எவரை'என
"நூலெனிலோ கோல்சாயும்"[77] எனப்பாடிப் பூணூலார்
தோலுரித்துக் காட்டியவள்; தோலாத நாவெனுஞ்செங்
கோலுடையாள் அடுத்துத்தோன் றியஅவ்வைக் கொள்கையளே, 555

பிஞ்சுள்ளம் வளம்பெறவும், பேருள்ளம் உரம்பெறவும்,
நஞ்சுள்ளம் சீர்பெறவும், நடுவுள்ளம் பெருகிடவும்
செஞ்சொல்லால் நல்'ஆத்தி சூடி'யொடு நன்னெறிசேர்
கொஞ்சுதமிழ் நூல்கள்மூன் றாம்அவ்வை கொடைத்திறனே.
556

'தமிழ்நாட்டை இழந்தாலும் தமிழவ்வை நூல்களெனும்
அமிழ்தையாம் இழந்திடுதற் கொருக்காலும் ஒருப்படோ'[78]
மென்
றெமதருமைக் பாரதிதான் எழுதியசீர் மெய்யன்றோ?
தமிழகத்திற் கொருபுதையல், தமிழவ்வைப் படைப்புகளே.
557

கொற்றவனைப் பாடியவாய் குறத்திக்கும் பாட்டிசைத்துச்
சொற்றமிழைப் பொதுவுடைமைச் சீராக்கி, நற்றகுதி
அற்றவரைத் தானொதுக்கி, அரவணைப்பார்
தமைவாழ்த்திக்
கற்றவர்க்குக் கற்றவளாய்க் களித்தாள்எம் அவ்வைத்தாய்.
558

அன்னைக்கும் அப்பனுக்கும் அண்ணனுக்கும் அக்கைக்கும்
பின்னையொரு அத்தைக்கும் பிறங்குமுதல் எழுத்தோ'அ'
முன்னைத்தம் அவ்வைக்கே 'ஔ'என்றே கொள்வாரோ?
'அன்னை'என்ற பொருளன்றோ? 'அவ்வை'என்றே
வழங்கிடுவோம்.
559



## 68. பொதுமை திகழும் புதுமை நிகழும்.

தமிழிற் கவிஞர் தகவிற் பெரியர்;
தருநற் சுவையில் தமிழே யனையர்;
தமிழப் புலவர் தம்மிற் சிலம்பின்
தவமார் இளங்கோ தகவே பகர்வேன்: 560

வளமை, எளிமை, இனிமைச் சொல்லால்
வற்றா ஊற்றாம், வடித்த சுவையாம்
இளமை எழிலாம், முதுமை அறிவாம்,
இளமென் கதிராம் இளங்கோ கவியே! 561

இயலே வனைவாய், இசையே ஒலியாய்,
இனிமைக் கூத்தே இடையார் பரலாய்,
கயலே யனைகண் ணகியார் பொருளாய்க்
கவினார் புலவன் கவிதேர் சிலம்பே. 562

ஞாயிற் றதனை நகைதிங் களதை
யாம் 'போற் றுது''மென் றொருகாப் பியத்தின்
வாயிற் றிறந்த வளமார் புதுமை
அவனே யன்றி எவனே செய்தான்? 563

பொழில்சேர் வளமார் புகார்க்காண் டமதில்
பொன்னார் உளத்தன் பொழியும் பெருமை
எழில்சேர் கவிதை ஏற்றந் தனிலே
எளிமை தவழும்; இனிமை அவிழும். 564

முத்துடை வளமார் மதுரைக் காண்டம்
முழுதும் இழைந்து முழங்கும் பொருளில்
அத்துணைச் சுவையும் அருங்கண் ணகிதன்
ஆண்மைச் சுவையாம்; அவலக் குவையாம். 565

வனப்பார் மலைசேர் வஞ்சிக் காண்டம்
வழங்கும் புகழ்மை வகைசேர் பொருளில்
சினப்போர்த் தமிழன் சிறப்பிற் புறமார்
சீற்றம் மிளிரும்; ஏற்றம் ஒளிரும். 566

மூவர் மன்னர் முடியர் தமிழர்
மும்முனை யதுவாய் முனைந்தார் பிரிவில்;
பாவார் சிலம்பாம் பாட்டில் மூவர்ப்
பொதுமை திகழும்; புதுமை நிகழும். 567

பெண்மைக் குயர்வைத் தண்மைப் பொருளால்
பெருங்காப் பியமாய்ப் பேழைச் சுவையாய்,
உண்மைக் கலையாய், உயர்பொன் குவையாய்,
உலகிற் புகழாய் உலவத் தந்தான். 568

மலர்க்கண் ணகியைப் புகார்க்காண் டத்தில்
மழலை மகளாய், மதுரைக் காண்டத்
தலர்பேர் *அனையாய், அருவஞ் சிதனில்
அணங்கார் நறுதெய் வதமாய் அமைத்தே, 569

மழலை பயிற்றி, மடப்பம் இயற்றி,
மயலார் வழக்கில் மதுகை செயிற்றி,
அழலை வெயிற்றி, அணங்கைத் துயிற்றி,
அழகைக் குயிற்றும் அமைப்பை வியற்றும்! 570

* அனை – அன்னை

அலரும் மலரார் அருமைப் பொழிலாம்
அன்னைத் தமிழின் அழகார் முகமே,
மலரும் வேனிற் கானல் வரியால்
மகிழ்ந்து மலர்ந்து நெகிழ்ந்தே அருளும். 571

தமிழ்ப்பண் பதனைத் தமிழ்ச்சீ ரதனைத்
தகுதிக் குரிய தளங்கள் தெரிந்தே
கமழப் புரிந்த கவினைப் *"பீடன்"[79]
றெனுஞ்சொல் லீன்றே, வனைந்தான் சான்றே. 572

நிமித்திகக் கயவர் நிகழ்த்திடு மயல்கள்
நிலைகுலைந் தழுங்கக் குலைநடுக் குலுங்கத்
துமித்தெறி மறவன்; துறவுகொள் அறவன்;
துகளறு புலவன்; திகழ்தமிழ் வலவன். 573

இல்லறச் செல்விக் கொல்காக் காப்பியம்
இயற்றிய துறவோ டிசைத்தநற் றிறவன்;
பல்லிசைக் கலையும், பல்லியக் கூத்தும்
பகுத்துத் தொகுத்து முகிழ்த்த அகத்தன். 574

* பீடு அன்று - பெருமைக்கு உரியது அன்று.

பொருளார் கவிஞன்; பொற்பார் பண்பன்;
புகழார் துறவன்; பொன்னார் அறிவன்;
திருவார் உருவன்; அருளார் அன்பின்
திகழ்தரும் ஈரன், தமிழார் சேரன். 575

[வண்ணத்திசைந்த
ஈரடிக் கலித்தாழிசைகள்]



# 69. பொன்றாப் புகழில் புதுக்கிய கொற்றன்.

தஞ்சைப் பெண்ணே! தஞ்சைப் பெண்ணே!
நன்செய் அணிகொள் தஞ்சைப் பெண்ணே!
நின்தாய்ச் சோழ நீள்நா டதனைப்
பொன்றாப் புகழில் புதுக்கிய கொற்றன்
ஒருவனோ? அல்லன்! பல்லுருத் திறலினன்:
அருஞ்சோழ நாடதைப் பெருஞ்சோழ நாடென
அடற்போர் வலியால் ஆக்கியும் ஊக்கியும்,
கடற்படை கண்டு கடாரம் கொண்டும்,
சிங்களப் பிடரியைச் சிதைத்த சிறுத்தைத்
தன்கொடி உயர்த்திய தறுகண் மறவன்;
பெருநிலம் அளந்தகோல் பிடித்த கோலன்;
நாடு பகுத்து வகுத்த கணக்கன்;
குடத்தின் ஓலைதேர் குடிமக்க ளாட்சி
நடத்தி நிறுத்திய மக்கள் தலைவன்;

உலகம் வியக்க ஒருபெருங் கோயில்
பலகலைப் பேழையாய்ப் படைத்த கலைஞன்;
கோயில் குமுகாயக் கூடம்செய் புரட்சியன்;
சைவன்; வைணவ, பௌத்தப் புரவலன்;
சிற்றம் பலத்துச் சிற்றுளப் பூசையர்
மூடி முடக்கிய மூவர்தே வாரம்
நாடிக் கொணர்ந்து பாடிய பாடலன்;

எவன்அக் கொற்றன்? எப்பெய ரத்தன்?
அவன்செயற் கெல்லாம் அளிக்கும் நன்றியாய்
அவனாட்சி யாண்டோர் ஆயிரம் நிறைவில்
நூறா யிரத்தொரு வெண்பொற் பரிசைச்
சீராய்த் தமிழ்ப்பல் கலைக்கழ கம்அவன்
பெயரால் இராச ராசப் படைப்பிலக்
கியப்பரி சமைத்துப் போற்றிய தவன்றன்
இயற்பெயர் அருண்மொழித் தேவன்; அவன்புகழ்
செஞ்ஞாயிற் றொளியாய்ச் செழித்து வளர்க,
தஞ்சைப் பெண்ணே, நன்செய்க் கண்ணே!

576

[நிலைமண்டில ஆசிரியப்பா]



# 70. புதுமை தந்த குணக்குன்று

*இறைதன்னைக் கல்லாக்கிச் செம்பா யாக்கி,*
*இருட்டறையில் பூட்டிவைத்த இழிவைப் போக்கி,*
*'நிறையருளாம் பேரொளியே இறையாம்: அஃதின்*
*நிலைத்தனிப் பேரருளே பண்பாம்' என்றே*
*குறையுலகில் பறைசாற்றிப் புதுமை தந்த*
*குணக்குன்றாம் இராமலிங்க வள்ளல் கொள்கை*
*மறைவின்றி எங்கெங்கும் பரவிச் சென்று*
*மணக்கின்ற மல்லிகையாய்ப் பெருக வேண்டும்.* 577

*துலங்குபுகழ் இராமலிங்கக் கொண்டல் பெய்த*
*தூய்மறையில் 'ஒளிர்பிள்ளைச் சிறுவிண் ணப்பம்'*
*நிலங்குளிர்ப் பாய்கின்ற பண்பா றாகும்;*
*நெடுங்கல்வித் தமிழ்நல்லோர் ஓடிச் சென்று*

பலதிக்கும் அவ்வுணர்வைப் பரப்பல் வேண்டும்;
பல்லுலக மக்கள்பறந் தோடி வந்து
கலங்கலமாய் அதையள்ளிப் பருக வேண்டும்;
கவின்மாந்தத் தன்மைஅதால் நிலைக்க வேண்டும். 578

தனிமாந்தன் முதன்முதலாய்த் திருந்த வேண்டும்:
தான்தாயாய் ஒக்கல்சேர்த் தணைக்க வேண்டும்;
கனிவன்பால் ஊரவரைத் திருத்த வேண்டும்;
கடவுளதைப் பேரொளியாய்க் காட்ட வேண்டும்;
இனியதமிழ்ப் பெம்மான்எம் இராம லிங்கர்
இயம்பியநல் வழிச்சங்கம் இஃதே அன்றோ?
நனிஉவப்பால் இதற்குழைத்து நல்லோர் வாழ்க!
நலமெல்லாம் மிகப்பரப்பி நீடு வாழ்க! 579



# 71. உணர்ச்சியின் ஊற்றுக்கண்

நெஞ்சக் கூட்டை நெகிழ்த்து நிறைந்த
செஞ்சொற் கவியின் செங்கோல் வேந்தே!
பாரதிற் சிறந்த பாரதிப் பெயரோய்!
சீரதி கம்பெறும் சிறந்தஉன் எழுதுகோல்
மோந்து மகிழ்ந்து முத்தமிட் டுவப்பேன்.

"தமிழ்மொழி, தமிழன், தமிழச்சி இவரினும்
கமழ்மற் றவர்எனில் கவல்வேன், ஓப்பேன்
புண்படு வேன்"[80] எனப் புகன்றாய்; இதுபோல்
பண்டை நாள்முதல் பாய்ச்சியோர் காண்கிலேன்.
முனைகொள் உணர்வில் முகிழ்த்த இவ்வுரை
சுளையின் சாறு; சுடர்ப்பொன் வீறு.
இதனை,
வெறுப்புணர் வதனின் வெளிப்பா டென்பார்

இருப்பினும் உயிராய் இழையும் உணர்வை
உணர்வார், காண்பார் உணர்வின் ஊற்றை.
ஊற்றுக் கண்கள் ஒன்றா, நூறா?
மாற்றறி யாத மதர்ப்பூற் றாயிரம்.
"விரைவில் தமிழ்ஒளி உலகம் முழுதிலும்
பரவா விடில்என் பெயரை மாற்றி
அழை"[81]என எழுதினாய்; அடடா! இவ்வுரை
ஆர்வத் துடிப்பின் ஆணிவேர்; உண்மைப்
பார்வை; எதிர்வரும் படிப்பிடிப் பன்றோ?
உரைத்தநீ குறட்டை உறக்கமோ கொண்டாய்?
வரைத்தாழ் அருவியாய், வற்றா ஊற்றாய்
எழுதிப் பாடி, எழுச்சியின் ஏறாய்ப்
பழுதிலாப் படைப்பால் பைந்தமிழ் வளர்த்தாய்.
'எதிலும் தமிழ்'என ஏற்றங் காட்டினாய்;
'கலப்பிலாத் தமிழில் கல்விவேண் டும்'எனப்
'பலகை, குச்சிஎனப் பகரல் வேண்டும்;
சிலேட்டு, பென்சில் சொல்லக் கூடாது;
பேசும் போது தமிழே பேசுக!
வீசும் வழக்குரை, வேண்டும் எழுத்திலும்

தமிழே; தமிழே; தமிழே''[82] என்றுநீ
'அமிழ்தத் தமிழை அருந்துவீர்' என்றாய்.
இன்றுயான் காணும் இன்றமிழ் உணர்வை
அன்றே காட்டிய அரும்விடி வெள்ளிநீ;
உன்னரும் எழுத்து பொன்னெழுத் தாகப்
புதிய சுவைகள் புதுக்கிக் காட்டினாய்.
குவிந்த தமிழைக் 'குப்'பென மலர்த்தினாய்.
'பாட்டுத் திறத்தால் பார்ஆள் வேன்'[83]எனத்
தீட்டிய பாக்கள் தினவுத் தென்றல்.
கவிதைத் தொழிலில் கடைந்த சிலைநீ.
செவிக்குச் செந்தமிழ்ச் செந்தேன் ஓடை;
சொல்லாற் றற்குச் சுனையின் ஊற்று;
பொல்லாங் கர்க்குப் போர்ப்புயற் காற்று.
இவைகண் டன்றோ இனியஉன் தாசன்
''தமிழகம் தமிழுக்குத் தகும்உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கி டக்கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்''[84]
என்றே பதித்தார் எழிற்கல் வெட்டே;
நின்ற சொற்கள்: நூற்றள வுண்மை;நீ

தாய்த்தமிழ் உணர்ச்சியில் பூத்த புதுமலர்;
பாட்டுணர்ச் சியிலே பதித்தாய் உயிரை;
நாட்டுணர்ச் சிக்கோர் நாளத் தண்டு;
"பாரத நாடு பழம்பெரும் நா"[85]டெனத்
"தமிழ்த்திரு நாடு தாய்"என, அஃதோ
"அமிழ்தின் இனியது, ஆன்றோர் நா"[86]டென
நாட்டினாய் நாட்டுப் பற்றில் தனிக்கொடி.

வேடிக்கை மாந்தரை வெருட்டினாய்; பெண்மை
வாடிக்கை மாடெனக் வாட்டிய ஆண்திமிர்
"வெட்டிவிட் டோம்"[87]என வெடித்தொரு கும்மி
கொட்டிடத் தாய்உல குயர்த்திய சேய்,நீ.

கடவுள் உணர்ச்சியில் கலங்காக் கனிநீ.
உனைப்பா டும்யான் உணர்வோ கருத்தோ
கடவுள் என்பதில் காண்கிலேன் எனினும்
விடேன்உன் கவிதையில் வெடிக்கும் சுவையினை.

"மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலி கள்"[88]என "அறிவே
தெய்வம்"[89]என் றுரைத்த தினவுக் கவிஞ!

நினைவு நாள்முதல் நிறைவு நாள்வரை
வணைந்த காளியாம் வழிபடு கடவுளைச்
"சொல்லடி சிவசக்தி; வல்லமைதா ராய்"[90]என்
றதட்டிய அன்போர் அருமை உணர்ச்சி;

பட்டறி வதனால் பகுத்தறி வாளனாய்க்
கெட்ட மன்பதைக் கேடெலாம் சாடினாய்.

'பார்ப்பான்' என்றே பைந்தமிழ் சொன்னால்
வேர்ப்பார் பலராய் வெடிப்பார் இடையே
'பார்ப்பான்' என்றவர் படிறெலாம் பாடினாய்.

சாதித் திமிர்க்குச் சாட்டைச் சவுக்குநீ;
பொய்மைச் சாத்திரம் புகுந்திடில் மக்கள்
பொய்யே யாகிப் புழுஎன மடிவர்"[91]
"கோத்திரம் பொய்மைக் கூடை"[92] என்றே
சாத்திரப் பொய்மை சாய்த்தசம் மட்டிநீ;
'சந்தித் தெருப்பெருக்கல் சாத்திரம்' என்றவன்;
சாத்திரம், அதன்பொருள் கலையாய்க் கண்டவன்.
புராணம் படித்தாய்; விராவிய கதைகளில்
புதைகவி தைச்சுவை புசித்தாய்; எனினும்
"கவிதை மிகநல்ல வேனும் அக்

கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டேன்;
நன்மை போதிக்கும்''[93] எனநீ நம்பினும்
புராணம் பொய்யெனப் பொரிந்து தள்ளினாய்.

பாடல்ஒவ் வொன்றும் ஆடகப் பைம்பொன்;
நூல்ஒவ் வொன்றும் நூறுவை ரக்கல்;

'தேசியப் பாடல்' வீசிய புயலே;
'தெய்வப் பாடல்' பெய்தஆன் மிகமழை;
ஆன்மிகப் பாடல் வான்வெளித் தூது;
தாய்மொழிப் பாடல் வாய்மொழி வைரம்
குமுகாயப் பாடல் குமுறிய குரலாம்;
இயற்கை வண்ணனை மயக்கும் கன்னி;
'குயில்பாட்' டால்நீ கவிதைக் குயிலே;
'பாஞ்சாலி சபதம்' நீஞ்சுவைச் சூடு;
'ஆத்தி சூடி' பூத்த புதுமை;
'சான்றோர் புகழ்ச்சி' ஈன்றாள் உணர்வாம்;
அறுபத் தாறும்' நிறுவுநெட் டுயிர்ப்பு;
உரைப்பாட்டு மடைகள் விரைமலர்க் கொத்தாம்;
கட்டுரைப் பாங்கெலாம் கதிர்நெற் குவியல்;

'ஞான ரதம்'ஒரு வானம் பாடி;
'தராசு' நேர்மை பராவும் பதாகை;
'சந்திரி கா'ஒரு இந்திரத் திருவில்
கதைகள் எல்லாம் புதையல் குழிகள்;
எழுதுகோல் என்ன மின்னேற்று நாளமோ?
எழுத்தெலாம் மின்னலால் சுழித்த சுழிகளோ?

முண்டாசுக் கவிஞ,உன் முழுத்திரு உருவம்
கொண்டேன் என்மனத் திரைஓ வியமாய்.
முண்டா சாஅது? மூளையாம் குமரற்கு
வெளுத்துக் கட்டிய வேட்டிக் கட்டு;
விந்தை அறிவால் விரிந்த நெற்றியோ
நந்தமிழ் உலவ நடைபா வாடை;
கண்ணேறு கழிக்க கருதிய எவனோ
கன்னங் கரிதாய்க் காட்டினன் பொட்டே.
மொத்தமாய் வளர்ந்த மூரிப் புருவங்கள்
வித்தக விழிகட்கு விரித்த குடைகள்
மூக்குதான் தமிழின் போக்கு வரத்து;
நாக்கோ கவிதைக்கு நாட்டியம் பயிற்றும்;

பல்லும் கொல்லும் பரங்கியர் தொல்லை;
வாயிதழ் தமிழ்க்குத் தாய்மடி மெத்தை;
ஒருகா லத்தில் ஒட்டிய கன்னம்
மறுகா லத்தில் மறைத்த தாடியோ
தமிழ்உமிழ் நீரால் தழைத்த கரும்பயிர்;
கழுத்தோ கவிதையைக் காக்கும் புகழ்த்தூண்;
நெஞ்சுரம் பாய்ந்து நிமிர்ந்தன தோள்கள்;
கையும் விரலும் வையம் நிமிர்த்தக்
கனலும் தென்றலும் கலந்த நெடுவேல்;
வயிறோ பசிக்கு வணங்கா வீரம்;
தொடையும் காலும் நடையும் படையாம்;
அரைதான் உணர்வின், அறிவின் வரையறை;
பாதம் படுமிடம் பாக்களின் பதிவம்:
ஏதம் எழுதா எழிற்கவி வேந்தே!
என்றும்உன் புகழே ஏற்றுவன் கொடியாய்:
பொன்றாப் புகழில் வாழ்க;
உணர்ச்சிப் பெருக்கின் ஊற்றுக் கண்ணே!

580

[நேரிசை ஆசிரியப்பா]



# 72. ஆன்மிக ஊற்று.

வங்கத் தெழுந்ததோர் காற்று,
வார்த்தது கவிதை ஊற்று;
பொங்கிய இசைகொள் பாட்டுப்(கீதம்)
போற்றி(அஞ்சலி) பிறந்தது கேட்டுந்
துங்கத்து நோபல் பரிசு
துலங்கிற் றிவரைப் பரசி;
எங்கும் புகழ்பெற்ற தாகூர்
ஏற்றனர்; அவர்தம் பா கூர்.
581

கங்கை அலைகளின் காட்சி,
கவிதை செய்தது ஆட்சி;
மங்கை மனநிலை எல்லாம்,
மணந்த தவர்தந்த சொல்லால்;
'கங்கு கரையிலா அன்பே,
கடவுட் பேருல' கென்பார்:
எங்கும் எதிலும் அமைதி;
எழுத்தில் பழுத்ததும் அமைதி.
582

ஏழாம் அகவையில் கவிஞர்;
　　எழுபதில் ஓவியக் கலைஞர்;
தாழாக் கருத்துக் கதையர்;
　　தகுதிக் கட்டுரைப் புதையர்;
வீழா நாடகப் படைப்பர்;
　　வீழ்ந்தோர் தம்துயர் துடைப்பர்;
கூழாய்ப் போனவர் வாழ்வைக்
　　கொழிக்கப் போக்கினார் தாழ்வே. 583

மாந்தர் கொள்கின்ற உணர்ச்சி,
　　மாற்றா தவர்கவிப் புணர்ச்சி;
ஏந்தல் காந்தியை 'மகாத்மா'
　　என்றுபு கழ்ந்ததிவ் வரிமா;
ஈந்த நன்'மாலைப் பாடல்'
　　ஈர்த்த தமெரிக்கர் நாடல்;
மாந்திய மேற்றிசை நாட்டார்,
　　மாறாப் புகழ்மாலை போட்டார். 584

மனஉணர் வையவர் பாடல்,
　　மலர்த்தும் அறிவுக் தேடர்;
குணநலத் திற்கவர் பாடல்,
　　குனித்துக் கூத்திடும் ஆடல்;
பணநலம் வேண்டாத பாடல்,
　　பணமும் பெற்றதோர் கூடல்;
'சனகண மன' எனும் பாடல்,
　　சார்ந்தது நாட்டுப்பண் பாடல். 585

ஆன்மிகம் தோய்ந்தவர் பாடல்,
　　ஆயிரம் எண்ணத்தின் கூடல்;
வீண்மொழி வெற்றார வாரம்,
　　விட்டபா டல்நெஞ்சத் தீரம்;
தேன்மொழிச் சொற்களாம் பாடல்,
　　தேக்கியே ஆன்மத்தின் தேடல்
தான்வழிக் கொண்டசீர்ப் பாடல்;
　　தாகூர்ஓர் ஆன்மிக ஓடை. 586

[அடி இயைபு எதுகை அமைந்த
அறுசீர் ஆசிரிய விருத்தங்கள்]



# 73. ஏழைக்கு இலக்கியம் சோறு.

அடிகாள் என்றனை வோரும் - உம்மை
அணுகிப் போற்றினார் சீரும்;
அடிகாள் காந்திஉம் எளிமை - உலகில்
அணுவும் குலையாத தலைமை 587

தோழா என்றுனை உழைப்போர் - என்றும்
தோள்தொட்டுக் கூப்பிட் டழைப்பார்;
தோழா, இலெனின்உம் தலைமை - உலகில்
தோன்றிக் கலையாத எளிமை. 588

ஏழைக் கிலக்கியம் யாது? - காந்தி
ஏந்தலைக் கேட்ட போது,
'ஏழைக் கிலக்கியம் சோறு'[94] காந்தி
என்றனர் உண்மையின் கூறு. 589

சோறாம் இலக்கியம் படிக்க - இலெனின்
சொல்லிக் கொடுத்தவர் முடிக்க;
வீறாம் இலக்கியம் படைத்தார் - இலெனின்
வீழ்ந்தவர் தந்துயர் துடைத்தார். 590

நாற்பத் தேழினில் இந்தியா – விடுதலை
நாட்டிடத் தந்தவர் காந்தியார்;
நாற்பத் தெட்டினில் சுட்டனன் - கோட்சே;
நடுங்கவில் லைபுகழ் நட்டனர். 591

பதினேழில் சோவியத் புரட்சி - வென்று
பறந்தது செங்கொடித் திரட்சி;
பதினெட்டில் கம்பளான்[35] சுட்டனள் - இலெனின்
பதறாமல் தம்பணி நட்டனர். 592

எலியை ஏறெனக் கூட்டினார்; - காந்தி
ஏந்தல் விடுதலை காட்டினார்;
புலியாய்ப் புழுவை மாற்றினார் - இலெனின்
புரட்சி உலகில் ஏற்றினார். 593

உயிரைக் கொடுத்தவர் காந்தியார் - அன்னார்
உடலை எரித்தனர் இந்தியார்.
உயிராய் வளர்த்த கொள்கையை - இன்னார்
உடலோ டெரித்த செய்கையர்.

594

உயிரே போயினும் இலெனினின் ஓய்ந்த
உடலும் போற்றினர் பொலிவாய்
உயிராய் வளர்த்த கொள்கையும் - இன்றும்
உயிராய்க் கொண்டனர் செய்கையில்.

595

எளியோர்க் கிருவரே துணைவராம் - உலகில்
ஏழையர் இருவரை அணைவராம்;
தெளிவாய் இருவரே திகழ்வராம் - உலகோர்
காந்தியை இலெனினைப் புகழ்வராம்.

596

[இடையில் தனிச்சீர்பெற்ற
ஈரடித் தாழிசைகள்]



# 74. சிலையில் ஓர் ஆண்மை மலை.

நாகையில் பிறப்பை வைத்தார்;
நா,கையில் தமிழை வைத்தார்;
ஓகையில் துறவை வைத்தார்;
ஒளியினில் இறைமை வைத்தார்;
வாகையில் வாழ்வை வைத்தார்;
வகைவகை நூல்கள் வைத்தார்;
ஆகையால் சிலையை வைத்தோம்;
அவர்நெறி செயலில் வைப்பீர்

597

[அறுசீர் ஆசிரிய விருத்தம்]

* நாகப்பட்டினத்தில் நிறுவப்பட்டுள்ள நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார் முழுஉருவ வெண்கலச் சிலைப் பீடத்தில் கல்வெட்டாகப் பொறிக்கப் பெற்றுள்ள பாடல்

தனித்தமிழின் நறுஞ்சுனையே!
　　தமிழ்ப்பொருளின் கனிச்சுளையே; தமிழ்நூல் வெள்ள
இனித்தமழைக் கருமுகிலே!
　　பிறமொழிச்சொற் கலப்பதனை இடித்துக் கேட்க
இனித்தமிழில் ஆளில்லை
　　என நினைந்தே இறுமாந்தோர் இரும்புள் ளத்தைத்
துணித்தெழுந்த மறைமலையே!
　　துகளற்ற நும்ஆண்மைத் துணிவென் என்பேன். 598

மலருக்கு மலர்ச்சியதன்
　　மதர்ப்பாண்மை; மண்ணுக்கு விளைவே ஆண்மை;
வலருக்குத் தாளாண்மை!
　　வனப்பினர்க்கு நாணமதே வயங்கும் ஆண்மை;
சிலருக்குச் சினந்திடுதல்
　　சிற்றாண்மை; சீரியர்க்கோ பணிவே ஆண்மை;
பலருக்கு நடிப்பாண்மை;
　　பயனார்ந்த மலையுமக்கோ படிப்பே ஆண்மை. 599

பாரிதனில் பைந்தமிழ்ச்சீர்
பறிக்கவந்த இந்தியெனும் பகையைத் தள்ளி
மூரிநிமிர்ந் தரிமாவாய்
முழங்கிஅதன் முதுகெலும்பை முறிக்கும் பாங்கில்
வாரிவிட்ட "இந்திபொது
மொழியா"என் றோர்உரையால் வதைத்த செம்மை
வீரியத்தால் மறைமலையே,
'ஆண்மையதன் மறையாத மலைநீர்' என்பேன். 600

சைவத்தில் உளந்தோய்ந்தீர்;
'சைவமொடு புராணஞ்சேர் கதைகள் தம்மில்
பொய்வைத்தார்' எனக்கழறிப்
பொசுக்கியநும் பேராண்மைப் பொலிவென் என்பேன்,
'தெய்வத்தார் நாங்கள்'எனத்
தீந்தமிழர் மரபெல்லாம் திரித்தார் தீமை
கைவைத்தே களைந்தெறிந்த
கவின்மலையே, நும்ஆண்மைக் கருத்தென் என்பேன். 601

[அறுசீர்
ஆசிரிய விருத்தங்கள் - வேறு]



# 75. பண்பாட்டின் விரிவுரை.

தமிழ்ப்புலமை, சிவப்பற்று, தக்கசம யப்பொதுமை,
இமிழ்தென்றற் சொற்பொழிவு, எழுத்தாற்றல், தொழில் தலைமை
கமழ்பழக்கப் பண்பாடு, கவின்அமைதி. உலகியற்சீர்
அமிழ்தமெனும் இவையொட்டு மொத்தவுரு திரு. வி. க. 602

நாட்டுநலம் தமிழ்நலத்தால்; வீட்டுநலம் தமிழ்மரபால்
ஏட்டுநலம் தமிழ்எழுத்தால்; கூட்டுநலம் தமிழ்இனத்தால்;
பாட்டுநலம் தமிழிசையால்; ஆட்சிநலம் தமிழினுக்கே
மீட்டு,நலம் காணுவதே ஊட்டமென்றார் திரு. வி. க. 603

பெரியார்க்கு நல்லன்பர்; பெரியபுரா ணப்புலவர்;
உரியார்தே சியத்திற்கே; உடன்இந்தி எதிர்ப்பாளர்;

புரியாத புதிரல்லர்; புகழ்கட்சிக் கொள்கைகளில்
உரியவற்றில் ஒத்ததுகொண் டுயிர்வாழ்ந்தார் திரு. வி. க.
604

'தேர்தலிலே பொதுவுடைமைத் தோழரொடு சிவமதத்தார்
நேர்நின்றால் தங்கள்துணை யார்பெறுவார்' எனக்கேட்கத்
தேர்தலிலே சிவமதத்தார்க் கேதுசெயல்? பொதுவுடைமை
யார்வெற்றி எம்வெற்றி எனுஞ்சைவர் திரு. வி. க.
605

எவருக்கும் உதவிடுவார்; எவரிடமும் உதவிபெறார்;
'இவர்காணப் பெற்றேன்?என் றெவரும்மகிழ் தன்மை யொடு
தவறுதமை அணுகாமல், தவறுடையார் தமைப்பொறுக்கும்
விவரமுடைப் பண்பதனின் விரிவுரைதான் திரு. வி. க.
606

உறைதமிழப் பாட்டெழுதி, உரையெழுதித் தொழிலாளர்
குறையெழுதிக் குமுகாய முறையெழுதி, ஆன்மீகத்
துறையெழுதி, வாழ்வியலின் பொறையெழுதி, எவ்வழியும்
கறையெழுதாத் திருக்கையால் நிறையெழுதும் திரு. வி. க.
607

இல்லத்து விழவெல்லாம் இனத்தமிழர் தமைக்கொண்டே
வெல்லத்துத் தமிழ்சொல்லிச் செய்வித்தல் தமிழர்கடன்;
கள்ளத்தைக் கடுஞ்சொல்லைக் கனவினிலும் கருதாது
சொல்லொத்துச் செயல்புரிந்த செல்வத்தார் திரு. வி. க.
608

பெண்ணுலகைப் போற்றுவதும், ஆணுலகால்
வளர்பகையாம்
புண்ணுலகில் பரவாமல் புத்துலகாய் மாற்றுவதும்,
கண்ணொளிமங் கியபோதும் கண்ணியம்மங் காதபெரும்
தண்ணொளியார் திரு. வி. க; தமிழ்ஒளியார் திரு. வி. க.
609



# 76. அறிவுப் புதிர்

படித்துத் திருந்தும்,
        பழகித் திருந்தும் பயனறியான்;
அடித்துத் திருத்தின்
        அடுத்துப் பழைய அறிவிலியே
எடுத்து மொழிந்து
        திருத்தும் பயனும் சிறிதளவே;
இடித்து மொழிந்து
        திருத்த முனைந்தவர் பெர்னார்டுசா.

குடித்துக் களித்தும்
        குலவிக் குதித்தும், கொடும் இறைச்சி
மடுத்துச் சுவைத்தும்
        மரத்துத் திரிஆங்கிலர் பழக்கம்

விடுத்துத் தெளிந்தும்,
        தொடுத்துக் கிளர்ந்த நடைமுறையே
எடுத்துக் குவித்த
        எழுத்துத் திறலினர் பெர்னார்ட்சா.

611

நகைச்சுவை பெய்து
        நடத்திய நாடகம், கட்டுரையால்
பகைச்சுவை கண்டவர்;
        பார்த்தவர் மூட்டும் தடைகளெனும்
புகைச்சலை வென்று
        புதுமை புரிந்தே பொதிகருத்து
வகைச்சுவை தந்த
        அறிவுப் புதிரெனும் பெர்னார்ட்சா.

612

திறனாய் வதனால்
        இசை,நா டகங்கள் திருத்தமுற,
முரணார் குமுகம்
        முதிர்ந்த மடைமை முதுகொடிய,

மறனார் திமிரர்
　　மடிய எழுதி இலக்கியந்தின்
அறணாய் விளங்கி
　　அறமே புரிந்தவர் பெர்னார்டுசா.

613

பூடகம் அற்றவர்;
　　பூடகக் காரர்தம் பொய்மையெலாம்
சாடிடக் கிண்டலைச்
　　சாட்டை அடியெனச் சாற்றுதற்கே
நாடகப் பாங்கினில்
　　நல்லுரை யாடல்கள் தாம்வழங்கிப்
பீடுடை நோபல்
　　பெரும்பரி சுற்றவர் பெர்னார்டுசா.

614

[கட்டளைக்
கலித்துறைகள்]



# 77. ஓர் இலக்கியப் படிவம்.

'அண்ணா' என்பதோர் அருஞ்சுவைச் சொல்லாம்;
'அண்ணம்' என்பது 'மேல்வாய்' ஆகும்;
அருஞ்சுவை என்பதோ அதற்கொரு பொருளாம்;
அண்ணத் துடனே நாவது பொருந்தினால்
'அண்ணா' பிறப்பார், அஃதொரு சுவைச்சொல்!

'அண்ணா' என்றே எந்நாச் சொலினும்
அந்நா அமுதச் செந்நா ஆகும்.
சுவைச்சொல் ஒன்றோ? சுரக்கும் ஒளியால்
அவர்தம் தோற்றம் அண்டினோர்ப் பிணிக்கும்
கவர்ச்சி இலக்கியம்; காண்பாம் அதனை:

நெற்றியோ அறிவு நடம்பயில் தெற்றி;
ஒற்றிய புருவம் ஒருபொருள் கருவாம்;
கண்ணொரு கலித்தொகை; கானல் வரிஇமை;

பார்வையே ஆயிரம் பருப்பொருள் பேசும்;
ஆர்வப் பார்வை 'அருந்தம்பீ' என்னும்;
அரும்புப் பார்வை அரசியல் முத்திரை;
குறும்புப் பார்வையில் குற்றாலம் புரியும்;
அகலப் பார்வையில் பகையும் நகையாம்;
பகுத்தறி வொளியாம் பரவிடும் பார்வை;
ஓரப் பார்வை ஒருகோடி பொன்பெறும்;
ஈரப் பார்வைக் கில்லை உவமை;
கண்ணில் கவர்ச்சிக் கல்லை வைத்து
மண்ணில் ஈன்றனர், மதிப்புடை அன்னையார்,
பார்வையைத் திருப்பிப் பக்கம் பார்ப்பம்:
கன்னமோர் அகப்பொருள்; கனைப்பொரு புறப்பொருள்;
மூக்கொரு முல்லைப் பாட்டாம்; அதனில்
தேக்கிய பொடியோ மகரந் தத்தூள்;
தேனும் உண்டாம், யாமது கண்டிலம்;
வாயோர் பாயிரம்; இதழ்நூல் ஆயிரம்;
புகையிலை உண்டாம்; புகவிலை புன்சொல்;
பகையிலை நாவில்; *பாகிலை உண்டாம்.

* பாகு இலை - பாக்கு, வெற்றிலை

நாவொரு நிகண்டு; நாடியோ தமிழாம்;
ஊறும் எச்சிலே உணர்தமிழ் அமுதம்;
ஊறிடும் சுவைக்கோ உலகமே உவமை!

கருத்தோ குறுந்தொகை; கனிக்குலை தொண்டை;
எழுத்தோ வயிரம்; எழுங்குரல் வெண்கலம்;
சொல்லோ சுளையாம், வெல்வதே தொழிலாம்.

தோளிரு கோடியும் தோழர்பல் கோடி
வாளுடை மறவர் வாழ்விடம்; மார்போ
'எதையும் தாங்கும் இதய' அரங்கம்;
நெஞ்சம் தமிழ்க்குப் பஞ்சணை ஆகும்.

கையோ காப்பியக் காவிரி; சட்டைப்
பையோ காசிலாப் பஞ்சறை; சட்டையில்
பொத்தான் இல்லை; பேசிடில் வாயைப்
பொத்தான் இலனே, பொருந்தான் இலனே!

தொந்தியோ சிறிது; தொந்தமோ பெரிது.
கால்கள் தன்மானக் கால்கோள் ஆகும்.

உருவம் குறளாம்; உரயம் நாலடி;
பருவம் என்றும் எவர்க்கும் அண்ணன்;
கவரும் இவற்றால் கவர்ச்சி இலக்கியம்.
எவரும் விரும்பும் இயல்பில் நிறைந்த
அறிஞர் பெருந்தகை அண்ணா தம்மைப்
பரிவுடை இலக்கியப் படிவமாய்ப்
பதித்துப் படித்துப் பயன்கொள் வோமே.

615

[நேரிசை ஆசிரியப்பா]

## 78. முடியாத பாட்டு.

வள்ளுவர் ஈராயி ரந்தை இருபதில்
கள்ள முழுநிலா ஞாயிறு - நள்ளிரவில்
பேரறிஞர் அண்ணா புகழுடம்பில் ஒன்றினரே;
யாரறிவார் ஆற்றும் அடைவு!

616

[நேரிசை வெண்பா]

'அண்ணாவே! அண்ணாவே! அண்ணா!' என்ற
அருஞ்சொல்லை யாம்உரைத்த போதில் எல்லாம்
பண்ணாக இனித்திட்ட பரிவுச் சொல்லே
பதைப்பாகச் செய்தீரே அண்ணா; உள்ளம்
புண்ணாகப் பேசாத புகழ்ப்பண் பாளா!
புண்ணாக்கிப் புண்நாக்காய்ப் புரிய லாமோ?
அண்ணாவே! அண்ணா,எம் அன்பின் ஊற்றே!
ஆற்றேன்யான்; ஆற்றோம்யாம்; அழிந்தும் ஆற்றோம்.
617

நிலநடுக்கம் என்றாலும் நிற்போம் அண்ணா!
உளநடுக்கம் எம்மாலே தாங்கற் கில்லை.
புலன்அடக்கம் பெற்றோரும் புலம்பச் செய்தீர்
புலனெல்லாம் புகுந்தெம்மை ஆண்ட அண்ணா!
குலைநடுக்கம் தம்பியர்க்குக் கொடுக்க லாமோ?
கும்பியெலாம் கொப்பறையாய்க் கொதிக்கும் போது,
நிலன்ஒடுக்கிப் புலம்புதற்கும் சொற்கள் காணேம்;
நீர்வளர்த்த குளிர்தமிழும் கொதிக்கக் கண்டேம்.
618

நள்ளிரவில் நினைவிழந்த நேரம் பார்த்து
நமனே,நீ தாக்கினையோ? 'சிச்சீ' பேடி.
கொல்லவந்த முழுநிலவே, குளிர்வாய் உண்மை;
குளிரவைத்தே சென்றாயோ? குளிர்ந்தே போவாய்.
கொள்ளியெனத் திங்களன்று காலை வந்த
எழுங்கதிரே வென்றகுறிக் கிதுகைம் மாறோ?
தெள்ளுதமிழ் நாடென்று பெயர்தந் தாரே
தென்னிலமே, வயிற்றடக்கி நன்றி கொன்றாய. 619

மேடையிலே சிறந்திட்டார் அறிஞர் பல்லோர்;
மேடைதனைச் சிறக்கவைத்தார் அறிஞர் அண்ணா;
ஏடதிலே எழுதிஉயர் வுற்றார் பல்லோர்;
ஏடதற்கும் எழுச்சிதந்த எழுத்து மன்னர்;
நாடதனில் நாட்டமுற்றார் நல்லோர் பல்லேர்,
நாடியதில் நாட்டைவைத்த நல்லோர் கோவாம்;
கோடையிலே கொண்டலெனக் கொற்றங் கொண்டார்;
கொடுவாடை தனில்நிறுத்திப் போக லாமோ? 620

அன்புவைத்து அரசியலில் வென்றார் காணேம்;
அருவெறுப்பை நகைச்சுவையால் கொன்றார் காணேம்;
பண்புவைத்துப் பகைநட்பாக் கொண்டார் காணேம்
பணிவைவைத்துத் தலைமைகொண்டு பணித்தார் காணேம்
ஒண்புகழைப் பலர்க்குவைத்தே ஒளிர்ந்தார் காணேம்;
ஒக்கநின்றே எளியவர்க்கும் ஒளிய வர்க்கும்
துன்புவைத்து மூச்சுவிட்டுத் துறந்தார் காணேம்;
தொலைநாட்டும் 'அண்ணா'என் றொருவர் காணேம்.
621

தொட்டதெல்லாம் துலங்கவைத்த அண்ணா, உம்மைத்
தொட்டபுற்று நோய்துலங்கச் செய்தீ ரேயோ?
ஒட்டிநின்றார் ஒளிபெறவே செய்தீர்; உம்மை
ஒட்டு 'இருடி ய'த்திற்கும் ஒளிதந் தீரோ?
'முட்டுபகை நட்பாக்கொள் பண்பா ளன்கீழ்
முழுஉலகும் தங்கும்'[96] எனும் வள்ளு வர்சொற்
கட்டியிலா இலக்கியமே; அருமை அண்ணா!
அருந்தமிழின் அழுகுரலும் கேட்டி லீரோ?
622

உளம்நிறைந்த உமைநினைந்து வெதும்பும் நெஞ்சை
உம்புகழில் தோயவைத்து வணங்கி நின்றே,
நலம்நிறைந்த நும்பண்பில் நடந்து செல்வோம்;
நலிந்தவர்க்கும் நகைப்பவர்க்கும் நலங்கள் செய்வோம்
களம்எதிலும் வெறுப்பு,சினம், கடுமை கொள்ளோம்;
கனிதமிழ்க்கும் நாட்டிற்கும் கவின்கள் செய்வோம்;
உளமென்னும் மலர்கொண்டும் புகழாம் தாளில்
உயிப்படைப்பாய்ப் படைக்கின்றோம், உயிரே, அண்ணா!
623

படிப்பதற்கே பாட்டெழுதிப் படைத்த யானே,
பதைப்பதற்கும் பாட்டெழுதும் மனம்பெற் றேனே.
படிப்பதற்கே பிறப்பெடுத்த அண்ணா! அண்ணா!
பயனார்ந்த சுவையளித்த நீரே, என்னைத்
துடிப்பதற்கே ஆளாக்கும் உளம்ஏன் கொண்டீர்?
துகளில்லா உமையெண்ணிக் துடிக்கும் பாட்டை
முடிப்பதற்கே முடியாமல் துடிக்கின் றேன்யான்;
முடியாமல் முடிந்தஅண்ணா, முடிப்பேன் பின்னே.

624

[எண்சீர் ஆசிரிய
விருத்தங்கள்]

# 79. எதிர் முழக்கிட்ட எரிமலை.



காவிரி, சாக்கடைக் கலங்கலில் சுழன்றது;
பொதியில் வாடைக் குதியில் கிடந்தது!

ஒருநெடு மூச்சு, பெரும்புயற் காற்றாய்க்
கறுவி எழுந்தது; கனன்று நிமிர்ந்தது!
'பொன்னைக் கொழித்திடும் பொன்னி யாற்றில்
கொன்னைச் சாக்கடைக் கொடிபறந் திடுவதோ?
தென்றலை ஈன்ற தென்பொதி மலையில்
கொன்றிடும் வாடை கொலுவீற் றிருப்பதோ?
ஓ! ஓ!
பைந்தமிழ் பிறமொழிப் பதுக்கலில் அழுவதோ?
வந்தவர் நெருப்பில் வதைவரோ தமிழர்?'
என்றோர் எரிமலை எதிர்முழக் கிட்டது.
முழக்கலில் பகைவர் முடங்கினர்; ஆயினும்,

உழக்கில் உலகை ஒடுக்கப் பார்த்தனர்.
முழக்கில் மலையாய் முடுகிய அரிமா
குமுறி எழுந்தார்; திமிரி நிமிர்ந்தார்.
''பிறப்பொக்கும் எல்லா உயிர்''[97]க்கென் றியாவரும்
உரக்கப் பேசினர்; உள்ளே ஒதுக்கினர்;
தண்ணீர்ப் பானையும் தனித்தனி என்றனர்;
கண்ணீர்க் குள்ளும் கடைச்சாதி கண்டனர்;

உரைத்துப் பார்த்தார்; முறைத்துப் பார்த்தார்;
பழைய குருடிதான் கதவைத் திறந்தாள்.
இனிப்போர்; அறப்போர்! இனிப்போர் வருக!
தனிப்போர்; மடமை தணிப்போர் எழுக!
அறப்போர்; சாதி அற-போர் எழுக!
நெறிப்போர்; வாழ்வை நெரிப்போர் வருக!
மறப்போர்; வன்செயல் மறப்போர் எழுக!
நொடிப்போர்; அன்று; நொடித்தோர் உரிமை
அடிப் - போர் ஆயினும், அடிப்போர் அகல்க!
குடிப் - போர் ஆயினும், குடிப்போர் நகர்'கெனத்
தும்பை சூடித் தொடைதட்டி எழுந்தார்;

வம்பை ஏற்றுத் தும்பை சூடிய
ஏற்றின் அருமைத் தோற்றம் காண்பாம்: (32)

625

[நிலைமண்டில ஆசிரியப்பா]

தும்பை, தூய்மைக் கிண்ணம்; இலக்கணத்
தும்பை, போர்க்குறிச் சின்னம், அவர்தலை
தும்பைக் காட்டில் துடைத்து வைத்த
அம்பொன் கேடயம்; அவருளம் வெள்ளை;
முகப்பட் டயமாய்த் தகக்கும் நெற்றியோ,
பகுத்தறி வடுக்கிய படைக்கலக் கொட்டில்.

நெற்றியில் நீடிய கொற்றக் கோடுகள்
இனவுணர் வதனின் தினவைத் தீட்டிச்
சாணை பிடித்த ஆணைப் பட்டயம்.

நெறித்த புருவம் நிமிர்ந்த அரிமா
முறித்த சோம்பல் முதுகின் வளைவாம்.

விழிகள் உணர்வுச் சுழிகள்; விதித்த
பார்வை, சாதிப் பதர்க்குத் தீர்வை.
மூக்கு தன்மானத் தீக்குழம் பதனில்

குமிழியாய்த் தோன்றிய கொதிப்பின் பதிப்பு.
காது, புளுகுக் கதைகேட் காது;
உடைமை பொதுஎனின் உணர்பூக் காது;
மடைமை வண்டுக் கதுபூக் காது.
கன்னம் அதனின் வண்ணங் கண்டோம்;
வாகாம் கன்ன வனப்பின் இனிமை
நாகம்மை யார்க்கே நன்கு விளங்கும்.
வாய்சீர் திருத்த வருவாய்; செலவாய்
ஓய்விலா தொலித்த கடற்சீர் அலைவாய்;
சாதிக் கோட்டையை மோதித் தகர்க்கச்
சொற்குண்டு வீசும் சுடர்த்துப் பாக்கிவாய்;
தாயிலாப் பிள்ளையாய்த் தட்டிக் கேட்க
வாயிலா தார்க்கு வாய்த்த ஓரேவாய்.
பொன்முகத் தாழியில் பூத்த தாடி
பொன்னுருக் கெண்ணெயில் பொரித்த வெள்ளிவேர்;
பொய்ப்புரா ணத்தார் பொக்கை வாயதைத்
தைக்க முறுக்கித் தளர்த்திய எஃகுநூல்,
கைகள் பகுத்தறி வாளர்தம் நம்பிக்

கைகள்; விரலோ எழுத்துத் திறவுகோல்
நெஞ்சுரம் என்னும் வைரச் சுரங்கத்
தஞ்சாக் கோட்டையே அவர்மார் பகமாம்.
கால்கள் தன்மானக் கால்கோள் ஆகும்.

இவர்யார் என்றே அறியார்; குட்டிச்
சுவர்தான் என்பேன்; சுளுக்கிய மனத்தோர்
இவரோ பெரியார்? என்றனர்; இன்றோ
இவரே அன்றி எவரே என்பர்!

சாதி ஒழிப்பவர் மூச்சு; பொய்ம்மைக்
கோது தீர்ப்பதே பெச்சு. இவர்சொல்
புயலைப் புதுக்கிய புதுமைத் தென்றல்
வினாக்குறி அவரது வியத்தகு போர்ப்படை;
வஞ்சமில் பேச்சின் வெளிப்படை ஒருபடை;
அஞ்சாப் பகுத்தறி வடிப்படை மறுபடை.
தொடுக்கும் படையெடுப் பதனிலும் வெற்றி
முடிவைப் பற்றிய நெடிஅவர்க் கில்லை;
''மலையைத் தாடி முடியால் இழுப்பேன்;

மலைவரின் வரட்டும்; போனால் முடிதான்''
என்பார். அதனில் பொன்போல் மிளிரும்
அறப்போர் இலக்கணம் உறப்போர் புரிந்தார்
மிடுக்கில் எடுத்து முடுக்கிய போர்களில்
எதிர்த்தார், புதைத்தார். புகுந்தார், வெட்டினார்.
கிழித்தார், எரித்தார், அழித்தார், உடைத்தார்.
ஆம், ஆம்;
எதிர்த்தல், புதைத்தல், புகுதல், வெட்டுதல்,
கிழித்தல், எரித்தல், அழித்தல், உடைத்தல்
இவையெலாம் அறப்போர்ச் சுவைகளோ என்னில்
பெரியார் ஆற்றில் புரியும் புதுமை
நெறியாம் இவைகளை நிரலே காண்பாம்:

எதிர்த்தார், சாதி திமிரை; எதிர்த்தே
புதுர்த்தாக் குதலாய் புதைத்தார்; புகுந்தார்,
கொள்ளைக் கன்று, கோவிலில் 'கடவுட்
பிள்ளையில் தாழ்ந்தோர் இல்லை' என்றே
வைக்கம் வீரராய்ப் புகுந்தார்; வெட்டினார்,
உடல்களை அன்று, மடல்கொள் தென்னையைக்

கள்மறுப் பதனின் கொள்கைக் குறியாய்;
ஊரார் மரத்தை அன்று கிழித்தார்,
குடலையோ! தேயப் படமதைக் கிழித்தே
'தமிழ்நாடு தமிழருக்' கென்றார்; எரித்தார்,
ஆளையோ? சட்டத் தாளையே; உடைத்தார்,
மண்டையை அன்று, களிமண் உண்டையை.

பிறர்பொருள் அன்றித் தம்பொருள் அழித்தும்,
பிறர்க்கிடை யூறு தரக்கூடா தென்றும்
மூட்டிய அறப்போர் ஈட்டிய வெற்றிதான்:
படிப்போர், படித்து முடிப்போர், பதவிகள்
பிடிப்போர், வாட்டும் மிடிப்போர் குறைந்து
களிப்போர், சமமாய்க் குளிப்போர், வாழ்வில்
கொழிப்போர் பெருகி, விழிப்போர் அருகிப்
பழிப்போர் பதுங்கி, நெளிப்போர் ஒதுங்க
அறப்போர் விளைத்தார், திறப்போர்ப் பெரியார்;
அவர்போர்ப் பெருமை வைரச்
சுவர்போல் நம்மைச் சூழ்ந்து காப்பதே.

(நேரிசை ஆசிரியப்பா)

626

மூடத்தை முறியடிக்க மூரியெழுந் தார்த்திட்ட
முதல்அரிமா; மூத்த சாதி
வேடத்தைக் கிழித்தெறிய வேர்த்தெழுந்த வெறிவேங்கை;
வேண்டுபகுத் தறிவாம் மூல
பாடத்தைப் படிப்பித்த பகலவனாம் பரிவாசான்;
பைந்தமிழர் தன்மா னச்சீர்
மாடத்தில் குடியேற மணப்படியை எழுப்பிவைத்த
மறமன்னர்; அறப்போர் வீரர். 627

போராட்டம் அவர்வாழ்வின் தேரோட்டம்; புடம்போட்டுப்
பொருத்திவைத்த கொள்கை தன்னில்
மாறாட்டம் கொள்ளாது மார்தட்டி மடிகட்டும்
மறவேந்தன்; அறப்போர் என்றால்
நீரோட்டம் வழுவாத நிறையோட்டப் போராட்டம்
நிகழவைத்த பெரியார் வாழ்ந்த
ஈரோட்டில் நின்றிட்டால் எழுங்குருதி ஓட்டத்தில்
மின்னோட்டம் ஓடக் காண்போம். 628

சைவத்தார் வைணவத்தார் சமணத்தார் பலமதத்தார்
சாரமிலாக் கதைகள் கட்டிப்
பொய்வைத்தார் எனக்கண்டு பொறிவைத்தே குறிவைத்தார்
நெறிவைத்த அறப்போர் வீரர்.
தெய்வத்தார் நாங்களெனத் தீந்தமிழர் மரபெல்லாம்
திட்டமிட்டே திரித்தார் பொய்யில்
கைவைத்தே நம்பெரியார் களைந்தெறிந்து கைகொட்டி
மெய்வைத்த அறப்போர் வீரர்.
629

தமிழகத்துத் தலைமகனைத் தன்மானக் கதிரவனைத்
தமிழகத்தின் தந்தைப் பேற்றை,
உமிழகத்தில் வீழ்ந்திருந்த ஊமையரை உரும்ஏறாய்
ஊக்கிவிட்ட உணர்வின் ஏற்றைத்
தமிழகத்தில் சாதிப்பேய் தலைதெறிக்கத் தகர்த்திட்ட
தறுகணரைத் தமிழர் வாழ்வைக்
கமழகத்தில் கொண்டுவைத்த கனிவு ஐயா கவின்உடலம்
கட்டளைக்கல்; அறப்போர் எல்லை.
630

கண்மூடி னார்பெரியார்; கண்விழித்தே கண்மூடிப்
பழக்கங்கள் மூடக் காண்போம்.
பண்மூடித் தலைசாய்த்தார்; படிகவிழ்ந்த சாதிமுறை
பட்டதலை சாயக் காண்போம்.
விண்மூடும் உறக்கமிட்டார்; உறக்கமின்றித் தாழ்வுயர்வு
வீழும்நெட் டுறக்கம் காண்போம்.
வெண்தாடி வேந்தர்வாய் மூடினும்,நாம் வீணோர்வாய்
விரியாமல் மூடக் காண்போம்.

631

கதறவைத்துத் தமிழினத்தைக் கலங்கவைத்துக் கண்மூடிக்
கடுந்தூக்கத் தலையை வைத்துப்
பதறவைத்து நம்பெரியார் பரப்பிவைத்த பகுத்தறிவுக்
கருத்துவைத்தே, கையும் காலும்
உதறவைத்துத் தமிழ்ப்பகையை ஓடவைத்தே ஒடுங்கவைத்தே
ஓயவைத்துத் தலைதூக்காமல்
சிதறவைத்துத் தமிழர்க்குச் செழிப்புவைத்துப் பெரியார்க்குச்
சிறப்புவைத்து நன்றி வைப்போம்.

[எழுசீர் ஆசிரிய
விருத்தங்கள் ]



# 80. புரட்சித் தென்றல்

திறந்து கிடந்தது தமிழ்மனை; அங்கே
இறந்து கிடந்தன எழுச்சியும் உணர்ச்சியும்.

இனத்துச் சிறுத்தை இளித்ததுப் பல்லை;
குணத்துக் களிறு குறுகிற்று கூனி;
அரிமா சுருண்டு நரிமா ஆனது;
அயில்வேல் மத்தாய்த் தயிரில் கிடந்தது;
மரபும் பண்பும் மண்டியில் தூங்கின.

மடமை என்னும் தலைகீழ்ப் பாட
உடைமை வௌவால் உறங்கித் தொங்கியது.

சாதி அரக்கி சமயக் கிறுக்கனொடு
காதற் பானையில் கட்டிக் கிடந்தனள்.

பிறமொழிக் கறையான் பின்னிய கோயிலில்
நிறவெறிப் பாம்பு நிமிர்ந்து நின்றது.

வடமொழிக் கோட்டான் வண்டமிழ்த் தாயை
முடவழி யாக்க முக்கிக் குழறியது.

இந்திக் குரங்கு இன்றமிழ் மாலையைக்
கொந்திக் குதறக் குந்திப் பார்த்தது.

புலமைக் குண்டுச் சட்டியில் புலவர்
தலையிலாக் குதிரையைத் தட்டி ஓட்டினர்.

தமிழ்ப்பால் குடித்த தமிழ்ப்பகைக் கூலிகள்
உமிழ்நஞ் சதனால் உலைந்தது மரபே.

வீட்டின் ஒருமகன், பாட்டுத் தமிழ்மகன்
ஏறிட்டுப் பார்த்தனன்; சீறிற்று நெஞ்சம்.
நெறித்தன புருவம்; வெறித்தன கண்கள்;
துடித்தன மீசை; கடித்தன பற்கள்:
'கனக சுப்பு ரத்தினப் பெயரேன்;
பாரதி தாசனேன்; பார்இதோ எழுந்தேன்;

உருட்டும் புரட்டும் திருட்டும் சுருட்டும்
மருட்டும் குருட்டின் இருட்டு வாழ்வை

விரட்டக் கவிதைப் புரட்சி மூட்டுவேன்;
என்றன் தமிழ்க்குத் தென்றல் கூட்டுவேன்;

பாடுவேன் தமிழை; சாடுவேன் பகையை;
காளியைப் பாடினால், கோழிகூ வாது
மீளியாய்ப் பாடுவேன் வாழிய தமிழே!'

'ஏடா, தம்பி! எடடா எழுதுகோல்!
கூடா திந்தக் கூனலும் கோணலும்;
தமிழ்த்தாய் மகிழத் தமிழன் திகழ,
உமிழ்நீர் தேனின் ஊற்றாய்ச் சுரக்கப்
பாடுவேன்' என்றார்; பாடினார்; பாடினார்.

"தனிமைச் சுவையுள்ள சொல்லை-எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம்கண்ட தில்லை"[98]
"தமிழுக்கும் அமுதென்று பேர் - எங்கள்
தமிழ்இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்"[99]
"மங்கை ஒருத்தி தரும்சுகமும் - எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை[100]"
எனத்தமிழ் உயர்வை மனத்தில் ஊன்றினார்.

"தமிழரின் மேன்மையை இகழ்ந்தவ னைஎன்
தாய்தடுத் தாலும் விடேன்[101]" எனத்
தாயின்மேல் தந்தைமேல் ஆணையிட் டுரைத்தே
தமிழுணர் வதனைக் குமிழாய்ப் பதித்தார்.

"சாதி ஒழித்திடல் ஒன்று; நல்ல
தமிழ்வளர்த் தல்மற் றொன்று;
பாதியை நாடு மறந்தால், மற்றைப்
பாதி துலங்குவ தில்லை[102]" என்றே
பாரதி பாதை கூர்அதி கத்துடன்
பாரதி தாசனாய்ப் பகுத்தறி வாளனாய்க்
கொள்கை முரசைக் கொட்டி முழக்கினார்.

"கோரிக்கை அற்றுக் கிடக்கு தண்ணே
வேரிற் பழுத்தபலா"[103] என்றே
பெண்ணுல குரிமை கண்ணெனப் பாடினார்.

"வலியோர்சிலர் எளியோர்தமை
வதையேபுரி குவதா?"
'கொலைவாளினை எடடாமிகு

கொடியோர்செயல் அறவே!
குகைவாழ் ஒரு புலியேஉயர்
குணமேவிய தமிழா"[104] எனத்
தோள்தின வெடுக்க வாள்முனைக் கவிதை
வடித்தார்; படித்தோர் துடித்துணர் வேறினர்.

இவர்தம் கவிதை:
மின்னல் கீற்றில் பின்னிய சாட்டை;
முல்லைக் காட்டில் முகிழ்த்த தென்றல்;
மானம் பாடும் வானம் பாடி;
முட்டும் சாதியைக் கொட்டும் குளவி;
நெஞ்சம் இனிக்கும் செஞ்சொற் கட்டி;
மதச்சாத் திரத்தின் புதைகுழிக் கருவி;
சொல்லைத் தேனாய்ச் சுரக்கும் சுரபி;
கடவுட் போர்வையைக் குடையும் நெடுவேல்;
பகுத்தறி வதற்குத் தொகுத்தகல் வெட்டு

இவர்தம் எழுத்தோ!
எழுத்தெனச் சொல்வதோ? அன்ற ஃதன்று;
பழுத்த தமிழ்க்கடல் பயந்தநன் முத்தாம்;

சொற்களா இவைகள்? சுளைகளின் சாரி.
கருத்து, வில்லின் சிறுத்தைக் கணைகள்;
கவிதைக ளாஇவை? கனிச்சாற் றருவி.

நூல்களா அவைகள்? நூல்இழை யாகி
நெஞ்ச ஊசியில் கொஞ்சுகா தலிகள்;
புத்தகம் என்பதோ? புகுந்த அகத்தில்
சித்திரை நிலவின் முத்தமுத் திரைகள்.

அவர்தமிழ் அடடா! 'அழகின் சிரிப்பு';
'இருண்ட வீட்டின் 'குடும்ப விளக்கு';
காதலில் 'எதிர்பா ராத முத்தம்';
பைந்தமிழ் பெற்ற 'பாண்டியன் பரிசு';
'இசையமு' தளிக்கும் 'இசைத்தே னருவி';
தமிழுரை ஏற்றும் 'தமிழியக் கத்தேர்';
அறிவுக் கடல்சூழ் 'குறிஞ்சித் திட்டு';
ஆற்றல் மறவரின் 'ஏற்றப் பாட்டு'
நறும்பூஞ் சோலையின் கருங்'குயில் பாட்டு';
ஏதம் போக்கும் காதல் 'நினைவுகள்';

காதலா கடமையா?'-'நல்ல தீர்ப்பு';
கற்பா? 'கண்ணகி புரட்சிக் காப்பியம்';
தோகையர் வனப்பில் 'மேகலை வெண்பா';
உரைநடை, நாடகம் கரையிலாக் கற்பனை;
அள்ளித் தந்தார் கொள்ளைச் சுவையில்.

இவர்பா ஆட்சியால்
"பாவேந்தர்" என்றே பாரேந்தி நிற்கும்;
யாரேந்தி னாலும் சீரேந்தி வாழ்வர்.

இவர்தம் பாவினில்
புலியும் குயிலும் புகுந்துவிளை யாடும்;
புலியின் பாய்வால் புரட்சிப் பாவலர்;
குயிலிசைக் குளுமையால் தென்றற் கவிஞர்;
ஆண்மையின் அடலும், பெண்மையின் மெருகும்
மாண்பமை பாரதி தாசனார்
பூண்தமிழ்க் காக்கிய புரட்சித் தென்றலே.

633

[இணைக்குறள் ஆசிரியப்பா]

## 81. வாழ்க! வாழ்க!!

உளந்தோய்ந்த காதல் வாழ்க!
உணர்வார்ந்த உரைகள் வாழ்க!
வளந்தோய்ந்த குடும்பம் வாழ்க!
வனப்பேந்துங் குழந்தை வாழ்க!
களந்தோய்ந்த உழவு வாழ்க!
கவின்தோய்ந்தே உழைப்போர் வாழ்க!
புலந்தோய்ந்த அறிஞர் வாழ்க!
பொதுஉடைமை பூத்து வாழ்க! 634

தன்மானம் தளிர்த்து வாழ்க!
தாய்மொழிச்சீர் தழைத்து வாழ்க!
பொன்*மானும் பெண்மை வாழ்க!
பொலிஆண்மை வலிவில் வாழ்க!
பெண்மானம் போற்றி வாழ்க!
பெருமானம் புகழாய் வாழ்க!
கண்மானும் கல்வி வாழ்க!
கவின்பேணும் கலைகள் வாழ்க 635

---

* மானும் - போலும்

உயர்நிலையில் தமிழர் வாழ்க!
　　உளமெல்லாம் தமிழாய் வாழ்க!
உயிர்நிலையில் பண்பு வாழ்க!
　　உயர்ந்தவர்கள் உதவி வாழ்க
பயிர்நிலையில் பயில்வோர் வாழ்க!
　　பகுத்தறிவில் படிப்பு வாழ்க !
துயர்போக்கும் அமைதி வாழ்க!
　　தூய்மையிலே உலகம் வாழ்க!

636

தமையளக்கும் தகுதி வாழ்க!
　　தகுதியுள தலைவர் வாழ்க!
அமைபணியின் திறலோர் வாழ்க!
　　அறிவியல்தேர்ந் தாய்வோர் வாழ்க!
இமைநொடியுந் தளரார் வாழ்க!
　　இயல்தொண்டில் இசைவோர் வாழ்க!
தமைநாட்டில் வைத்தோர் வாழ்க!
　　தருக்கற்ற செல்வர் வாழ்க!

637

தொழில்பெருகித் துலங்கி வாழ்க!
தொன்மைநலம் விளங்கி வாழ்க!
எழில்மகளிர் கற்பில் வாழ்க!
ஏறுகளாய் இளைஞர் வாழ்க!
பொழில்போலும் சான்றோர் வாழ்க!
புகழ்வேட்டை ஆடார் வாழ்க!
மொழிக்கொலைகள் செய்யார் வாழ்க!
மொத்தத்தில் நல்லோர் வாழ்க!

638

ஆள்வோர்செங் கோலில் வாழ்க!
ஆட்பட்டோர் உரிமை வாழ்க!
சூழ்செயலில் நேர்மை வாழ்க!
சூரர்களாய் எளியோர் வாழ்க!
பாழ்சாதி ஒழிய வாழ்க!
பாட்டுலகம் பணைத்து வாழ்க!
வாழ்வாங்கில் உலகோர் வாழ்க!
வாழ்கதமிழ்! வாழ்க! வாழ்க!

639

[அறுசீர்
ஆசிரிய விருத்தங்கள்]

# கோவை. இளஞ்சேரன் கவிதைகள்

கலைக்குழல்
வெளியீடு

## இணைப்பு

இணைந்தவை:

1. இடம் சுட்டல்
2. பொருள் அகர நிரல்
3. 'கவிஞர்கோ'
   வரலாற்றுக் குறிப்பு
4. சுவைத் தொடர்கள்
5. சுடர்ச் சொற்கள்
6. பிழை-திருத்தம்

இணைப்பு 1

# இடம் சுட்டல்

| | |
|---|---|
| பாடலில் குறித்த குறியீட்டெண் | இடம், பிற |

1. இது பகுதித் தலைப்பின் முகப்பு. பகுதித் தலைப்புகள் பத்து. அவை திருக்குறள் தொடர்கள். அத்தொடர்கள் அமைந்த குறள்களின் கருத்துகள் இரண்டிரண்டு வஞ்சித் துறைகளால் விளக்கம் பெற்றுள்ளன. நிறைவாக அக்குறள்கள் காட்டப்பெற்றுள்ளன.

2. 'மலரேஅதன்' - 'தோய்ந்தோர்அதன்' - இவ்வாறு படிப்போர்க்கு எளிதாகலாம் எனக் கருதப்பட்ட இடங்களில் உயிர் எழுத்துக்கள் பிரிக்கப்பெற்றுள்ளன.

3. 'கண்ணல்ல' –பாவேந்தர் பாரதிதாசனார் கவிவழித் தோன்றல் வரிசையில் அறிமுகமானது. 'பொன்னி இதழ் - 1950.

4. திருக்குறள்: 1191

5, 6. திருமணம் நிகழ்ந்த திங்களில் மலர்ந்தவை.

7. திருக்குறள் இரண்டின் விளக்கம்.

8, 9. திருக்குறள்: 1127; 1128.

10. முதல் மகன் செல்வன் கலைவாணன் பிறந்த இரவில் பிறந்தது.

11. புறநானூறு: 74 - சேரமான் கணைக்கால் இரும்பொறையின் தன்மானப் பாடற் கருத்து.

12. தனிச்செய்யுட் சிந்தாமணி முதற்பாகம்: பக்கம் 95:

பாடல் 102; மு. ரா. கந்தசாமிக்கவிராயர் தொகுப்பு—1908

13. நாலடியார்: 316

14, 15. திருக்குறள்: 469; 996.

16. கலித்தொகை: 133: 8.

17,18,19. திருக்குறள் 997; 874; 45.

20. இதழில் முதன்முதலில் வெளிவந்தது. 'சனசக்தி-1946.

'கோவை. 'இளஞ்சேரன்' புனைபெயர் முதல் அறிமுகம்.

21. இந்திய விடுதலை நாளை அறிஞர் பெருந்தகை அண்ணா ஏற்று அறிவித்தபோது எழுந்தது. 'திராவிட நாடு' 21—9—1942.

22. சீனப் படையெடுப்பு இந்திய வெற்றியில் எழுந்தது. 'செந்தமிழ்ச் செல்வி'-போர் வெற்றி முரசு மலர்.

23. 'வாழ்வில் ஒரு மணி' என்னும் மணிவிழா மலர்ப் பதிவு-1983.

24. முருகனுக்கு சு—நல்ல, பிரமணியன்—பிராமண்ன் என வடமொழிப் பெயர் சூட்டினர்.

25. திருக்குறள்: 618.

26, 27. ஆசாரக்கோவை: 19.

28. திருக்குறள்: 1110

29. " : 140

30. " : 245

31. பெரிய புராணம்: பாயிரம் 9: 3

32. நெடுநல்வாடை: 2

